


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 192 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 10 – வியாழக்கிழமை 22 பிப்ரவரி 2024 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 192 : Thiruvalluvar Year - 2055 - Maasi 10 - Thursday 22 February 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


## ரூ.16,500 கோடியில் பயிர்க்கடன்! இயற்கை வள மேம்பாட்டுக்கு ரூ.7,000 கோடி!

## 15,280 கிராமங்களில் ‘ஒரு கிராமம் ஒரு பயிர்’ திட்டம்! உணவு மானியத்திற்கு ரூ.10,500 கோடி! ரூ.1,775 கோடியில் பயிர்க் காப்பீடு!

# வேளாண் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதே நோக்கம்!

## பேரவையில் ரூ.42,281.88 கோடியிலான வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உறுதி!

**சென்னை, பிப். 22 -**

**தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் 2024 - 2025ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையை வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தாக்கல் செய்து பேசினார். அவர் தனது பேச்சில், “வேளாண் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதே தமிழ்நாடு அரசின் நோக்கம்” என்று குறிப்பிட்டு, அடுக்கடுக்கான பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்.**

வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்**
**(திருக்குறள்-1033 )**

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.

மற்ற சமூகங்கள் உழவர்களையும் உழைப்பாளர்களையும் சமூக நிலையில் கடைசி இடத்தில் வைத்திருக்கும்போது, நம் தமிழ்ச் சமூகம் உழவர்களை உச்சத்தில் வைத்து உச்சி முகர்ந்ததையும், ‘உண்டி கொடுத்தோரை உயிர் கொடுத்தோராகப்’ போற்றியதையும் நம் தமிழ் இலக்கியங்கள் தெள்ளெனக் காட்டுகின்றன. இதனை ஒட்டியே, இந்த அரசும் உழவர்களை உச்சத்தில் வைத்து, வேளாண்மைக்கெனத் தனி நிதி நிலை அறிக்கையினைத் தயார் செய்து சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. உழவர்கள் வாழ்வு வளம்பெற வேண்டும் என்ற நோக்கோடு செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, இத்துறையின் 2024-2025ஆம் ஆண்டிற்கான தனி வேளாண் நிதிநிலை அறிக்கையினை இம்மாமன்றத்தில் அளிப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

முதன்முறையாக ஒன்றை உருவாக்குவது கடினம்; அதை வளர்ந்திடச் செய்வது எளிது; பாதை அமைப்பது கடினம்; பயணம் செய்வது எளிது. நாங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத வேளாண்மை நிதி நிலை அறிக்கையை உருவாக்கி அளித்து, எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையானது உழவர்தம் வாழ்க்கையை மேன்மேலும் வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று உறுதியாக நம்புகிறேன்.

**“மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை**
**ஆழி தரித்தே அருளும்கை சூழ்வினையை**
**நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடூழி**
**காக்கும்கை காராளர் கை”**

ஏர்ப்பிடித்து உழவு செய்யும் உழவரின் கைகளே, மக்களின் பசிப்பிணியைப் போக்கி நீடூழி வாழ வைக்கும் கைகள் என்று கம்பர் உழவுத் தொழிலை மிகவும் உயர்த்தி “**திருக்கை வழக்கம்**” என்ற நூலில் சிறப்பிக்கிறார்.

முழுமுதல் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில், வேளாண்மை பற்றியும், அதன் நுட்பங்கள் பற்றியும் விளக்கியுள்ளார் இளங்கோவடிகள். மன்னராட்சியும், மக்கள் பண்பாடும் நிலைக்க வேண்டுமாயின், அந்நாடு வேளாண்மையில் சிறப்புற விளங்க வேண்டும். மன்னனும், மக்களும் உழவர்களை எதிர்நோக்கியே வாழ்கிறார்கள் என்பதனை,



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 2024–2025ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா உள்ளார்.

**“இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்**
**உழவிடை விளைப்போர்”**
**(சிலப்பதிகாரம் - நாடுகாண்காதை 150)**

என்று குறிப்பிடுகிறார்.

இதைத்தான், அமெரிக்காவின் முதல் அதிபரான ஜார்ஜ் வாஷிங்டன் அவர்களும், “மனிதன் ஆற்றக்கூடிய தொழில்களிலேயே மிகவும் நலமிக்கதும், பயனுள்ளதும், உன்னதமானதுமான தொழில் வேளாண்மையாகும்” (Agriculture is the most healthful, most useful and most noble employment of man) என்று வழிமொழிகிறார்.

அல்லும் பகலும், அயராது உழைத்து, உலகோரின் அச்சாணியாகத் திகழும் மேன்மையுடைய, வேளாண் பெருங்குடி மக்களைப் போற்றும் விதமாக, வேளாண்மை கடந்துவந்த பாதைகளை இம்மாமன்றத்தில் பகிர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நமது வரலாற்று ஆவணங்களில் விலங்குகளை வேட்டையாடுதல், கால்நடைகளை வளர்த்தல் ஆகியவற்றைக் கற்கால மனிதர்கள் மேற்கொண்டதற்கான தகவல்களோடு “**மெய்திரி வகையின் எண்வகை உணவில் செய்தியும் வரையார்**” என்று தொல்காப்பியர் கூறியுள்ளதிலிருந்து நெல், புல்லரிசி, காடைக்கண்ணி (சிறுதானியம்), உளுந்து, அவரை போன்றவற்றைப் பயிரிட்டுள்ளதற்கான ஆதாரங்கள், ஆய்வாளர்களின் ஆய்வுக் குறிப்புகளிலிருந்து காணமுடிகின்றது. பின்னர், பட்டறிவாலும், படிப்பறிவாலும் பயிர் வளர்ப்பு தொடர்பான நுணுக்கங்கள் பெறப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது.

மேலும், நம் முன்னோர்கள் பயிர் செய்வதும், உணவு உண்பதும் என்று மேலோட்டமான வாழ்வை வாழாது, ஒவ்வொரு செயலுக்கும் முக்கியத்துவம் அளித்து, ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்து, நுட்பமாகக் கண்டறிந்து, தங்களுடைய வேளாண் அறிவை வளர்த்துக் கொண்டிருப்பதை சங்க இலக்கியங்கள் மூலம் மிக எளிதாக நாம் உணரலாம்.

உணவு உற்பத்தியின் உன்னதத்தை உலகப் புகழ்பெற்ற பசுமைப்புரட்சி விஞ்ஞானி **பாரத ரத்னா எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், “எதிர்காலம் தானியங்களை அதிகம் கொண்ட நாடுகளுக்கு உரியதே தவிர, துப்பாக்கிகளை அதிகம் கொண்ட நாடுகளுக்கு அல்ல”** (The future belongs to nations with grains and not guns) என்று தெரிவித்துள்ளார்.

வேளாண் பெருங்குடி மக்கள், தங்களின் உழைப்பிற்கேற்ற பலன்களைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தில், வேளாண்மையை வருமானம் ஈட்டக்கூடிய தொழிலாக மாற்றி, உழவர்களின் நலனைப் பேணிக்காக்க நேசக்கரத்துடன் பல உன்னதத் திட்டங்களை வழங்கி, நடைமுறைப்படுத்தி வருபவர் நமது **தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.**

வேளாண்மைத் துறையை, “**வேளாண்மை - உழவர் நலத்துறை**” எனப் பெயர் மாற்றம் செய்து, வேளாண் உற்பத்தியுடன் நின்று விடாமல், உழவர் பெருமக்களின் நலனிற்கு முக்கியத்துவம் அளித்தவரும் நம்முடைய **தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான்.**

### வேளாண் தொழிலில் சவால்களை எதிர்கொண்டு வரும் விதம்!

வேளாண்மையில் தற்போதுள்ள சவால்களைச் சாதனைகளாக மாற்றி, அதன் மூலம் விவசாயிகளின் நலனைப் பேணிக் காத்திட, பல அரிய திட்டங்கள் வேளாண்மைஉழவர் நலத்துறையால் கடந்த மூன்று ஆண்டுகளில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேளாண்மைக்கான தொலை நோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் காரணமாக 2020-2021இல் 152 இலட்சம் ஏக்கராக இருந்த மொத்த சாகுபடி பரப்பு, 2022-2023ஆம் ஆண்டில் 155 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது.




அரசால் செயல்படுத்தப்பட்ட சீர்மிகு திட்டங்களால், மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள், ஊக்கத்துடன் செய்திட்ட சாகுபடியால், 2022-2023ஆம் ஆண்டில் 116 இலட்சத்து 91 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உணவு தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் நிறைவேற்றப்படாமல் கிடப்பிலிருந்த பாசன மின் இணைப்பிற்கான விண்ணப்பங்கள், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, நடப்பாண்டிலும் மேலும் 50,000 மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வேளாண் தொழிலை மேற்கொள்ள இளைஞர்களிடம் ஆர்வம் ஏற்படுத்துவது மிகவும் அவசியம். இளைஞர்கள்தான், எந்த ஒரு நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கும் முதுகெலும்பாவர். வேளாண் சார்ந்த தொழில்களின் முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும் என்பதால், 2021-2022ஆம் ஆண்டு முதல் 268 வேளாண் பட்டதாரிகள் தேர்வு செய்யப்பட்டு தலா ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு, அக்ரி கிளினிக் உள்ளிட்ட வேளாண் சார்ந்த தொழில்களைத் தொடங்கி நடத்தி வேளாண்மைக்கு வலு சேர்த்து வருகின்றனர்.

வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட நம்முடைய அரசு பல்வேறு சீரிய முயற்சிகளை எடுத்துள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் குறைந்தபட்ச ஆதரவு விலைக்குமேல் சன்ன இரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 107 ரூபாயும், சாதாரண இரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 82 ரூபாயும் ஊக்கத் தொகையாக அளிக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு, 45 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பயறுவகைகள், கொப்பரைத் தேங்காய் ஆகியவையும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதால் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்படுகின்றனர்.

கடந்த ஆண்டு, கரும்பிற்கு ஒரு மெட்ரிக் டன்னிற்கு ஊக்கத்தொகையாக 195 ரூபாய் வீதம் 260 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட ஏதுவாக உழவர் சந்தைகள், மின்னணு சந்தைகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஆகியவை செயல்படுகின்றன. இதனால், வேளாண் பெருங்குடி மக்களின் விளைபொருட்களுக்கு நல்ல விலை அளிக்கப்பட்டு, அவர்களுக்கான வாய்ப்புகள் மேன்மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிர் சாகுபடியில், இடுபொருட்களுக்கான செலவினத்தைவிட, வேளாண் பணிகளுக்கான ஊதியம் தற்போது அதிகமாக உள்ளது. இதனை எதிர்கொள்ள, வேளாண் பணிகளுக்குத் தேவையான அனைத்து வகையான வேளாண் இயந்திரங்களும், கருவிகளும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், வேளாண் இயந்திர வாடகை மையங்கள் மூலமாக வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வாடகைக்குப் பெற்றுப் பயனடையும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 22-02-2024

# தாயுமானவரான தமிழ்ப்புதல்வன்

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்பதை தனது ஆட்சியின் இலக்காகவும் இலக்கணமாகவும் கொண்டு செயல்பட்டு வரும் திராவிட மாடல் முதலமைச்சரின் 2024-25 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை என்பது, **‘அனைவருக்குமான அறிக்கை’**யாக அமைந்திருக்கிறது.

‘என்ன இல்லை இதில்?’ என்று சொல்லத் தக்கதாக அமைந்துள்ளது. ‘எந்தத் துறை இல்லை இதில்?’ என்று கேட்கத் தக்கதாக அமைந்துள்ளது. ‘எந்த தரப்பு தான் இல்லை இதில்?’ என்ற கேள்விக்கான முழுமையான பதிலாக அமைந்துள்ளது இந்த அறிக்கை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல, **‘இந்த நிதி நிலை அறிக்கையில் எங்கள் இதயம் இருக்கிறது’** என்று சொல்லத் தக்க வகையில் 2024-25 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை தயாரித்து நேற்றைய தினம் சட்டமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் நிதித் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள்.

- **குடிசை இல்லாத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக 6 ஆண்டுகளில் 8 லட்சம் வீடுகள் கட்டும் கலைஞரின் கனவு இல்லம்.**
- **வறுமை இல்லாத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக 5 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கும் தாயுமானவர் திட்டம்.**
- **அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு 1000 ரூபாய் வழங்கும் தமிழ்ப்புதல்வன்.**
- **ஒரு லட்சம் கல்லூரி மாணவர்க்கு கல்விக் கடன்.**
- **வடசென்னையின் மேம்பாட்டுக்கு 1000 கோடி.**
- **பழங்குடியினர் வாழ்விட மேம்பாட்டுக்கு 1000 கோடி.**
- **மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 35 ஆயிரம் கோடி கடன்.**
- **7.5 சதவிகித உள் ஒதுக்கீட்டில் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கான முழுச் செலவையும் அரசே ஏற்கும்.**
- **அடுத்த இரண்டு ஆண்டுகளில் 50 ஆயிரம் பேருக்கு அரசுப் பணிகள்.**
- **20 கோடியில் கைவினைஞர்கள் மேம்பாட்டுத் திட்டம்**
- **1000 ஆண்டு பழமையான கோவில்கள் புதுப்பிப்பு**
- **ஆதி திராவிட இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் கடன் திட்டம்.**
- **அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்**
- **கடலோர வளங்கள் மீட்பு**
- **கடற்கரைகள் மேம்பாடு.**

இப்படி அனைத்து வகையினரையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது நிதி நிலை அறிக்கை.

**அனைத்து ஊர்களுக்கும் நகரங்களுக்கும் உள்ளடக்கியதாக இந்த அறிக்கை அமைந்துள்ளது. திண்டுக்கல், நாமக்கல், பெரம்பலூர் மாவட்டங்களில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள். கோவையில் தகவல் தொழில்நுட்ப பூங்கா, வடசென்னைக்கு வளர்ச்சி திட்டங்கள். சென்னை பிராட்வே பேருந்து நிலையம். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே நகர்ப்புற சதுக்கம். பூவிருந்தவல்லியில் திரைப்பட நகரம். சென்னையில் ஆட்டிசம் பாதிக்கப்பட்டோருக்கான மையம். கீழடியில் அருங்காட்சியகம். கோவையில் நூலகம், அறிவியல் மையம். தூத்துக்குடியில் விண்வெளி தொழில், உந்து சக்தி பூங்கா. கோவை,மதுரை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி ஆகிய நகரங்களில் ஆயத்த தொழில் பூங்காக்கள். முட்டுக்காட்டில் கலைஞர் பன்னாட்டு அரங்கம். கரூர், ஈரோடு, விருதுநகரில் சிறு ஜவுளி பூங்காக்கள். சென்னையில் கைவினைப் பொருட்கள் வணிக வளாகம். திருப்பரங்குன்றம், திருநீர்மலை கோவில்களில் ரோப் கார்கள். மெரினா, கடலூர், மரக்காணம், காமேஸ்வரம், கட்டுமாவடி, அரியமான், காயல் பட்டினம், கோடாவிளை கடற்கரைகள் மேம்பாடு. சென்னை மெட்ரோ ரயிலுக்கு 12 ஆயிரம் கோடி ஒதுக்கீடு.கல்லணைக் கால்வாய் மேம்பாடு. தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடியில் நியோ டைடல் பூங்காக்கள். மதுரை, திருச்சியில் டைடல் பூங்காக்கள். தஞ்சையில் சிப்காட் தொழில் பூங்கா. இப்படி தமிழ்நாட்டின் அனைத்து ஊர்களையும் உள்ளடக்கியதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது.**

தமிழ்நாட்டை எந்த நிலைமையில் அ.தி.மு.க. ஆட்சி வைத்து விட்டுப் போனது என்பதை அனைவரும் அறிவார்கள். கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படி நடத்துகிறது என்பதையும் மக்கள் அனைவரும் அறிவார்கள். நிதியைச் சூறையாடி விட்டுப் போனது அ.தி.மு.க. நிதி மூலதன வருவாய் பாதையை அடைத்து விட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இத்தகைய நெருக்கடி நிலையில்தான் இத்தகைய மேன்மையான நிதிநிலை அறிக்கை வெளியாகி இருக்கிறது.

நிதி இல்லை நிதி வரவில்லை என்ற ‘பஞ்சப் பாட்டை’ பாடிக் கொண்டு இருக்காமல், நெஞ்சுயர்த்தி நிற்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். நம்முடைய வளங்களின் மூலமாக, அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் திறன்களின் மூலமாக எல்லார்க்குமான நிதிநிலை அறிக்கையை தயாரித்து வழங்கி விட்டார் நிதித் துறை அமைச்சர் அவர்கள்.

**சமூகநீதி கடைக்கோடி மனிதருக்கும் நல வாழ்வு உலகை வெல்லும் இளைய தமிழகம் அறிவுசார் பொருளாதாரம் சமத்துவ நோக்கில் மகளிர் நலம் பசுமை வழிப் பயணம் தாய்த் தமிழும் தமிழர் பண்பாடும்** ஆகிய ஏழு இலக்குகளைக் கொண்டதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. இலக்கு, செயலைத் தீர்மானிக்கும். இலக்கு, பயணத்தை தீர்மானிக்கும். இலக்கு, அதற்குத் தேவையானதை தகவமைத்துக் கொள்ளும். அந்த வகையில் இந்த ஏழு இலக்குகளும், அதற்குத் தேவையானதை தகவமைத்துக் கொள்ளும் வகையில் இந்த அறிக்கை அமைந்துள்ளது.

‘செய்க பொருளை’ என்கிறான் வள்ளுவன்.

**செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**

**எஃகதனிற் கூரிய தில்** என்கிறார் வள்ளுவர். பகைவரின் செருக்கை அழிக்கும் தகுதியான கருவி பொருள்தான் என்கிறார் அறம் பாடிய வள்ளுவர். **தாயுமானவராய் மாறிய தமிழ்ப்புதல்வன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனைத் தான் தமிழ்நாட்டு மக்களுக்கு அரசு இயலாக மாற்றிச் செய்து வருகிறார்.**

## ஆம்புலன்சுக்கு வழிவிடாவிட்டால்

## ரூ.10 ஆயிரம் அபராதம்!

சண்டிகர்,பிப்.22-

அரியானா மாநிலம், குருகிராம் நகரில் ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வாகனங்களுக்குவழிவிடாமல்இடையூறு செய்பவர்களுக்கு ரூ. 10,000 அபராதம் விதிக்கப்படும் என்று போக்குவரத்து துணை ஆணையர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து போக்குவரத்து துணை ஆணையர் விரேந்தர் விஜி கூறியதாவது:-

“மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 194இ கீழ் ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் உள்ளிட்ட அவசர வாகனங்களுக்கு வழிவிடாமல் இடையூறு செய்பவர்களுக்கு ரூ. 10,000 அபராதம் அல்லது 6 மாதம் சிறை அல்லது இரண்டும் விதிக்கப்படும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 2024–2025ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா உள்ளார்.

### சண்டிகர் மேயர் தேர்தலில் பா.ஜ.க. தகிடுதத்தங்களுக்கு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு

# நீதிக்கும், சட்டத்திற்கும் ஒளிவிளக்கு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு!

**சென்னை, பிப். 22-**

**சண்டிகர் மேயர் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக, செயல்பட்ட தேர்தல் அதிகாரியின் தில்லுமுல்லுச் செயலை நிராகரித்து உச்சநீதிமன்றம் அளித்துள்ள உத்தரவு நீதிக்கும், சட்டத்திற்கும் ஒளிவிளக்காக அமைந்துள்ளது என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து நேற்று முன்தினம் (20.02.2024), திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :-

**சண்டிகர் மேயர் தேர்தல் வழக்கில் மாண்பமை உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பானது நீதிக்கும் இம்மண்ணின் சட்டத்துக்குமான ஒளிவிளக்காக அமைந்துள்ளது.**

**அரசியல் சட்டப்பிரிவு 142-இன்கீழ் தனக்குள்ள அரிதினும் அரிதான அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ள உச்சநீதிமன்றம், நியாயத்தை நிலைநாட்டியுள்ளதுடன் தேர்தல் அதிகாரியின் தில்லுமுல்லுச்செயலையும் உறுதியாக நிராகரித்துள்ளது.**

**2024 நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், நேர்மைக்கும் மக்களாட்சித் தத்துவங்களுக்குமான இந்த வெற்றி இந்திய ஜனநாயகத்தின் வலுவான செய்தியை எடுத்துரைப்பதோடு, பா.ஜ.க.வின் தகிடுதத்தங்களுக்குத் தக்க எச்சரிக்கையையும் விடுத்துள்ளது.”**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### பா.ஜ.க.வுக்கு ஆதரவாகச் செயல்பட்ட தேர்தல் அதிகாரி தில்லு முல்லு - குற்றவாளி!

# சண்டிகர் மேயர் தேர்தலில் ஆம் ஆத்மி வேட்பாளர் வெற்றி!

## உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

புதுடெல்லி, பிப்.22-

உச்ச நீதிமன்றத்தின் அதிரடி உத்தரவின் எதிரொலியாக, சண்டிகர் மேயர் தேர்தலில் இண்டியா கூட்டணியின் ஆம் ஆத்மி வேட்பாளர் குல்தீப் குமார் வெற்றி பெற்றதாக சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

சண்டிகர் மாநகராட்சிக்கு கடந்த மாதம் மேயர் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் இண்டியா கூட்டணி சார்பில் குல்தீப் குமாரும், பா.ஜ.க. சார்பில் மனோஜ் சோன்கரும் போட்டியிட்டனர். இந்த மேயர் தேர்தலில் மொத்தம் 36 கவுன்சிலர்கள் வாக்களித்தனர். பா.ஜ.க.வுக்கு 16 வாக்குகள் கிடைத்தன. இண்டியா கூட்டணிக்கு 20 வாக்குகள் கிடைத்தன. இருப்பினும், இண்டியா கூட்டணி வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளில் 8 வாக்குகள் செல்லாத வாக்குகளாக அறிவிக்கப்பட்டன. அதனால், பா.ஜ.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக தேர்தல் நடத்தும் அதிகாரி தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக, சண்டிகர் மேயர் தேர்தல் முடிவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு முன்பு நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் நீதிமன்றம் சரமாரியாக கேள்வி எழுப்பியது. குறிப்பாக, சண்டிகர் மேயர் தேர்தல் வாக்குச் சீட்டுகளில் ‘எக்ஸ்’ குறியிட்டது ஏன் என்று தேர்தல் நடத்திய அதிகாரியிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

தேர்தல் அதிகாரி ஒருவர் நாட்டின் தலைமை நீதிபதியால் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது முதன்முறை என்பதால் இந்த வழக்கு தேசிய கவனம் பெற்றது. இந்நிலையில், நேற்று (பிப்.20) மீண்டும் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது செல்லாததாக அறிவிக்கப்பட்ட 8 வாக்குகளை செல்லும் வாக்குகளாகக் கருதி மீண்டும் அனைத்து வாக்குகளையும் எண்ணி, அதன் அடிப்படையில் சண்டிகர் மேயர் தேர்தல் முடிவுகளை அறிவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, வாக்குகள் மீண்டும் எண்ணப்பட்டு இண்டியா கூட்டணி சார்பாக போட்டியிட்ட ஆம் ஆத்மி வேட்பாளர் குல்தீப் குமார் சண்டிகர் மேயர் தேர்தலில் வெற்றி பெற்றதாக சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டது. முந்தைய முடிவு ரத்து செய்யப்படுவதாக நீதிமன்றம் அறிவித்தது. மேலும், தேர்தல் நடத்தும் அதிகாரி 3 வாரங்களில் விளக்கமளிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நாடு முழுவதும் சலசலப்பை ஏற்படுத்திய சண்டிகர் மேயர் தேர்தல் சர்ச்சை உச்ச நீதிமன்ற தலையீட்டால் முடிவுக்கு வந்தது.

தேர்தல் அதிகாரி குற்றவாளி: இன்றைய வழக்கின் விசாரணையின்போது செல்லாத வாக்குகளாக அறிவிக்கப்பட்டவை மீண்டும் நீதிபதிகள் முன்னிலையில் எண்ணப்பட்டது. அப்போது தேர்தல் அதிகாரி அனில் மசிக்கை குறிப்பிட்ட தலைமை நீதிபதி “மிஸ்டர். மசிக் சேதப்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டு என்பதால் பேனாவை வைத்துக் குறியிட்டதாக நேற்று கூறினீர்கள். எங்கே இந்த வாக்குச் சீட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது?” என்று கேட்டபோது பதில் எதுவும் கூறாத மசிக், வாக்குச்சீட்டை தனது வழக்கறிஞருடன் பார்க்கிறார்.

அப்போது மனுதாரர் தரப்பில் வாதிட்டவர்கள், “எந்த வாக்குச் சீட்டுகளும் செல்லாதவை அல்ல. அனில் மசிக் நீதிமன்றத்திலேயே பொய் கூறியுள்ளார். அவர் குற்றவாளி. அவர்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கூறினர்.

பின்னர் பேசிய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, “8 வாக்குச்சீட்டிலும் மனுதாரருக்கு (ஆம் ஆத்மி வேட்பாளருக்கு) ஆதரவாக வாக்குகள் விழுந்துள்ளது தெரிகிறது. ஆனால், வாக்குச்சீட்டை செல்லாததாகக் கருதும் நோக்கத்திற்காக தேர்தல் அதிகாரி, பேனாவால் அதில் அடையாளம் வைத்துள்ளார். இதன் மூலம் தேர்தல் அதிகாரி சட்ட விதிகளை மீறியுள்ளார். மனுதாரருக்கு ஆதரவாக போடப்பட்ட 8 வாக்குகளை தேர்தல் அதிகாரி திட்டமிட்டு செயலிழக்க முயற்சித்துள்ளார் என்பது தெளிவாகிறது.

8 வாக்குச் சீட்டுகளும் சிதைக்கப்பட்டதால்தான் பேனாவால் குறியிட்டதாக தேர்தல் அதிகாரி நேற்று நீதிமன்றத்தில் ஆணித்தரமாக அறிக்கை அளித்தார். ஆனால் வாக்குச் சீட்டுகள் எதுவும் சிதைக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. எனவே, சண்டிகர் மேயர் தேர்தலில் முறைகேடு செய்து பாஜக வேட்பாளரை வெற்றி பெறச் செய்த தேர்தல் அதிகாரி அனில் மசிக் குற்றவாளி. அவர் மீது வழக்குப் பதிய வேண்டும்” என்று உத்தரவிட்டனர்.

### குஜராத் மாநிலம் - அகமதாபாத்தில் தீயணைப்புத் துறை விளையாட்டுப் போட்டிகள்!

# தமிழ்நாட்டிற்கு 17 பதக்கங்கள்! வென்றோருக்கு - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு!

## நேரில் அழைத்து வாழ்த்துக் கூறி பெருமைப்படுத்தினார்!

**சென்னை, பிப்.22-**

**அகில இந்திய தீயணைப்பு சேவை விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் இந்திய அரசு உள்துறை அமைச்சகக் கட்டுப்பாட்டால் ஏற்பாடு செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான தீயணைப்புத் துறை விளையாட்டுப் போட்டிகள் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் 01-02-2024 முதல் 04-02-2024 முடிய நடைபெற்றது.**

இந்த விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பாக இணை இயக்குனர் முனைவர் மீனாட்சி விஜயகுமார் தலைமையிலான 29 நபர்கள் அடங்கிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் துறை விளையாட்டுப் போட்டிகள் தடகளம், மல்யுத்தம், கபடி, பூப்பந்து, Toughest Fire Fighter, Fire Tender Drill உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளில் சுமார் 29 மாநிலங்களில் உள்ள அணிகள் பங்கு பெற்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சிறப்பாக விளையாடி தமிழ்நாட்டிற்கு 7 தங்கம் 9 வெள்ளி 1 வெண்கலம் உட்பட மொத்தம் 17 பதக்கங்களை வென்று வந்துள்ளனர்.

மேலும் கபடிப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளனர்.

இந்திய அளவில் நடைபெற்ற போட்டிகளில் சிறப்பாக விளையாடி பதக்கங்களை வென்ற வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் அழைத்து வாழ்த்துக் கூறி பெருமைப்படுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் தீயணைப்பு மீட்புப் பணித்துறை இயக்குநர் ஆபாஷ் குமார் உடன் இருந்தார்.

இவ்வாறு - அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அகில இந்திய தீயணைப்புத்துறை சார்பில் குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் 01.02.2024 முதல் 04.02.2024 வரை நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினர் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி 7 தங்கம், 9 வெள்ளி மற்றும் 1 வெண்கலம் என 17 பதக்கங்களை வென்ற வீரர்களை நேற்று முன்தினம் (20.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்து கொண்டார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் ஆபாஷ் குமார் மற்றும் இணை இயக்குநர் திருமதி மீனாட்சி விஜயகுமார் ஆகியோர் உள்ளனர்.

# கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் திட்டத்திற்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு!

## வேளாண் நிதி நிலை அறிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி

விளைபொருட்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைத் தடுத்திட ஏதுவாக, இந்த அரசு, புதிய குளிரூட்டப்பட்ட கிடங்குகள், தானிய சேமிப்புக் கிடங்குகள், உலர்களங்கள் உள்ளிட்ட வசதிகளை அமைத்துக் கொடுக்கும் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### கடந்த மூன்று ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கை ஒரு பார்வை!

கடந்த மூன்று ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களும் சரிவரச் செயல்படுத்தப்பட்டு, எதிர்பார்த்த பலன்களைத் தந்துள்ளன. நீண்ட காலத் திட்டங்களுக்கான பணிகள் தகுந்த மேற்பார்வையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வேளாண்மை உழவர் நலத்துறைத் திட்டங்களோடு, உழவர் நலன் தொடர்புடைய பிற துறைத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளில் 7,705 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு, இதுவரை, 23,237 ஏக்கர் பரப்பளவில் வேளாண் பயிர்களும், 3,587 ஏக்கர் பரப்பளவில் பழமரக் கன்றுகள், மரங்கள் முதலியவையும் நடப்பட்டு, தரிசு நிலங்கள் நிரந்தர சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 1,202 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளுக்கு ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளதுடன், **1,564 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்பட்டு பாசனப் பரப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 4,773 குளங்கள், ஊருணிகள், வரத்துக்கால்வாய்கள் எல்லாம் இத்திட்டத்தின் மூலம் தூர்வாரப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.**




எளியோரையும் ஏற்றமடையச் செய்யவேண்டும் என்ற நோக்கில் ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், பசுமைக் குடில், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்ற உயர் மதிப்புத் திட்டங்களுக்கு 20 சதவீதம் கூடுதல் மானியம் வழங்கும் திட்டம் 2022-2023ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றதால், 2022-2023, 2023-2024ஆம் ஆண்டுகளில், அறிவிக்கப்பட்ட 17 கோடி ரூபாயை விடக் கூடுதலாக 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 4,980 ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள் பலனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் நீர் நிலைகளைத் தூர்வாரியும், புனரமைத்தும், சீரமைத்து, புதிய நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஏற்படுத்தி, மழை நீரை வீணாக்காமல் சேமித்து, நிலத்தடி நீரைச் செறிவூட்டியதால், நுண்ணீர்ப்பாசனம் போன்ற தொழில்நுட்பங்களைப் பரவலாக்கி, பாசன நீரின் பயன்பாட்டினை அதிகரித்ததால் **2020-2021ஆம் ஆண்டில் 89 இலட்சத்து ஆறாயிரம் ஏக்கராக இருந்த பாசனம் பெற்ற பயிர் பரப்பு, 2022-2023ஆம் ஆண்டில் 95 இலட்சத்து 39 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.**

கடந்த மூன்று ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கைகளானவை பாலன், மீளி, மறவோன், திறவோன் போன்று தவழ்ந்து, நடந்து, ஓடிவிளையாடி நம்மை மகிழ்வித்தன. இந்த நான்காம் வேளாண் நிதிநிலை அறிக்கையானது புதுத்தெம்பு கொண்டு பொலிவுடன் தாவிக் குதிக்கும் குழந்தையாக உள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாம் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளுக்கும் அரசாணை வெளியிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் பயன்கள் அனைத்தும் தொடர்ந்து உணரப்படுகின்றன. மேலும், 2024-2025ஆம் ஆண்டிற்கும் தகுந்த புதிய திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட உள்ளன.

### உழவர் நலன்!

பருவநிலை மாற்றத்தின் காரணமாக, தமிழ்நாட்டில் புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஆண்டுதோறும் நேரிட்டு பயிர் உற்பத்தியையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் வெகுவாகப் பாதிக்கின்றன.

இத்தகைய இயற்கை இடர்ப்பாடுகளினால் ஏற்படும் வருவாய் இழப்பிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்திட, 25 இலட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை, 4,436 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் விதைப்பு பொய்த்தல் இனத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட சம்பா நெற்பயிருக்கு 2022 - 2023, 2023-2024ஆம் ஆண்டுகளில் பயிர் இழப்பு ஏற்பட்ட அதே ஆண்டிலேயே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.



நேற்று முன்தினம் (20.2.2024) சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு அரசின் 2024–2025ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கான நிதிநிலை அறிக்கையை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டில், கடந்த 2022-2023ஆம் ஆண்டில், தென்மேற்குப் பருவமழை காலத்தில் பெய்த கனமழை, மாண்டஸ் புயல், வடகிழக்குப் பருவமழை காலத்தில் பெய்த கனமழை, பருவம் தவறிப் பெய்த மழை, வறட்சி, கடந்த மார்ச் 2023 இல் பெய்த ஆலங்கட்டி மழை ஆகிய இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பயிர்ச் சேதத்திற்கு, 380 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிவாரணத்தொகை, 4 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. குறுவைப் (காரீஃப்) பருவத்தில் ஏற்பட்ட மகசூல் இழப்பு, மிக்ஜாம் புயல், மக்காச்சோளப்பயிரில் ஏற்பட்ட மகசூல் இழப்பு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 85 ஆயிரம் விவசாயிகளுக்கு 118 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், கோடை மழை, தென்காசி மாவட்டத்தில் தென் மேற்குப் பருவ மழை காலத்தில் மழை குறைவால் ஏற்பட்ட மகசூல் இழப்பு, **தென் மாவட்டங்களில் 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட பெருமழை போன்ற இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு 208 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிவாரணத்தொகை, 2 இலட்சத்து 74 ஆயிரம் விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படும்.**

மேட்டூர் அணையில் குறைந்த அளவே தண்ணீர் இருந்தபோதிலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரிய நிகழ்வாக மேட்டூர் அணையிலிருந்து 03.02.2024 அன்று டெல்டா பாசனத்திற்காக 3 டி.எம்.சி தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டதால், பாதிக்கும் நிலையிலிருந்த சுமார் 25,000 ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது.

பல்வேறு உழவர் நலன் குறித்த திட்டங்கள், வேளாண் இயந்திரங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள், தொழில்நுட்பக் கருத்தரங்குகள் கொண்ட மாபெரும் கண்காட்சிகள் சென்னையிலும், திருச்சியிலும் நடைபெற்றன. இவற்றில் மொத்தமாக, இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகளும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் பார்வையிட்டு, பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### சாதனைகள்!

இருபோகச் சாகுபடிப் பரப்பை இருமடங்காக்கும் முயற்சியில், 2022-2023ஆம் ஆண்டு 35 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கராக இருபோகச் சாகுபடிப் பரப்பு உயர்ந்துள்ளது. கரும்புப் பயிரில் உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து எக்டருக்கு 111 மெட்ரிக் டன் உற்பத்தித்திறனுடன் தமிழ்நாடு, தேசிய அளவில் முதலிடத்தில் உள்ளது.

நடப்பாண்டில் ஏற்பட்ட பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளுக்கிடையிலும், **114 இலட்சத்து 19 ஆயிரம் ஏக்கர்** பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 20232024ஆம் ஆண்டில் 127 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியினை எட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த மூன்றாண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த சிறப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாயச் சங்கங்கள், கரும்பு விவசாயிகள் சங்கங்கள், விவசாய இடுபொருள் விற்பனையாளர்கள் சங்கம், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், இயற்கை விவசாயிகள், தோட்டக்கலை விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், வேளாண் இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனப் பிரதிநிதிகள், வேளாண் வணிகர்கள், வேளாண் ஏற்றுமதியாளர்கள், முட்டை, பால் உற்பத்தியாளர்கள், கடல் சார் மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள், வேளாண் வல்லுநர்கள் ஆகியோரின் கருத்துகளை நேரடியாகவும் மனுக்கள், மின்னஞ்சல் மூலமாகவும் பெற்று அவர்கள் கருத்துகளுக்கும் ஏற்ப 2024-2025ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கை அளிக்கப்படுகிறது.

### வேளாண்மைத்துறை

**1) முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் என்ற புதிய திட்டத்தினை இப்பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.**

வேளாண்மைக்கு மண்ணே ஆதாரம். பயிர் வளர்ச்சிக்கு அடிப்படை மண். பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளை கிடைக்கக்கூடிய வடிவில் அளிப்பதும் மண்தான். பயிர்களின் வளர்ச்சி, மண்ணின் வளத்தைச்சார்ந்தே அமைகிறது. இதைத்தான்,

**"சாரல் சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு"**

என்னும் குறுந்தொகைப்பாடல், மண்வளம் செழிப்பாக இருந்ததால்தான் மரங்களில் பெரிய பலாப்பழங்கள் காய்த்துத் தொங்கின என்று கூறியுள்ளது.

பண்டைய காலத்தில் காடுகளைத் தேவைக்கேற்ப அழித்து வேளாண்மை செய்தபோது நாளடைவில் உற்பத்தி குறைந்தது. அது மண்வளம் குன்றியதால் ஏற்பட்டது என்பதை உணர்ந்தே நம் மூத்தகுடிகள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து வேளாண்மை (Shifting Cultivation) செய்தனர் என்பதை அறியமுடிகிறது. பின்னர், எரு இடுதலின் மூலம் மண் வளத்தைக் கூட்டலாம் என்பதை,

## மூலிகைப் பயிர் சாகுபடியை ஊக்குவிக்க ரூ.5 கோடி!

**"கவைக்கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்**
**தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய"**

என்று புறநானூறு கூறுவதிலிருந்து அறியலாம்.

தற்போதுள்ள தொழில்முறை வேளாண்மையில், ஒரே பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்வதாலும், மண்ணிலிருந்து சத்துகளை அதிகம் உறிஞ்சும் பயிர்களைச் சாகுபடி செய்வதாலும், மண்ணின் வளம் குறைந்து கொண்டே வருகிறது. இது தவிர, உற்பத்தி அதிகரிப்பிற்கென அதிக அளவில் இரசாயன உரங்கள், களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால் மண்ணிலுள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கை குறைந்து மண் வளமும் நலமும் குன்றியுள்ளன. நிலங்கள் பாழ்பட்டு அதிக அளவில் களர், உவர், அமில நிலங்களாக மாறியுள்ளன. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் மலடான மண்ணைத்தான் நம் எதிர்காலத் தலைமுறையினருக்கு நாம் விட்டுச்செல்லும் நிலை ஏற்படும்.

வேதிப்பொருட்களின் எச்சம் இல்லாத வேளாண் விளைபொருட்களே நமக்கு நல்லுணவு, அருமருந்து. நல்ல உணவே உடல் நலன் காக்கும், அதுவே மக்களுக்கு நல்வாழ்வு தரும் என்பதால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மண்வளத்தைப் பேணிக்காக்கவும், மக்கள் நலன் காக்கும் விதமான உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செய்முறைகளையும் ஊக்கப்படுத்திடவும் பெரும் திட்டம் ஒன்றைத் தீட்டப் பணித்தார்கள். இதற்கென, **"முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்" என்ற புதிய திட்டம், 20242025ஆம் ஆண்டில், 22 இனங்களுடன் 206 கோடி ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும்.**

i) மண்ணில் கரிம கார்பன் உள்ளிட்ட அனைத்துச் சத்துகளும் சரிவிகிதத்தில் இருந்தால் மட்டுமே நுண்ணுயிர்கள் பல்கிப்பெருகி, பயிர்களுக்கு ஊட்டச்சத்துகள் எளிதாகக் கிடைக்கப்பெற்று மகசூல் அதிகரிக்கும். எனவே, **பசுந்தாள் உர உபயோகத்தினை விவசாயிகளிடையே ஊக்குவித்து** மண்வளம் காக்கும் வகையில், ஆயக்கட்டு, இறவைப் பாசனப் பகுதிகளில், **முதற்கட்டமாக 2024-2025ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரம் பயிரிட 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதனால், தமிழ்நாட்டிலுள்ள 2 இலட்சம் விவசாயிகள் பயனடைவர்.**

ii) **"தொல்லது விளைந்தென நிலம் வளம் கரப்பினும்"**

விளையும் நிலத்திற்கு எரு இடாவிட்டால், வயல் விளைச்சலை மறுத்துவிடும் என்று புறநானூறு பகர்கிறது. மேழிச்செல்வம் குறைந்து வரும் நிலையில், மாட்டுச் சாணத்தோடு, வேளாண் கழிவுகளையும் மக்கச் செய்து கிடைக்கும் மண்புழு உரம் முக்கியத்துவம் பெறுகிறது. மண்புழு உரம், வளமான ஊட்டச் சத்துகளை வழங்குவதோடு மட்டுமின்றி, மண்ணின் தன்மையையும் மேம்படுத்துகிறது. எனவே, மண்புழு உரம் தயாரித்து மண்வளத்தை மேம்படுத்திட, ஒரு விவசாயிக்கு இரண்டு மண்புழு உரப்படுக்கைகள் வீதம் 10,000 விவசாயிகளுக்கு வழங்கிட 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், நிரந்தர மண்புழு உரத்தொட்டிகள் அமைத்து, தொடர்ந்து மண்புழு உரம் தயாரிக்க ஏதுவாக, 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

iii) மண்ணின் வளம் குறித்து அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதற்காக, விவசாயிகள் **"தமிழ் மண்வளம்"** இணையதளம் வழியாக மண் வள அட்டைகளைப் பதிவிறக்கம் செய்து, தாங்கள் தேர்வு செய்துள்ள பயிர்களுக்கேற்ப உரப் பரிந்துரைகளையும் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் மண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, சமச்சீர் உரப் பரிந்துரை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். 2024-2025ஆம் ஆண்டில் 2,482 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் 2 இலட்சம் விவசாயிகளின் நிலத்தில் மண்பரிசோதனை செய்து மண்வள அட்டையும், மண்வள மேம்பாட்டிற்கான பரிந்துரையும் வழங்கப்படும். இவ்வாறு, **இரசாயன உரங்களின் பயன்பாட்டினைக் குறைத்து மண்ணின் வளம் காக்க, 6 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

iv) களர் நிலத்தில், மண் இறுகியும் காற்றோட்டம் இல்லாமலும், அமில நிலத்தில் நுண்ணுயிர்ச் செயல்பாடுகள் குறைந்தும், பயிர் வளர்ச்சியும், மகசூலும் குறைந்தும் காணப்படுகிறது. இதனைச் சீர்செய்யும் பொருட்டு, **37,500 ஏக்கர் களர் நிலங்களைச் சீர்ப்படுத்த 7 கோடியே 50 இலட்சம் ரூபாயும், 37,500 ஏக்கர் அமில நிலங்களைச் சீர்ப்படுத்த 15 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படும்.**

v) திரவ உயிர் உரங்களைப் பயிர்களுக்கு வழங்குவதால் தழை, மணி, சாம்பல், துத்தநாகச் சத்துகளை எளிதில் அளித்து இரசாயன உரச் செலவைக் குறைத்து, சராசரியாக 10 முதல் 20 சதவீதம் கூடுதல் வருவாய் பெறமுடியும். இதற்கென, **2 இலட்சம் விவசாயிகளுக்கு 10 இலட்சம் ஏக்கரில் இடுவதற்காக, 5 இலட்சம் லிட்டர் உயிர் உரங்கள், 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.**




vi) தமிழ்நாட்டில் முக்கிய வேளாண் பயிரான நெற்பயிரில், ஒவ்வொரு நாளும் வேளாண் விரிவாக்கப் பணியாளர்களால் விவசாயிகளுடன் இணைந்து, **"வயல் சூழல் ஆய்வு"** மேற்கொள்ளப்பட்டு, நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை, தீமை செய்யும் பூச்சிகள், நீர் மேலாண்மை முறைகள், மண்ணின் வளம், பயிர்களின் வளர்ச்சி நிலைகள், சுற்றுச்சூழல் போன்றவற்றின் அடிப்படையில் பூச்சி மேலாண்மை செய்வது குறித்து விவசாயிகளுக்கு உரிய அறிவுரைகளும் பரிந்துரைகளும் வழங்கப்படும். இதனால் பயிர்பாதுகாப்பு மேம்படுத்தப்பட்டு, இரசாயனங்களின் பயன்பாடு பெருமளவு குறைக்கப்படும். மண்நலம் காக்கப்படும்.

vii) அசாடிராக்டின் மூலப்பொருளைக்கொண்ட வேம்பிலிருந்து கிடைக்கும் பொருட்கள், சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாமல் பூச்சி, நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த வல்லவை. வேப்பிலை பசுந்தழை உரமாகவும் பயன்படுகிறது. **வேம்பினைப் பரவலாக்கம் செய்திடும் வகையில் 10 இலட்சம் வேப்ப மரக்கன்றுகள் வேளாண்காடுகள் திட்டத்தில் இலவசமாக விநியோகிக்கப்படும். இதற்கென 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

viii) இயற்கையிலேயே உயிரி பூச்சிக்கொல்லி பண்புகளுடைய ஆடாதொடா, நொச்சி போன்ற தாவர வகைகளின் 50 இலட்சம் செடிகளைத் தரிசு நிலங்களிலும் வயல் பரப்புகளிலும் நடவு செய்து பரவலாக்கம் செய்திட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

ix) பழங்காலத்தில் நம் தமிழர்கள் நல்ல உணவுப் பழக்க வழக்கத்தினாலேயே நல்வாழ்வு வாழ்ந்தனர். இதனை ஊக்குவிக்கும் விதமாக, நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவல்ல சீவன் சம்பா போன்ற மருத்துவ குணம் கொண்ட பாரம்பரிய நெல் இரகங்கள், 20242025ஆம் ஆண்டில் 1,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யும் வகையில் விதை விநியோகம் செய்யப்படும்.

x) **நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தில்** பாரம்பரிய நெல் இரகங்களான அறுபதாம் குறுவை, பூங்கார், தூயமல்லி, சீரகசம்பா, மாப்பிள்ளை சம்பா, சீவன் சம்பா, கருப்புக்கவுனி, போன்றவற்றின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் 2023-2024ஆம் ஆண்டில் 20,979 விவசாயிகள் பாரம்பரிய நெல் இரகங்களை 12,400 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்து பயனடைந்தனர். 2024 - 2025ஆம் ஆண்டில் மாநில அரசு விதைப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு,

2025-2026ஆம் ஆண்டில், 10,000 ஏக்கரில் சாகுபடி செய்யும் வகையில் 200 மெட்ரிக் டன் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். இதற்கென, 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

xi) புரதம், நார்ச்சத்து, கால்சியம், இரும்புச் சத்து, வைட்டமின்கள் ஆகியவை அதிகம் உள்ள பாரம்பரிய சிறுதானியங்கள், பயறு வகைகள் இரத்தத்தில் சர்க்கரை அளவினைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், உடல் எடையைக் குறைக்கவும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் செய்கின்றன. எனவே, சேலம், கரூர் மாவட்டங்களில் தலைவிரிச்சான் சோளம், வெள்ளை சோளம், இருங்கு சோளம், செஞ்சோளமும், தூத்துக்குடி மாவட்டத்தில் காக்காச்சோளமும், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை மாவட்டங்களில் வெண்சுருட்டை கேழ்வரகு, கருஞ்சுருட்டை கேழ்வரகு, கரிக்கட்டை கேழ்வரகு, பூவாடன் கேழ்வரகு, குருவிக்காரன் கம்பு, காட்டுக்கம்பு, தட்டை வரகு, பெரும்சாமை, சடை சாமை, சிட்டன் சாமை, கருஞ்சிட்டன் சாமை, நாட்டுத் துவரை, மலைத்துவரை ஆகியவற்றையும், திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில், நாட்டு உளுந்து, கொடி உளுந்து ஆகிய இரகங்களின் விதைகளையும் கண்டறிந்து சேகரித்து, அரசு மாநில விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு பாரம்பரிய இரகங்கள் பாதுகாக்கப்படும். இவை, புதிய இரகங்களை உருவாக்கிடவும், பயன்பாட்டிலுள்ள இரகங்களை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும்.

xii) உயிர்ம வேளாண்மைக்கான திட்டங்கள், சான்றளிப்பு முறைகள், நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு, இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பிற்கான பயிற்சிகள், உயிர்ம வேளாண் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் போன்ற செயல்பாடுகள், அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காக, வட்டாரத்திற்கு ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, **உயிர்ம வேளாண்மைக்கான மாதிரிப் பண்ணை உருவாக்கப்பட்டு இதர விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும். இதற்கென 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xiii) 20232024ஆம் ஆண்டில், 36 மாவட்டங்களில் 35,815 ஏக்கர் பரப்பில் உருவாக்கப்பட்ட 725 உயிர்ம வேளாண் தொகுப்புகளுக்கு இரண்டாம் ஆண்டிற்கான ஆதரவு வழங்கிட, 27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு முழுமையான உயிர்ம வேளாண் சான்றுடன் கூடிய உயிர்ம வேளாண்மை உறுதி செய்யப்படும். இதனால் விவசாயிகளுக்கு விதைப்பு முதல் நேரடி சந்தைப்படுத்துதல் வரை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, கூடுதல் இலாபம் பெற்றிட வழிவகை செய்யப்படும்.

xiv) உயிர்ம வேளாண்மைக்கு இன்றியமையாத, பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம், மண்புழு உரம், அமிர்தக்கரைசல், மீன்அமிலம் போன்றவற்றைத் தயாரித்து விற்பனை செய்ய ஆர்வமுள்ள 100 குழுக்களுக்கு இயற்கை இடுபொருள் தயாரித்தல் மையம் அமைத்து ஊக்குவிக்க, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# இயற்கை விவசாயத்திற்கு இடுபொருள் தயாரிக்க ரூ.1 கோடி!

## வேளாண் நிதி நிலை அறிக்கை!...

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

xv) விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வை இயக்கத்தில் 24 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவினத்தில், ஒரு கோடியே 96 இலட்சம் மரக்கன்றுகள் 72,597 விவசாயிகளுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டன. விவசாய நிலங்களில் வளர்க்கப்படும் வேளாண் காடுகள், நிரந்தரப் பசுமைப் போர்வையினை உருவாக்குவதோடு, இலாபம் தரும் பண்ணைத் தொழிலாகவும் விளங்குகின்றன. 2024-2025ஆம் ஆண்டில் தரமான மரக்கன்றுகள் உற்பத்தி செய்திடவும், மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் நாற்றங்கால்களை வலுப்படுத்துவதற்காகவும் சிறிய, பெரிய, உயர் தொழில்நுட்ப (ஹைடெக்) நாற்றங்கால்கள் அமைப்பதற்கு **வேளாண்காடுகள் திட்டத்தில், 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xvi) ஒருங்கிணைந்த பண்ணையத்தினால், விவசாயிகள், பயிர் சாகுபடியுடன் கறவை மாடுகள், ஆடுகள் வளர்த்தல், பழ மரங்கள், தேனீ வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளையும் மேற்கொண்டு தற்சார்புடன் கூடிய வாழ்வாதார முன்னேற்றத் தினை அடைய முடியும். கடந்த மூன்று ஆண்டுகளில், 40,888 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் 142 கோடி ரூபாய் மானியத்தில் அமைக்கப்பட்டு, 40,888 விவசாயிகள் பயனடைந்து அவர்களது வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. **2024-2025ஆம் ஆண்டில் 14,000 ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் அமைத்திட, 42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xvii) தமிழ்நாட்டில் சுமார் 60 இலட்சத்து 62 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள், பருத்தி, தோட்டக்கலைப் பயிர்கள் ஆகியவை சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் சிறு, குறு விவசாயிகளால் சாகுபடி செய்யப்படும் இந்நிலங்கள் ஊட்டச்சத்துக் குறைபாடும், குறைந்த நீர்ப்பிடிப்புத்திறனும் கொண்டதாக உள்ளதால், நிலத்தடி நீர் குறைந்து பயிர் உற்பத்தித் திறனும் வெகுவாகக் குறைந்து காணப்படுகிறது.

இம்மானாவாரி நிலங்களில் விவசாயிகள் இலாபகரமான பயிர் சாகுபடி மேற்கொள்வதற்கு ஏதுவாக, உழவு மேற்கொள்ளவும், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துக்கள் பயிரிட விதைகளும் வழங்கப்படும். 2024-2025ஆம் ஆண்டில், மூன்று இலட்சம் ஏக்கரில் இத்திட்டத்தை செயல்படுத்த, **36 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

xviii) காய்கறிகள், பழங்களின் தினசரி நுகர்வு மக்களிடையே மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, வீட்டுத் தோட்டத்தில் ஊட்டச்சத்துமிக்க பழச்செடிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு வாழை, பப்பாளி, முருங்கை, கறிவேப்பிலை போன்ற செடிகள் வழங்கப்படும். இதனால் பூச்சிக் கொல்லிகள் இல்லாத, நச்சுத்தன்மையற்ற பழங்கள், காய்கறிகள் கிடைக்கும். இத்திட்டத்திற்கென **4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xix) **“தேனீக்களின் தனித்துவம் அவை தித்திக்கும் தேனைத் திரட்டுவதால் மட்டுமல்ல; மலர்களுக்குள் மகரந்தச்சேர்க்கை நிகழ்த்துவதால்தான்”.** மக்களின் உடல்நலத்தில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில், **3 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் தேனீ முனையம் உருவாக்கப்படும்.** இத்திட்டத்தில், தேன் பரிசோதனைக் கூடமும் தேன், தேன் சார்ந்த பொருட்களைப் பதப்படுத்தும் கூடங்களும் அமைக்கப்பட்டு, தேனீ வளர்ப்போர்க்கு உரிய பயிற்சிகளும் அளிக்கப்படும்.




xx) **காலநிலை மாற்றம்**, அடுத்த 20 ஆண்டுகளில் பல்லுயிர்ப் பரவல், பயிர் உற்பத்தி, உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதிக்கக்கூடும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கும், வேளாண் உற்பத்தியைக் குறையாமல் பாதுகாத்திடவும், உரிய தொழில்நுட்பங்கள் பரவலாக்கப்பட வேண்டும். அதற்காக, தமிழ்நாட்டில் சிறப்பு வேளாண் கிராமங்களை உருவாக்கி, இத்தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகள் உள்ளிட்டோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி பரவலாக்கம் செய்யப்படும். இதற்கென, **ஒரு கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xxi) வேளாண்மையில் நீடித்த உற்பத்தித் திறனைப் பெற்றிட மண்ணின் தொடர்ச்சியான வளமைத்திறன், நிலையான உற்பத்தித்திறன் ஆகியவை மதிப்பிடப்படவேண்டும். மண்ணிலுள்ள கரிமச்சத்து, நுண்ணுயிர்களின் கலவை ஆகியவற்றைப் பொறுத்தே மண்ணின் வளம் அமைகிறது. மண்ணின் வளத்தை மேம்படுத்திட **பயிர்க்கழிவுகள் உள்ளிட்ட கரிமப் பொருட்களை வேகமாகச் சிதைத்து** கரிமச்சத்தின் அளவை உயர்த்தவும், கிடைக்காத நிலையிலுள்ள **சத்துகள் கிடைக்கப் பெறவும்**, பயனுள்ள நுண்ணுயிர்க் கலவையை உருவாக்கிட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் செயல்திறனும் மதிப்பிடப்படும். இதற்கென, **ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

xxii) உழவர்சந்தைகளில் விற்பனை செய்வதைப் போன்று தரமான வேளாண் விளை பொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் எளிதில் நகர்ப்புர நுகர்வோரைச் சென்றடைய, நிர்ண யிக்கப்பட்ட தர அளவுகளின்படி விவசாயிகளிட மிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து, தரம்பிரித்து, சிப்பம்கட்டி, முத்திரையிட்டு விற்பனை செய்ய ஏதுவாக **100 உழவர் அங்காடிகள், 5 கோடி ரூபாய் மாநில நிதியில் செயல்படுத்தப்படும்.**

**முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், 2024-2025ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். 2024-2025ஆம் ஆண்டிற்கு மொத்தம் 206 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 2) கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்.

ஒவ்வொரு சிற்றூரும் தன்னிறைவு பெற்று முன்மாதிரியாகத் திகழவேண்டும் என்ற நோக்கில், முதன்மைத் தொழிலான உழவுத் தொழிலை மேம்படுத்தி, நிகர சாகுபடிப் பரப்பை அதிகரித்திட தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி விவசாயிகளுக்குத் தந்திட “கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்” எனும் திட்டம் 2021-2022ஆம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2024-2025ஆம் ஆண்டிலும், இத்திட்டம், தேர்வு செய்யப்பட்ட 2,482 கிராம ஊராட்சிகளில், 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

### 3) தேவைக்கேற்ற உற்பத்தியை எட்ட வேளாண் பயிர்களில் பரப்பு விரிவாக்கம்

உணவுப்பொருள் உற்பத்தியில் தன்னிறைவு எவ்வளவு முக்கியம் என்பதை ரஷ்யா - உக்ரைன் போர் நமக்கு உணர்த்தியுள்ளது. தேவைக்கேற்ற உற்பத்தியினை எட்டினால் மட்டுமே, தன்னிறைவு பெற முடியும். தமிழ்நாட்டின், நெல் தேவை ஓரளவிற்கு நிறைவு செய்யப்பட்டாலும், பயறு வகைகள், எண்ணெய்வித்துகளுக்கான தேவை நிறைவு செய்யப்படாமலேயே உள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டொன்றிற்கு சுமார் 18 இலட்சத்து 45 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு எண்ணெய் தேவைப்படுகிறது. தற்பொழுது சாகுபடி செய்யப்படும் எண்ணெய் வித்துப் பயிர்களிலிருந்து 4 இலட்சத்து 85 ஆயிரம் மெட்ரிக் டன் தாவர எண்ணெய் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, இப்பயிர்களில் சிறப்புக் கவனம் செலுத்தி பரப்பு விரிவாக்கம் செய்து உற்பத்தி அதிகரிக்கப்படும்.

**i) பயறு பெருக்குத் திட்டம்** உணவுப் பாதுகாப்பையும் ஊட்டச்சத்தையும் நோக்கமாகக் கொண்ட நிலையான உணவு உற்பத்தியின் ஒரு பகுதியாக பயறுவகைகளின் உற்பத்தி உள்ளது. அனைத்துப் பயறுவகைகளின் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் நோக்கத்தில், **2024-2025ஆம் ஆண்டில் பயறு பெருக்குத் திட்டம் 4 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில், 40 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

**ii) துவரை சாகுபடிப் பரப்பு விரிவாக்க இயக்கம்**தமிழ்நாட்டில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் முக்கியப் பயறுவகையான துவரையின் பரப்பு தொடர்ச்சியாகக் குறைந்து, தற்போது ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மட்டுமே பயிரிடப்பட்டு வருகிறது. எனவே, துவரை சாகுபடிப் பரப்பு குறைந்துவரும் மாவட்டங்களில், இப்பயிரின் பரப்பு அதி கரிக்கப்பட்டு, **2024-2025ஆம் ஆண்டில் 50,000 ஏக்கர் பரப்பில், துவரையைத் தனிப் பயிராகவோ, வரப்புப் பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோ பயிரிட, 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில அரசின் நிதி ஒதுக்கப்படும்.**

**iii) உணவு எண்ணெய் உற்பத்தி உயர்த்தும் திட்டம்:** நாம் அன்றாடம் உண்ணும் உணவில் எண்ணெய் முக்கிய அங்கம் வகிக்கிறது. விவசாயிகளுக்கு அதிக இலாபம் ஈட்டித்தரக்கூடிய எண்ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி, சோயாமொச்சை, ஆமணக்கு ஆகிய பயிர்களின் சாகுபடியைப் பரவலாக்கம் செய்ய, தொகுப்பு செயல்விளக்கத்திடல் அமைத்திடவும், நெல் தரிசில் எண்ணெய்வித்துப் பயிர்கள் சாகுபடி செய்வதை ஊக்குவித்திடவும், **2024-2025ஆம் ஆண்டில் 45 கோடி ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.**

**iv) எள் சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்:** 2023-2024ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்கள் அதிகம் விளையும் மாவட்டங்கள் எண்ணெய்வித்து மண்டலமாக அறிவிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, 2024-2025ஆம் ஆண்டில், எள் சாகுபடிப் பரப்பு, மகசூலை அதிகரித்திட, சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிற்குத் தேவையான இடுபொருட்கள், அறுவடை செலவினம் ஆகியவற்றிற்கு மானியம் வழங்க, 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**v) சூரியகாந்தி சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்:** 2024-2025ஆம் ஆண்டில், சூரியகாந்திப் பயிரின் சாகுபடிப் பரப்பினை 12 ஆயிரத்து 500 ஏக்கர் அதிகரித்திட **2 கோடி ரூபாய்** நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**vi) ஆமணக்கு சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்:** அதிக விளைச்சல் தரும் வீரிய ஒட்டு இரக ஆமணக்கு சாகுபடியை 1,500 ஏக்கர் பரப்பளவில் ஊக்குவித்திட, 2024-2025ஆம் ஆண்டில் 18 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**முக்கிய பயறுவகைகள், எண்ணெய்வித்துகளில் பரப்பு விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கென மொத்தம் 108 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 4) பயிர் உற்பத்தித்திறன் உயர்த்துதல் ஊக்குவிப்புத் திட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூன்று தொலைநோக்குத் திட்டங்களில், உணவு தானியப் பயிர்கள், தென்னை, கரும்பு, பருத்தி, சூரியகாந்தி உள்ளிட்ட பயிர்களில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களில் தமிழ்நாடு இடம் பெற்றிட வழிவகை செய்யப்படும் என்பதும் ஒன்றாகும். குறைந்து வரும் சாகுபடிப் பரப்பில், வேண்டிய அளவு உற்பத்தி செய்யவேண்டிய கட்டா யத்தில் நாம் உள்ளோம். எனவே, சாகுபடியில் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து உற்பத்தித்திறனை அதிகரிக்க சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

i) வேளாண் உற்பத்திக்கு அடிப்படைத் தேவையான தரமான விதைகளைப் பயன்படுத்துவதால் 15 சதவீதம் வரை மகசூலை அதிகப்படுத்தலாம். விவசாயிகள் தங்களுக்குத் தேவையான தரமான விதைகளைத் தாங்களே உற்பத்தி செய்து, உயர் விளைச்சல் பெற வேண்டும் என்ற நோக்கத்தில், விதைக் கிராமத் திட்டத்தில், 12 ஆயிரத்து 510 மெட்ரிக் டன் நெல், 260 மெட்ரிக் டன் சிறு தானியங்கள், 940 மெட்ரிக் டன் பயறு வகைகள், இரண்டாயிரத்து 100 மெட்ரிக் டன் எண்ணெய்வித்துகள் என மொத்தம் **15 ஆயிரத்து 810 மெட்ரிக் டன் விதைகள் 50 முதல் 60 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்படும். இதற்கென, 2024-2025ஆம் ஆண்டில் 35 கோடி ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

ii) பிற மாநில வேளாண் பல்கலைக்கழகங்களால் வெளியிடப்பட்டு தமிழ்நாட்டிற்கு அறிவிக்கை செய்யப்பட்ட பத்தாண்டுக்குட்பட்ட உயர் விளைச்சல் தரக்கூடிய நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துகளின் வல்லுநர் விதைகள், ஆதார நிலை, சான்று விதைகள் ஆகியவை தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையின் வாயிலாகக் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

iii) நிலக்கடலை போன்ற வேளாண் பயிர்களில் ஜிப்சம் இடுதலை ஊக்குவித்து ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மூலம் உற்பத்தித்திறனையும், தரத்தினையும் அதிகரிக்க, 50,000 ஏக்கர் பரப்பிற்கு ஜிப்சம் வழங்க,ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் 50,000 விவசாயிகள் பயன்பெறுவர்.

iv) தமிழ்நாட்டில் தொடர்ந்து நெல் சாகுபடி செய்யப்படும் நிலங்களில் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டை நிவர்த்தி செய்து, மண்ணின் வளத்தை மேம்படுத்திடவும், மகசூலைப் பெருக்கிடவும் நெற்பயிருக்கு துத்தநாக சல்பேட், ஜிப்சம் உரங்கள், மொத்தம் 4 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு, 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விநியோகிக்கப்படும்.

v) நெற்பயிரில் நுண்ணூட்ட உரக் கலவை பயன்பாட்டை ஊக்குவிக்கும் திட்டமானது 2 இலட்சம் ஏக்கர் பரப்பில், 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**முக்கிய வேளாண் பயிர்களின் உற்பத்தித்திறனை உயர்த்துதலை ஊக்குவிக்கும் திட்டத்திற்கென, மொத்தம் 48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 5) “ஒரு கிராமம் ஒரு பயிர்” செயல்விளக்கம்

நாட்டின் உண்மையான முன்னேற்றம், கிராமங்களின் வளர்ச்சியில் உள்ளது என்ற காந்திய சிந்தனையில், கிராமங்களில் மறுமலர்ச்சி ஏற்படுத்திட **“ஒரு கிராமம் ஒரு பயிர்” என்ற புதிய திட்டம் 15 ஆயிரத்து 280 வருவாய் கிராமங்களில் செயல்படுத்தப்படும்.**

இத்திட்டத்தில், ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர் என்று ஐந்து முதல் பத்து ஏக்கர் பரப்பில், நெல், சோளம், மக்காச்சோளம், கம்பு, குதிரைவாலி, கேழ்வரகு, துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, பருத்தி, கரும்பு போன்ற முக்கியப் பயிர்களுக்கான நிலம் தயாரிப்பு, உயர் விளைச்சல் இரகங்களைப் பயன்படுத்துதல், விதை நேர்த்தி, விதைப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை உட்பட்ட அனைத்துத் தொழில்நுட்பங்களையும் கடைப்பிடிக்க வைத்து, செயல் விளக்கங்கள் மேற்கொண்டு அதன் வாயிலாக விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

மேலும், **நன்மை செய்யும் பூச்சிகளைத் தெரிந்து கொள்ளவும், தீமை செய்யும் பூச்சிகளைத் தெரிந்து கொல்லவும்** ஏதுவாக **“நிரந்தரப் பூச்சிக் கண்காணிப்புத் திடல்கள்”** வயல்களில் அமைக்கப்பட்டு, உரிய பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் விவசாயிகளுக்குப் பரிந்துரைக்கப்படும்.

### 6) தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்

**“கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையோடு இந்நான் கல்லது உணவும் இல்லை”** - என்ற புறநானூற்று கூற்றின்படி, நமது உணவில் சிறுதானியத்தின் பங்கினைக் கருத்தில் கொண்டும், சிறுதானியத்தில் உள்ள ஊட்டச்சத்துகளின் முக்கியத்துவம் உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகவும், **2023ஆம் ஆண்டானது சர்வதேச சிறுதானிய ஆண்டாகக்** கொண்டாடப்பட்டது.

ஊட்டச்சத்து மிகுந்த சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற சிறுதானியங்கள் வரகு, பனிவரகு, குதிரைவாலி, சாமை, தினை போன்ற குறுதானியங்கள் ஆகியவற்றின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசால், 25 மாவட்டங்களைக் கொண்டு ஏற்கனவே இரண்டு சிறுதானிய மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2023-2024ஆம் ஆண்டு முதல் 2027-2028ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் இரண்டு மண்டலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இத்திட்டம் 20242025ஆம் ஆண்டிலும் 65 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**




### 7) மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்

வேளாண்மையை உயர்வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல முனைப்புடன் செயல்படும் தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் தேவைகளை பல்வேறு கருத்துக் கேட்புக் கூட்டங்கள் மூலம் கேட்டு, அவற்றைக் கூடிய மட்டும் செயல்படுத்துவதற்கான உகந்த திட்டங்களை உருவாக்குவதோடு வேளாண்மையில் ஒட்டு மொத்த வளர்ச்சியை அதிகரிக்கக் கூடிய உத்திகளைச் செயல் படுத்தும் விதமாக **“மாநில வேளாண் வளர்ச்சி திட்டம்”** 2022-2023ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இதில்,

**i) மாநில அளவில் சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணைய்வித்துகள், கரும்பு பயிர்களில் அதிக உற்பத்தியைப் பெறும் முதல் மூன்று விவசாயிகளுக்கு** முதல் பரிசாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், மூன்றாம் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் என 33 பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2024-2025ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக 55 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ii) அதிக நீர் தேவைப்படும் நெற்பயிருக்கு மாற்றாக, குறைந்த நீர்த் தேவையுடைய மாற்றுப்பயிர்களான சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்களை ஊக்குவிக்கும் வகையில், 2024-2025ஆம் ஆண்டில், ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பளவில் மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்குத் தேவையான விதை, உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், நுண்ணூட்ட உரங்கள், இலைவழி உரத்திற்கு தெளிப்பு மானியம், அறுவடை மானியம் ஆகியவற்றுக்கு

12 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

**iii) பட்டதாரி இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்கும் விதமாக** 2024-2025ஆம் ஆண்டில், 100 இளைஞர்களுக்கு வங்கிக்கடன் உதவியுடன் கூடிய ஏதாவது ஒரு வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்காகப் பட்டதாரி ஒருவருக்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கிட, ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 8) கிராம வேளாண் முன்னேற்றக் குழு

பயிர் சாகுபடியில் அதிக உற்பத்தியும் அதிக வருமானமும் பெற, பருவத்தே பயிர் செய்து உயரிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி, சந்தைத் திறனில் திறம்பட்டு நீடித்த வளர்ச்சி அடைய உரிய ஆலோசனைகளைக் குறித்த நேரத்தில் உழவர்களுக்கு வழங்க, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில், கிராம முன்னேற்றக் குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 2024-2025ஆம் ஆண்டில், 2,482 கிராம ஊராட்சிகளில் கிராம முன்னேற்றக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 2 கோடியே 48 இலட்சம் ரூபாய் அட்மா (ATMA) திட்ட நிதி ஒதுக்கீட்டில் பயிற்சிகள் வழங்கப்படும்.

### 9) சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது

2023-2024ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசால் உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் சிறந்த விவசாயிகளுக்குச் சிறந்த உயிர்ம விவசாயிக்கான **“நம்மாழ்வார் விருது”** வழங்கப்பட்டு வருகிறது. 2024-2025ஆம் ஆண்டிலும் உயிர்ம விவசாயிகளைக் கௌரவிக்கும் வகையில், பாராட்டுப் பத்திரத்துடன் பணப்பரிசும் முதல் மூன்று விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதற்கென 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 10) ஆதி திராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த குறு, சிறு விவசாயிகளுக்கு 20 சதவீத கூடுதல் மானியம்

**“யாரும் விடுபடாமல், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி”** எனும் சமூக நீதிக் கோட்பாடு உடையது இந்த அரசு. இதற்காகத்தான் ஆதி திராவிட, பழங்குடியினத்தைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் பயனடையும் வகையில், துறையின் மூலம் செயல்படுத்தப்படும் உயர் மதிப்புள்ள திட்டங்களுக்கு வழங்கப்படும் மானியத்துடன், கூடுதலாக 20 சதவீத மானியத் தொகை 2022-2023ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. 2024-2025ஆம் ஆண்டிலும் இதற்கென 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 11) பலன்தரும் பருத்தி சாகுபடி

வணிகப் பயிரான பருத்தியில் அதிகத் தேவையுள்ள நீண்ட, மிக நீண்ட இழை இரகங்களை இந்தியாவின் ‘நூல் கிண்ணம்’ என்றழைக்கப்படும் தமிழ்நாட்டில், அதிக அளவில் உற்பத்தி செய்து நூற்பாலைகளுக்கு உரிய நேரத்தில் வழங்கி, அதன் மூலம் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்திட “பருத்தி சாகுபடி இயக்கத்தை” 29 கோடியே 72 இலட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தியதன் காரணமாக, 2020-2021இல் இரண்டு இலட்சத்து 76 ஆயிரம் ஏக்கராக இருந்த பருத்தி சாகுபடிப் பரப்பு, 2022-2023ஆம் ஆண்டில் நான்கு இலட்சத்து 27 ஆயிரம் ஏக்கராக உயர்ந்தது. உற்பத்தியும் 2 இலட்சத்து 42 ஆயிரம் பேல்களிலிருந்து 3 இலட்சத்து 19 ஆயிரம் பேல்களாக உயர்ந்துள்ளது. **2024-2025ஆம் ஆண்டில், பலன் தரும் பருத்தி சாகுபடித் திட்டம் 14 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். இதனால், பருத்தி உற்பத்தி தமிழ்நாட்டில் 5 இலட்சத்து 50 ஆயிரம் பேல்களாக உயரும்.**

### 12) பயிர்க்காப்பீடு

இயற்கைச் சீற்றங்களால் விவசாயிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பிலிருந்து அவர்கள் மீண்டு வரும் வகையில் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில், 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17,18ஆம் தேதிகளில் பெய்த கனமழையால் அதிகம் பாதிப்படைந்த தூத்துக்குடி மாவட்டத்தில், மழையால் ஏற்பட்ட **பயிர் சேதத்திற்காக 14 கோடியே 55 இலட்சம் ரூபாய், 9,988 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக உடனடியாக வழங்கப்பட்டது. 20242025ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த 1,775 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 13) வேளாண் மேம்பாட்டிற்கான பயிற்சிகள்

பயிற்சி கொடுப்பதை மனிதவள மேம்பாட்டுக்கான முதலீடாகக் கருதவேண்டும். பயிற்சியின் மூலம் பணித்திறனையும், தொழில்நுட்ப அறிவினையும் மேம்படுத்தி, வேளாண் மேம்பாட்டினை எய்தும் வண்ணம்,

15,000 விவசாயிகளுக்கும், 500 படித்த இளைஞர்களுக்கும், 1,600 அலுவலர்களுக்கும், 500 பணியாளர்களுக்கும் பல்வேறு பயிற்சிகள் 50 இலட்சம் ரூபாய் நிதியில் வழங்கப்படும்.

### சர்க்கரைத் துறை

சர்க்கரைத் தொழில் விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியிலும் கிராமப்புர மேம்பாட்டிலும் பெரும்பங்கு வகிக்கும் முக்கிய வேளாண் சார்ந்த தொழிலாகும். தமிழ்நாட்டில் 13 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 15 தனியார் என மொத்தமாக 30 சர்க்கரை ஆலைகள் இயக்கத்தில் உள்ளன.

கரும்பு விவசாயிகளின் நலனுக்காகவும், கரும்பு பதிவுப் பரப்பு, உற்பத்தியினை அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேலும் மேம்படுத்திடவும், 2024-2025ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

### 14) சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை

வேளாண்மை நிதிநிலை அறிக்கை தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக் கேட்புக் கூட்டங்களின்போது, அனைத்துக் கரும்பு விவசாயிகளாலும் தொடர்ந்து கேட்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று, கரும்பு சாகுபடிப்பரப்பு, உற்பத்தியை அதிகரிக்கவும், கரும்பு விவசாயிகள் கூடுதல் வருவாய் பெறும்வகையிலும், 20232024அரவைப் பருவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்குப் பதிவு செய்து கரும்பு வழங்கிய தகுதியுள்ள விவசாயிகளுக்கு, ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த 195 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகையினை விட, **முன் எப்போதும் இல்லாத அளவில் டன் ஒன்றுக்கு 215 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகையாக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம், சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கரும்பு விவசாயிகள் பயன் பெறுவர். இதற்கென, 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 15) கரும்பு சாகுபடி மேம்பாட்டுத்திட்டம்

கரும்பு விவசாயிகளின் நலனுக்காகவும், கரும்பு சாகுபடி செலவைக் குறைத்து, சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும், சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்தவும், பூச்சி, நோய் தாக்குதலுக்கு எதிர்ப்புடைய அதிக சர்க்கரைக் கட்டுமானம் தரக் கூடிய புதிய கரும்பு இரகங்களைக் கரும்பு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கவும் ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து 7 கோடியே 92 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 16) சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துதல்

கள்ளக்குறிச்சி1, செங்கல்ராயன், செய்யாறு, திருப்பத்தூர் ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நவீன கரும்பு எடைமேடைகள், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சுழல் கவிழ்ப்பான், 10 கூட்டுறவு, 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் சிமெண்ட் கான்கிரீட் கரும்புத் தளங்கள், 4 கூட்டுறவு, ஒரு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கழிவுமண் மக்கவைக்கும் களங்கள் ஆகியவற்றை அமைக்க, ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து, 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

## பாரம்பரிய நெல் ரகங்கள் 1000 ஏக்கரில் சாகுபடி செய்ய விதை விநியோகம் !

# கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு 215 ரூபாய்!

## வேளாண் நிதி நிலை அறிக்கை!... 4ஆம் பக்கத் தொடர்ச்சி

**17) சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் உயர்த்தும் நடவடிக்கைகள்**

பெரம்பலூர், செய்யாறு, வேலூர், சேலம், மதுராந்தகம், சுப்பிரமணிய சிவா ஆகிய சர்க்கரை ஆலைகளில், கரும்பு அரவைப் பகுதி இயந்திரங்களை ஒருங்கிணைத்து,

**3 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் ஆலை அரவைப் பகுதி தானியங்கிமயமாக்கப்படும்.**

செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 18 மெகாவாட் பவர் டர்பைனுக்குத் தேவையான புதிய டர்பைன் ரோட்டர் அசெம்பிளி, **6 கோடியே 31 இலட்சம் ரூபாய்** மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு ஆலையில் அரவை நிறுத்தம் ஏற்படுவது தவிர்க்கப்படும்.

செங்கல்ராயன், வேலூர், செய்யாறு, அறிஞர் அண்ணா, பெரம்பலூர், தருமபுரி, எம்.ஆர்.கே ஆகிய சர்க்கரை ஆலைகளில் இயங்கிவரும் இணை மின் நிலையங்களில், நீர் சுத்திகரிப்பு நிலைய அயனி மற்றும் எதிர் அயனி பரிமாற்றி,

ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். இதனால் ஆலை யின் நீரின் தரம் மேம்படுத்தப்பட்டு, பவர் டர்பைனின் ஆயுட்காலம் நீட்டிக்கப்படும். எம்.ஆர்.கே, செய்யாறு ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு அரவை இயந்திரத்தின் மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவி, ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதனால் மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் கருவியின் பழுது காரணமாக ஏற்படும் அரவை நேர இழப்பு தவிர்க்கப்படும்.

**சர்க்கரை ஆலைகளின் மேம்பாட்டிற்காக, மொத்தம் 12 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஆலை நிதியிலிருந்து செலவிடப்ப**டும்.

**தோட்டக்கலை -**
**மலைப் பயிர்கள் துறை**

**“கதிர்படு வயலின் உள்ள கடிகமழ் பொழிலின் உள்ள முதிர்பல மரத்தின் உள்ள முதிரைகள் புறவின் உள்ள பதிபடு கொடியின் உள்ள படிவளர் குழியின் உள்ள மதுவள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்”**

என்ற கம்பராமாயணப் பாடல் வாயி லாக, வயல்களில் நெல்லோடு, சோலை களில் மலர் சாகுபடியும், தோட்டங்களில் பழச்சாகுபடியும், மானாவாரி நிலங்களில் புன்செய் பயிரும், பதிய மிடப்பட்ட கொடிப் பயிர்களும், படர்ந்து விளையக் கூடிய காய்கறிப் பயிர்களும் சாகுபடி செய்து பண்டைய உழவர்கள் பயன் பெற்றனர் என்பது அறியப்படுகிறது. அதிக வருமானம் தரவல்ல தோட்டக்கலைப் பயிர்களை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**18) வறண்ட நிலங்களில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாடு**

குறைந்த அளவு நீரினைப் பயன்படுத்தி வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய ஊட்டச்சத்து நிறைந்த அத்தி, கொடுக்காப்புளி, பெருநெல்லி, விளாம்பழம், இலந்தை, டிராகன் பழம் போன்ற பயிர்களைப் பயிரிடுதல், நீர் சேமிப்பு ஆதாரம் ஏற்படுத்துதல், வயல்களில் நீர் ஆவியாவதைக் குறைத்திட நெகிழி நிலப்போர்வை வழங்குதல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்குவதற்காக,

ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், பல்லாண்டுப் பயிர்களுக்குள் ஊடுபயிர் சாகுபடி செய்வதனை ஊக்குவித்து விவசாயி களுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்திடவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்படும்.

**19) தோட்டக்கலைப் பயிர் சாகுபடியினை ஊக்குவித்தல்**

தோட்டக்கலைப் பயிர்களை, உகந்த காலநிலையில் சாகுபடி செய்யும் பொழுது தரமான விளைபொருட்கள் விளைந்து அவற்றின் சந்தை மதிப்பும் கூடுகிறது. உதாரணமாக, கொடைக்கானல் மலைப்பூண்டு, இராமநாதபுரம் முண்டு மிளகாய், சாத்தூர் சம்பா மிளகாய், கொல்லி மலை மிளகு, கன்னியாகுமரி இலவங்கப் பட்டை, தேனி ஏலக்காய், கோயம்புத்தூர் ஜாதிக்காய், கோகோ போன்றவை நுகர்வோர்களால் அதிக அளவில் விரும்பப்படுகின்றன. விவசாயிகளின் கோரிக்கையின்படி, புவிசார் குறியீடு பெறப்பட்ட முண்டு மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குச் சாகுபடி மானியம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

மேற்கண்ட பகுதி சார்ந்த தோட்டக்கலைப் பயிர்களுக்கான சாகுபடியினை அதிகரித்திடும் விதமாக, **2 கோடியே 70 இலட்சம் ரூபாய்** ஒதுக்கீட்டில் தரமான நடவுச்செடிகள் மானியத்தில் வழங்கப்படும்.

**20) ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம்**

**“மல்லல் அம் தெங்கு இள நீர் பெய் பண்டியும் மெல் இலைப் பண்டியும் கமுகின் மேதகு பல் பழுக்காய்க் குலை பெய்த பண்டியும் ஒல்குதீம் பண்டம் பெய்து ஒழுகும் பண்டியும்”**

என, தேங்காய், இளநீர், வெற்றிலை, பாக்கு, இனிய பண்டங்கள் ஏற்றிய வண்டிகள் சென்றன என்று சீவக சிந்தாமணி செப்புவதன் மூலமும், **“தெங்கின் இளநீர் உதிர்க்கும் வளமிகு நன்னாடு”** என்று புறநானூறு கூறுவதன் மூலமும் தென்னையின் சிறப்பினை நாம் உணரலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தென்னை சாகுபடியை, 10,000 ஏக்கர் பரப்பில் புதிதாக ஊடுபயிர் சாகுபடி மேற்கொள்ள, **ஏழு இலட்சம் தரமான தென்னை நாற்றுக்கள்,**

**4 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதியில் வழங்கப்படும்.** தென்னை பயிரிட்டு, ஐந்து வருடம் வரையிலான தென்னந்தோப்புகளில் வாழையும், நன்கு வளர்ந்த தென்னந்தோப்புகளில் ஜாதிக்காயும் ஊடுபயிராகப் பயிரிட,

**5 கோடியே 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.** தென்னை நாற்றங்கால்கள் அமைத்தல், நாற்றங்கால் மேம்பாடு, பழைய தென்னந்தோப்புகளைப் புதுப்பித்தல், தென்னங்கழிவுகளை மக்கச் செய்து இயற்கை உரங்களாக மாற்ற இயற்கை உரம் தயாரிக்கும் கூடம் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்குவதோடு தென்னை சார்ந்த தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிவதற்கு ஏதுவாக, விவசாய நிலங்களிலும், தென்னை நாற்றங்கால்




மையங்களிலும், தென்னை செயல் விளக்கத் திடல்கள் அமைத்து உற்பத்தியினை அதிகரித்திட வழிவகை செய்யப்படும். இதற்கென, **12 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தென்னை சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்களை, உரிய நேரத்தில் குறித்த அளவில் அளிப்பதால் தென்னையில் உற்பத்தித்திறன் அதிகரிக்கும் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் 25,000 ஏக்கர் பரப்பில் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்படும். இதற்கென 12 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தென்னையில் கேரளா வேர் வாடல் நோயினையும், வெள்ளை ஈக்களையும் கட்டுப்படுத்தத் தேவையான ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை உத்திகளை, விவசாயிகளுக்கு வழங்கிட, ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

உரிய நேரத்தில் தேங்காயினை அறுவடை செய்தல், சூரிய சக்தி மின் உலர்த்திக் கூடத்தில் உலர்த்துதல், எண்ணெய் தயாரித்தல் முதலியன ஐந்து தென்னை நாற்றுப் பண்ணைகளில் செயல்விளக்கமாக நிறுவப்பட்டு, விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

**21) நுண்ணீர்ப் பாசனத் திட்டம்**

பாசன நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, பயிர் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்தவும், பயிரின் உற்பத்தி, உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், நுண்ணீர்ப் பாசனத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 6 இலட்சத்து 91 ஆயிரம் ஏக்கர் பரப்பில் 2,114 கோடியே 32 இலட்சம் ரூபாய் நிதியில், 2 இலட்சத்து 82 ஆயிரம் விவசாயிகள் பயனடையும் வகையில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. 2024-2025ஆம் ஆண்டில், 2 இலட்சத்து 22 ஆயிரம் ஏக்கர் பரப்பில், ஒரு இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 232 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒன்றிய நிதியுடன், 540 கோடியே 73 இலட்சம் ரூபாய் மாநில நிதியை ஒருங்கிணைத்து **773 கோடியே 23 இலட்சம் ரூபாய்** நிதி ஒதுக்கீட்டில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்படும். இத்திட்டத்தில் நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்பட்டு, நிலத்தடி நீர் அதிகமாகக் குறைந்து வரும் குறு வட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**22) அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், விவசாயிகளின் நிலங்களில் தானியங்கி மின்னணு பாசன வசதிகள் ஏற்படுத்துதல்**

விவசாயப் பணிகளுக்கு வேலை ஆட்கள் கிடைப்பதில் மிகுந்த சிரமம் உள்ளதால், தானியங்கி முறை மூலம் நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை இயக்கி பாசன நீரை பயிரின் தேவைக்கு ஏற்ப துல்லியமாக வேர்ப்பகுதியில் நேரடியாக அளிப்பதை ஊக்குவிக்கும் வகையில், தானியங்கி அமைப்புகளை நிறுவுவதற்கு, மானியம் வழங்கப்படும். இதற்கென, 2024-2025ஆம் ஆண்டில் **12 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

மேலும், அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் பாசன நீர் பயன்பாட்டுத் திறனை அதிகப்படுத்த, முதற்கட்டமாக 10 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தானியங்கி நீர்ப்பாசன அமைப்புகள் நிறுவப்பட்டு, அவை மாதிரிப் பண்ணைகளாகவும் செயல்படும்.

**23) தோட்டக்கலைப் பண்ணை இயந்திரக் கண்காட்சி**

தோட்டக்கலைப் பயிர்களில் இயந்திரங்களின் பயன்பாடு மிகவும் இன்றியமையாததாக உள்ள நிலையில், நிலம் சீர்செய்தல் முதல் அறுவடை பின்செய் மேலாண்மை வரையில் பயன்படுத்தப்படும் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட, கண்காட்சி ஒன்று நடத்தப்படும். இதனால், விவசாயிகள், தோட்டக்கலை தொழில்முனைவோர்கள், அலுவலர்கள் ஆகியோர் பயனடைவர். இக்கண்காட்சி 10 கோடி ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில நிதியில் நடத்தப்படும்.

**24) முக்கனி மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம்**

**“முந்துமுக் கனியின் நானா முதிரையின் முழுத்த நெய்யின் செந்தயிர்க் கண்டங் கண்டம் இடையிடை செறிந்த சோற்றின்”** என்று கம்பராமாயணத்தில் விருந்தோம்பலை எடுத்துக்கூறுமிடத்து, மா, பலா, வாழை என்னும் முக்கனிகள், பலவகைப்பட்ட பருப்புகள், நெய், செந்நிற தயிர்க் கட்டிகளுடன் பரிமாறப்பட்ட அமுதம் போன்ற உணவினை உறவினர்களுடன் சேர்ந்து மக்கள் உண்கின்றனர் என்கிறார் கம்பர்.

இக்கனிகள் அவற்றின் சுவைக்காக வும், ஊட்டச்சத்துகளுக்காகவும் எல்லோராலும் விரும்பப்படுவதால், அவற்றின் பரப்பினையும் உற்பத்தியினையும் அதிகரித்து, அனைவருக்கும் கிடைக்கும் வகையில் மா, பலா, வாழை பயிரிடும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**i) மா: “கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம் பழன வாளை கதூஉ மூரன்”**

என, வயல் அருகில் உள்ள மா மரத்திலிருந்து, பழுத்துத் தானாக விழுகின்ற இனிய பழங்களை வாளை மீன்கள் கவ்வி உண்ணும் வளமிக்க நாட்டினைப் பற்றிக் குறுந்தொகையும்,

**“அடுமகள் முகந்த அளவா வெண்ணெல் தொடிமாண் உலக்கைப் பருஉக்குற்று அரிசி காடி வெள்ளுலைக் கொளீஇ நீழல் ஓங்குசினை மாவின் தீங்கனி நறும்புளி”** என, அரிசியால் ஆக்கிய சோற்றை, புளித்த நீருள்ள உலையில் பெய்து, மிகுந்த நிழல் தரும் கிளைகளையுடைய மாமரத்தின் இனிய மாம்பழங்களைப் பிசைந்து செய்த மணமுள்ள புளிக்குழம்பும் இட்டு உண்டதாகக் கூறி,

பண்டைய உணவில் மாம்பழம் புளிப்பு சுவையளிக்கப் பயன்படுத்தப்பட்டதைப் புறநானூறும் விவரிக்கின்றன. முக்கனிகளில் முதற்கனியான 'மா' வில், தென்னாட்டு இரகங்களான பாதிரி, நீலம், பெங்களூரா, ருமானி, மல்கோவா, பங்கனப்பள்ளி போன்ற விருப்பத்திற்குரிய இரகங்களைக் கொண்டு 4,380 ஏக்கரிலும், ஏற்றுமதிக்கேற்ற இரகங்களான இமாம் பசந்த், இரத்தினகிரி அல்போன்ஸோ, சிந்து போன்ற இரகங்களைக் கொண்டு புதிதாக 250 ஏக்கரிலும் மாந்தோப்புகள் உருவாக்கப்படும். நன்னெறி வேளாண் நடைமுறை, உற்பத்தி முதல் விற்பனை வரை ஒவ்வொரு நிலையிலும் ஏற்றுமதிக்குரிய வகையில் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும்.

கவாத்து செய்வதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு, 26 ஆயிரத்து 540 ஏக்கர் பரப்பிலான பழைய தோட்டங்களைப் புது ப்பித்து அதிக விளைச்சல் தரும் தோட்டங்களாக மாற்றிட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

மேலும், மா பயிரிட்டுள்ள விவசாயி களுக்கு வளர்ச்சி ஊக்கிகள், உயிர் உரங்கள், உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான செயல்விளக்கத்திடல்கள், 6,175 ஏக்கர் பரப்பிற்கு மானியத்தில் வழங்கப்படும்.

**2024-2025ஆம் ஆண்டில் 'மா' விற்கான சிறப்புத்திட்டம், 27 கோடியே 48 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

**ii) வாழை:** உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழைக்கான தேவை அதிகரித்துள்ளதால் வாழை உற்பத்தியை அதிகரிக்க, 5,220 ஏக்கரில் வாழை பரப்பு விரிவாக்கம் செய்யப்படும். விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க, குலைகொண்ட வாழைகள் காற்றில் விழுந்து சேதமடைவதைத் தடுக்கும் வகையில் 3,700 ஏக்கரில்கழிகளைக்கொண்டுமுட்டுக்கொடுத்தல்




மேற்கொள்ள மானியம் வழங்கப்படும். சேதம், கறைகளற்ற தரமான வாழைத்தார்கள் உற்பத்தி செய்து அதிக விலை கிடைக்கப்பெறும் வகையில், வாழைத்தார் உறைகள் **4,440 ஏக்கருக்கு வழங்கப்படும். 2024-2025ஆம் ஆண்டில் வாழைக்கான சிறப்புத்திட்டம், 12 கோடியே 73 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.**

**iii) பலா:** 2023-2024ஆம் ஆண்டில், 1,850 ஏக்கர் பரப்பில் செயல்படுத்தப்பட்டதன் தொடர்ச்சியாக, 2024-2025ஆம் ஆண்டிலும், பலாவில் உள்ளூர் இரகங்கள் 620 ஏக்கரிலும், புதிய இரகங்கள் 620 ஏக்கரிலும் பரப்பு விரிவாக்கம் செய்யவும், பலா விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த உரம், பூச்சி மேலாண்மைக்கான இடுபொருட்கள், பயிற்சிகள் வழங்கவும், பலா பதப்படுத்தும் கூடங்கள் அமைக்கவும், ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**25) குளிர்மண்டலப் பழப்பயிர்களின் பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல்**

கொடைக்கானலில் பயிரிடப்பட்டுள்ள பேரிக்காய், பிளம்ஸ் போன்ற குளிர் மண்டல பழப்பயிர்களின் பழைய இரகங்களை, புதிய இரகங்களைக் கொண்டு ஒட்டுக்கட்டுதல் மூலம் புதுப்பித்து மரங்களின் மகசூலை அதிகரித்திட மானியம் வழங்கப்படும். இத்திட்டம், 370 ஏக்கர் பரப்பளவில், 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**26) புதிய அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், பூங்காக்கள் அமைத்தல்**

**i) முல்லைப் பூங்கா:** ஐவகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றான காடும் காடு சார்ந்த இடத்தைச் சேர்ந்த முல்லை நிலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்வியல், புவியியல் நிலைகளை எடுத்துக்காட்டும் விதமாக, முல்லைப் பூங்கா கன்னியாகுமரியில் உள்ள வேளிமலையில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**ii) மருதம் பூங்கா:** வயலும் வயல் சார்ந்த இடத்தைச் சேர்ந்த மருத நில மக்களின் வாழ்வியலையும், மரங்களையும், செடிகளையும் எடுத்துக்காட்டும் வகையில் காவிரி ஆற்றின் படுகையில் வளம் செறிந்த வயல் வெளிகள் நிறைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமலைச் சமுத்திரம் என்ற இடத்தில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் “மருதம் பூங்கா” அமைக்கப்படும்.

**iii) சூரியத் தோட்டம்:** தமிழ்நாட்டில் பிரபல சுற்றுலாத்தலமாக கன்னியாகுமரி விளங்குகிறது. கன்னியாகுமரியில் சூரிய உதயப்புள்ளிக்கும் மறைவுப் புள்ளிக்கும் இடையே ஒரு தோட்டம் அமைத்தால் அது பார்வையாளர்களை மிகவும் கவரும். இதனைக் கருத்தில் கொண்டு, கடற்கரை அருகில் **சூரியத் தோட்டம், 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

**iv) செம்பருத்தி நடவுச்செடிகள் உற்பத்தி மையம்:** செம்பருத்தி, உணவு, அழகு சாதனப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள் போன்றவை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது. மேலும், செம்பருத்திப் பூ இதழ்களிலிருந்து தயாரிக்கப்படும் தேநீர், இரத்த அழுத்தம், மன அழுத்தம், கொழுப்பு, உடல் எடை ஆகியவற்றைக் குறைக்க உதவுகிறது. இத்தகைய சிறப்புமிக்க செம்பருத்தியை பொதுமக்களிடம் கொண்டு செல்ல, செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில், ஒரு கோடி ரூபாய் செலவில் செம்பருத்தி நடவுச்செடிகள் உற்பத்தி மையம் அமைக்கப்படும்.

**v) நடுவக்குறிச்சியில் புதிய அரசு தோட்டக்கலைப் பண்ணை:** இனத்தூய்மையான, தரமான நடவுச் செடிகளை உரிய நேரத்தில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்கவும், விவசாயிகளுக்கு மாதிரி செயல் விளக்கப் பண்ணையாகச் செயல்படவும், தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம், நடுவக்குறிச்சி கிராமத்தில் நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் புதிய அரசுத் தோட்டக்கலைப் பண்ணை, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## கூட்டுறவு பயிர்க் கடன் வழங்க ரூ.16,500 கோடி இலக்கு!

**vi) ஊட்டி ரோஜா பூங்காவில் புதிய ரோஜா இரகங்களை அறிமுகம் செய்தல்**

உதகையில் அரசு ரோஜா பூங்காவில் பெரிய, சிறிய வகை ரோஜாக்கள், கொடி ரோஜா போன்ற 4,201 வகைகளை உள்ளடக்கிய 32,000 ரோஜாச் செடிகள் உள்ளன. இந்த உலகப் புகழ் பெற்ற அரசு ரோஜா பூங்காவில் ஆண்டுக்கு சராசரியாக 10 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்து அனைத்து வகையான ரோஜாக்களையும் கண்டு மகிழ்கின்றனர். இப்பூங்காவின் ரோஜா தொகுப்பினைச் செறிவூட்டும் வகையில், முதற்கட்டமாக, 100 புதிய இரக ரோஜா வகைகள் நடவு செய்யப்பட்டு சுற்றுலாப் பயணிகளை மேலும் கவரும் வண்ணம் இப்பூங்கா மேம்படுத்தப்படும்.

**27) மூலிகைப் பயிர் சாகுபடியை ஊக்குவித்தல்**

பாரம்பரிய மருத்துவத்தின் மகத்துவத்தை மக்கள் உணர்ந்துள்ளதால், மூலிகைப் பயிர்களின் பயன்பாடு தற்போது அதிகரித்துள்ள சூழ்நிலையில், மூலிகைப் பயிர் சாகுபடியை ஊக்குவிக்கவும், மூலிகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உதவவும், கண்வலிக் கிழங்கு (செங்காந்தள்), சென்னா, நித்தியகல்யாணி, மருந்துக்கூர்க்கன் (Coleus) போன்ற மூலிகைப் பயிர்களை 1,680 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கு, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**28) ஒருங்கிணைந்த முந்திரி வளர்ச்சித் திட்டம்**

தமிழ்நாட்டில், முந்திரி இரண்டு இலட்சத்து ஏழாயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, ஆண்டிற்கு சுமார் 43,500 மெட்ரிக் டன் முந்திரிப் பருப்பு உற்பத்தியாகிறது. மேலும், 4 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு முந்திரி பதப்படுத்தும் வசதிகள் இருந்தும், அதற்கான மூலப் பொருளான முந்திரி 10 சதவீதம் மட்டுமே இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, முந்திரி சாகுபடிப் பரப்பை அதிகரித்து உற்பத்தியை உயர்த்திட, 2 கோடியே 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், தரமான முந்திரியை விளைவிக்க இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் 2,470 ஏக்கர் பரப்பளவில் செயல் விளக்கம் அமைத்திட, ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**29) மிளகாய் பயிர் ஊக்குவிப்புத் திட்டம்**

கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, 2,470 ஏக்கர் பரப்பில் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட்டு மிளகாய் பயிரிடப்பட்டது. 2024-2025ஆம் ஆண்டிலும், மிளகாய் மண்டலம் ஏற்படுத்தப்பட்ட பகுதிகளான இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி, மாவட்டங்களில் மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க, 1,230 ஏக்கர் பரப்பில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்டு மிளகாய் சாகுபடி செய்யப்படும். மேலும், நெல், இதர தானியங்களின் அறுவடைக்குப்பின்பு, 3,700 ஏக்கர் பரப்பளவில் மிளகாய் பயிரிட ஊக்குவிக்கப்படும். இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் தேவைப்படும் இடங்களில் 200 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டு நீர் ஆதாரங்கள் ஏற்படுத்தப்படும். இதற்கென, **3 கோடியே 67 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**30) மரவள்ளியில் மாவுப்பூச்சியினைக் கட்டுப்படுத்துதல்**

மரவள்ளி அதிகமாகப் பயிரிடும் மாவட்டங்களில் ஏற்படும் மாவுப்பூச்சி தாக்குதலால் உற்பத்தி குறைந்து, விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக ஒருங்கிணைந்த உர, பூச்சி மேலாண்மைக்காக 21,000 ஏக்கருக்கு, ஒரு கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கப்படும்.

**31) பேரீச்சை சாகுபடி**

இரும்பு சத்து அதிகமுள்ள பேரீச்சை சாகுபடியை தமிழ்நாட்டில் 250 ஏக்கர் பரப்பில் விரிவாக்கம் செய்ய, 30 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**32) கொய்யாவில் பூச்சி மேலாண்மை**

கொய்யாவில் அறுவடைக் காலங்களில் உருவாகும் பழ ஈக்களால் அதிக சேதம் ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக 10,000 ஏக்கருக்கு இனக்கவர்ச்சிப் பொறிகள் வழங்கிட, 50 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கப்படும்

**33)பந்தல் காய்கறிகள் ஊக்குவிப்புத் திட்டம்**

பந்தல் காய்கறிகளான பாகல், புடல், பீர்க்கன், சுரை போன்ற கொடி வகைக் காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கவும், உற்பத்தித்திறனை மேம்படுத்தவும், தரமான விளைபொருட்களைப் பெறவும் உயர் தொழில்நுட்பமான நிரந்தரப் பந்தல் அமைப்பது இன்றியமையாதது. **2024-2025ஆம் ஆண்டில், 770 ஏக்கர் பரப்பளவில், 9 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிரந்தரப் பந்தல் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.**

**34)பாரம்பரிய இரகங்களுக்குமுக்கியத்துவம்**

அன்னை ஊட்டிய அமுதினைக் கண்முன்னே நிறுத்தும் சிறப்புடைய பாரம்பரிய காய்கறி இரகங்களை தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து மீட்டெடுத்து விவசாயிகளிடையே அந்த இரகங்களை ஊக்குவிக்கும் வகையிலும், 2,470 ஏக்கர் பரப்பு விரிவாக்கம் செய்யவும், 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**35) அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நடவுச்செடிகள் விற்பனை மையம்**

அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தோட்டக்கலை நடவுச் செடிகள், உயிர் உரங்கள், மண்புழு உரம், உயிரி பூச்சிக்கொல்லிகள், தோட்டக்கலை விளைபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களோடு, வீட்டுத் தோட்டத்திற்குத் தேவையான மண்தொட்டிகள், செடிவளர்ப்புப் பைகள், கருவிகள் ஆகியவையும் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்குமாறு விற்பனை செய்ய, முக்கிய சாலைகளை ஒட்டி அமைந்துள்ள பத்து அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தோட்டக்கலை விற்பனை மையங்கள், ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**36)வட்டாரம் தோறும் தோட்டக்கலைப் பயிர்களுக்கான செயல் விளக்கம்**

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட வருவாய் கிராமங்களில் உள்ள விவசாயிகளை ஊக்குவிக்க, வட்டாரத்திற்கு ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களின் திட்டக்கூறுகளும் ஒரு விவசாயியின் நிலத்தில் ஒரு எக்டர் பரப்பளவில் செயல்விளக்கத் திடலாக அமைக்கப்படும். இதனால், அக்கிராமத்திலும் வட்டாரத்திலும் உள்ள அனைத்து விவசாயிகளும் தொழில்நுட்பச் செயலாக்கத்தை நேரில் கண்டறிந்து, பின்பற்றிட வழிவகை செய்யப்படும்.

**37)தொகுப்பு முறை சாகுபடியினை தொழில்நுட்ப ஆலோசனைகள் மூலம் வலுப்படுத்துதல்**

2023-2024ஆம் ஆண்டு முதல் தொகுப்பு முறை சாகுபடியினை ஊக்குவிக்கும் விதத்தில் செயல்படுத்தப்பட்டு வரும், மல்லிகை இயக்கம், பலா இயக்கம், மிளகாய் இயக்கம், கறிவேப்பிலை இயக்கம் ஆகிய இயக்கங்களை வலுப்படுத்துவதற்காக, நவீன உயர் தொழில்நுட்பச் சாகுபடிகுறித்தஆலோசனைகள்விவசாயிகளின் தேவைக்கேற்பத் தோட்டக்கலைத்துறை வல்லுநர்களால் தொடர்ந்து வழங்கப்படும்.

**38) வட்டார அலுவலகங்களில் தகவல் மையம் ஏற்படுத்தி விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்.**

உற்பத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கக்கூடிய சாகுபடித் தொழில்நுட்பங்கள், புதிய உயர் விளைச்சல் இரகங்கள், சந்தை வாய்ப்புகள், அதற்குரிய அரசுத் திட்டங்கள் குறித்த தகவல்கள் விவசாயிகளுக்கு எளிதாகக் கிடைத்திட, ஒவ்வொரு தோட்டக்கலை வட்டார அலுவலகத்திலும் தகவல் மையம் அமைக்கப்படும்.

**39) பருவமில்லா காலங்களிலும் முருங்கை உற்பத்தி**

தமிழ்நாட்டில் முருங்கை 51,800 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டாலும் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரை முருங்கைக் காய்களின் வரத்து குறைவாகவே உள்ளது. நெகிழி விரிப்பான் கொண்டு முருங்கை மரத்தினை மூடுவதால் இலைகள், பூக்கள் உதிர்வதைத் தடுத்து பருவமில்லா காலங்களிலும் உற்பத்தியை உறுதி செய்திடும் நோக்கில், முதல்கட்டமாக இத்தொழில்நுட்பம் சிறிய அளவில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் சோதனை முறையில் செயல்படுத்தப்படும்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# மொத்த சாகுபடி பரப்பளவு 155 லட்சம் ஏக்கராக அதிகரிப்பு!

## வேளாண் நிதிநிலை அறிக்கை!... 5ஆம் பக்கத் தொடர்ச்சி

**வேளாண்மைப் பொறியியல் துறை**

**40) வேளாண் இயந்திரமயமாக்குதல்**

**'பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்**
**உடும்பு முக முழுக்கொழு மூழ்க ஊன்றி'**

என்ற பெரும்பாணாற்றுப்படை தொடரில் பண்டைய காலத்திலேயே நிலத்தை உழ 'ஏர்' கருவி பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதன் மூலம் வேளாண்மையில் கருவிகளின் பயன்பாடு உணர்த்தப்பட்டுள்ளது.

வேளாண்மைத் தொழிலை ஆட்பற்றாக்குறையினால் நலிவுறாமல் காப்பதற்கு வேளாண் இயந்திரமயமாக்குதல் இன்றியமையாதது என்பதால், வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம் தற்போது பெருமளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் விளையும் பயிர்களுக்கு ஏற்ற உழவு, நடவு, களையெடுத்தல், பயிர் மேலாண்மை, அறுவடை, பயிர்க்கழிவு மேலாண்மை போன்ற பணிகளை மேற்கொள்ள, பல்வேறு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, டிராக்டர், சுழற் கலப்பை, வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி, நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், களையெடுக்கும் கருவி, தெளிப்பான்கள், டிரோன், நெல் அறுவடை இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற வேளாண் இயந்திரங்கள், கருவிகள், விளைபொருட்களை உலரவைத்து மதிப்புக் கூட்டிட சூரிய கூடார உலர்த்திகள் ஆகியவை விவசாயிகள் பயனடையும் வகையில் மானியத்தில் வழங்கப்படும்.

மேலும், சிறு, குறு விவசாயிகள் தங்கள் சிறிய நிலப்பரப்பில் வேளாண் பணிகளைத் தாங்களே மேற்கொள்ள உதவும் வகையில், நடப்பாண்டில் பவர் டில்லர்கள், பவர் வீடர்கள் மொத்தம் 5,000 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, **2024 - 2025ஆம் ஆண்டில், பவர் டில்லர்களின் மானியத் தொகையானது 85 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டு, பவர் டில்லர்கள் 4,000 விவசாயிகளுக்கும், பவர் வீடர்கள் 4,000 விவசாயிகளுக்கும் வழங்கப்படும்.**

வயல்வெளிகளில் இரவு நேரங்களில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பாம்புக்கடிப் பிரச்சினை, மழைக்காலங்களில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்திடும் வகையில், தங்களது கிணறுகளுக்குச் செல்லாமலேயே மின்சார இணைப்பு பம்புசெட்டுகளை எங்கிருந்தாலும் எளிமையாக இயக்கவும், அவற்றின் இயக்கத்தினைக் கண்காணிக்கவும் கைபேசியால் இயங்கும் தானியங்கி பம்புசெட்டு கட்டுப்படுத்தும் கருவிகளை 10,000 விவசாயிகள் வாங்கிப் பயனடையும் வகையில், 50 சதவீத மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ஏழாயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும்.

**வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில் 26 ஆயிரத்து 179 விவசாயிகள் பயனடையும் வகையில், 20242025ஆம் ஆண்டில் 170 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**41) எளியோர்க்கென இயந்திர வாடகை மையங்கள்**

விவசாயிகளிடையே அதிகரித்து வரும் வேளாண் இயந்திரத் தேவையினை நிவர்த்தி செய்து, உயர்மதிப்பு வேளாண் இயந்திரங்கள் பயன்பாட்டினை ஊக்குவிக்க, தனியார் வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க விவசாயிகள், ஊரகத் தொழில்முனைவோர்கள், விவசாயச் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, பல்வேறு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, **2024-2025ஆம் ஆண்டில், 207 வேளாண் இயந்திர வாடகை மையங்கள், மொத்தம் 32 கோடியே 90 இலட்சம் ரூபாய் மானியத்தில் அமைக்கப்படும்.**

மேலும், தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர்கள், விவசாயிகளை ஒருங்கிணைத்திட "தனியார் வேளாண் இயந்திரங்கள் வாடகை சேவை கைபேசி செயலி", 50 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

**42) வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர வாடகை திட்டத்தினை வலுப்படுத்துதல்**

வேளாண்மைப் பொறியியல் துறையின் 2,700 வேளாண் இயந்திரங்கள், கருவிகள், இவாடகை ஆன்லைன் செயலி மூலமாக விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிக்கு மேலும் வலு சேர்க்க, 2024 - 2025ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

i) 85 மண்தள்ளும் இயந்திரங்களை எடுத்துச் செல்வதற்காக, 20 கனரக வாகனங்கள் கொள்முதல்,

ii) வேளாண் இயந்திரங்கள், உபகரணங்களைப் பாதுகாக்க, பழுது நீக்க, 25 வட்டாரங்களில் வேளாண் இயந்திரக் கூடாரங்கள்,

iii) 10 டிராக் வகை நெல் அறுவடை இயந்திரங்கள், 10 நெல் அறுவடை இயந்திரத்தினை சுமந்து செல்லும் வாகனங்கள் கொள்முதல்,

iv) அதிக தேவையுள்ள வேளாண் கருவிகள், மண் அள்ளும் இயந்திரங்களுக்கான உதிரி பாகங்கள், கிரேன்கள், மின்சார ஜெனரேட்டர்கள் கொள்முதல்,

v) வேளாண் இயந்திரங்களைச் சுத்தம் செய்து, பயன்படுத்தத் தேவையான வேளாண் இயந்திரங்கள் பராமரிப்புக்கான தொகுப்புகள் கொள்முதல்,

ஆகிய பணிகளை மேற்கொள்ள **மொத்தம் 28 கோடியே 82 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**43) சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் வாங்கிடக் கூடுதல் மானியம்**

பல்வேறு கருத்துக்கேட்புக் கூட்டங்களில், உழவர் பெருமக்கள் கோரியபடி, வேலையாட்கள் பற்றாக்குறை காரணமாக குறித்த நேரத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்வதில் சிறு, குறு விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கும் வகையில், நெல் நாற்று நடவு இயந்திரங்கள் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை வாங்கிப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க, நடைமுறையிலுள்ள 50 சதவீத மானியத்துடன் கூடுதலாக 10 சதவீத மானியம் சேர்த்து, மொத்தமாக 60 சதவீத மானியம் வழங்கிட, 2024-2025ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**44) நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள்**

கொள்முதலுக்கு ஏற்றவாறு நெல்லின் ஈரப்பதத்தைக் குறைப்பதன் மூலம் நெல்லின் சேமிப்புக் காலம் அதிகரிக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தில், தனிப்பட்ட விவசாயிகள், விவசாய சுய உதவிக் குழுக்கள், விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில் முனைவோர்களுக்கு, 10 நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்கிட, 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**45) வேளாண் இயந்திரங்களைப் பரவலாக்குதலுக்கான நடவடிக்கைகள்**

விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகளை இயக்குதல், பராமரித்தல் தொடர்பான மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் நடத்தப்படுவதோடு, தொழில்நுட்பக் கையேடும் தயார் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கும், கள அலுவலர்களுக்கும் பகிரப்படும்.

**46) நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் செயல்விளக்கம்**

நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் 30 இலட்சம் ரூபாய் செலவில் அரசு இயந்திரக் கலப்பை பணிமனைகளில் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்வதுடன், குறைந்த வாடகைக்கும் வழங்கப்படும்.

மேலும், புதுமையான வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடத்தில் ஊக்குவிக்கும் பொருட்டும், அத்தொழில்நுட்பங்களுக்கு ஒன்றிய அரசின் திட்டங்களின் கீழ் மானியம் வழங்கிட ஆவன செய்திடவும், 2024 -2025ஆம் ஆண்டில் பல்வேறு தனியார், அரசு, ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, புதுமையான தொழில்நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்கள் நடத்தப்படும்.

**47) பயிர்களைக் காத்திட சூரிய சக்தி மின் வேலிகள்**

**"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு"** என்பது வள்ளுவர் வாக்கு.

வறட்சி, மழை, வெள்ளம், பூச்சித் தாக்குதல் போன்ற பல சவால்களுக்கிடையே, தான் இளைத்தாலும் பயிர்கள் செழிக்கப்பாடுபடும் விவசாயிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பது விளைந்த பயிர்களுக்கு விலங்குகளால் ஏற்படும் சேதாரமாகும். அதிகரித்து வரும் மனிதவிலங்கு மோதல்களால், பாடுபட்டு வளர்த்த பயிர்கள் பாழாகும் நிலையை மாற்றி, விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் ஆபத்தில்லாமல் பயிர்களைக் காத்திடும் நோக் கில், **2024 - 2025ஆம் ஆண்டில், 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விவசாயிகளுக்கு 75 ஆயிரம் மீட்டர் நீளத்திற்கு சூரிய சக்தி மின்வேலிகள் அமைத்துத் தரப்படும்.**

**48) நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைத்தல், பராமரித்தல்**

குளம் தொட்டு, வளம் பெருக்கி வாழ்ந்த தமிழ்நாட்டில், விவசாயத்திற்குத் தேவைப்படும் நீர்ப்பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு, மழை நீரைச் சேகரித்து, நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்க, புதிய நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைத்திடவும், ஏற்கனவே அமைக்கப்பட்ட நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைத் தூர்வாரி, ஆழப்படுத்தி அவற்றின் கொள்ளளவை அதிகரிக்கவும், 2024 - 2025ஆம் ஆண்டில், பல்வேறு நீர்வடிப்பகுதிகளில் 100 புதிய நீர்சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைக்கப்படுவதோடு, 500 நீர்சேகரிப் புக் கட்டமைப்புகளில் பராமரிப்புப் பணிகளும், 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.




**49) டெல்டா மாவட்டங்களில் "சி", "டி" பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாருதல்**

கடந்த இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்தியதைப் போலவே, மூன்றாம் கட்டமாக, 2024-2025ஆம் ஆண்டில், காவேரி, வெண்ணாறு, கல்லணை வடிநிலப்பகுதிகளில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், அரியலூர், திருச்சி ஆகிய ஏழு மாவட்டங்களில், ஒரு இலட்சத்து 57 ஆயிரம் ஏக்கர் பயன் பெறும் வகையில், 2,235 கிலோ மீட்டர் நீளத்திற்கு "சி", "டி" பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகள், 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**50) விவசாயிகளுக்கு மழை நீர் சேகரிப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மைப் பொறியில் துறையும், வேளாண் அறிவியல் நிலையங்களும் இணைந்து, விவசாயிகளுக்கு மழை நீர் சேகரிப்பு முறைகளான கோடை உழவு, பண்ணைக் குட்டை, தடுப்பணை போன்ற மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளின் முக்கியத்துவம், அவற்றினை பராமரித்தல் போன்றவை குறித்து துண்டு பிரசுரங்கள், காணொலிக் காட்சிகள், வானொலி செய்திகள், செயல் விளக்கங்கள், கருத்தரங்குகள், கிராம அளவிலான விவசாய முகாம்கள், கிராம சபைக் கூட்டங்கள், பட்டறிவுப் பயணங்கள் போன்ற உத்திகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும்.

**வேளாண்மை விற்பனை வேளாண் வணிகத் துறை**

வியர்வை சிந்தி, விளைந்த பலனை விவசாயிகள் முழுமையாக அடையும் நோக்கத்தினை ஈடேற்றும் வகையில், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் தொழில்நுட்பங்கள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், சந்தை இணைப்பு வழிமுறைகள், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், உழவர் சந்தைகள் வாயிலாக நியாயமான விலை, வெளிப்படையான வர்த்தகம், மின்னணு, இணைய வழி வர்த்தக நடைமுறைகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**51) தானியங்களை உலர்த்துவதற்கு நடமாடும் உலர்த்திகள்**

உணவு தானியங்களின் ஈரப்பதம் சரியான அளவில் பராமரிக்கப்பட்டு, நீண்ட நாட்களுக்கு வீணாகாமல் சேமித்து வைக்க ஏதுவாக, திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம், கடலூர், இராணிப்பேட்டை, திருவள்ளூர், தஞ்சாவூர் நாகப்பட்டினம், திருவாரூர், தேனி ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு, தானியங்களை உலர்த்துவதற்கான நடமாடும் உலர்த்திகள், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

**52) மஞ்சள் மெருகூட்டும் இயந்திரம்**

நாட்டின் முக்கியமான மஞ்சள் சந்தைகளில் ஒன்றானது ஈரோடு. அறுவடைக்குப்பின் மஞ்சளைப் பதப்படுத்தி, மெருகேற்றம் செய்வதன் மூலம் மஞ்சளின் சேமிப்புக்காலமும் தரமும் மேம்படுத்தப்படுகிறது. எனவே, மஞ்சள் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக மஞ்சளுக்கென ஐந்து மெருகூட்டும் இயந்திரங்களும், எட்டு மஞ்சள் வேகவைக்கும் இயந்திரங்களும், 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியில், ஈரோடு, கள்ளக்குறிச்சி, தருமபுரி மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்படும்.

**53) மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்குப் பொது முத்திரை, சிப்பமிடல் வசதிகள்**

விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திட, விளைபொருட்களைத் தனியார் நிறுவனங்களுக்கு நிகராக மதிப்புக்கூட்டி திறம்பட சந்தைப்படுத்தி, விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் தொழில்முனைவோர்களின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான பொது முத்திரை வடிவமைக்கப்படும். சிப்பம் கட்டுவதற்கும், முத்திரையிடுவதற்குமான பொதுக் கட்டமைப்பு வசதிகள் சென்னையிலும் கோவையிலும், 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**54) கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் பலா மதிப்பு கூட்டுதலுக்கான மையம்**

முக்கனிகளில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கும் பலாவில் நிறைவான ஆரோக்கியத்திற்குத் தேவையான சத்துக்கள் செறிந்துள்ளன. பலாவிலிருந்து பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதற்கென, பண்ருட்டியில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, பல்வேறு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை ஏற்றுமதித் தரத்தில் தயாரித்து விற்பனை செய்திட ஏதுவாக, பலா மதிப்புக்கூட்டுதலுக்கான மையம், 16 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒன்றிய, மாநில அரசு நிதியில் ஏற்படுத்தப்படும்.

**55) பெரம்பலூர் மாவட்டத்தில் சிறுதானியங்களுக்கான தொழில்நுட்ப வணிக மேம்பாட்டு மையம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம், சிறுதானியங்கள் பயிரிடும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில்நுட்ப வணிக மேம்பாட்டு மையம், 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இங்கு சிறுதானியங்கள், மக்காச்சோளம் மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், விவசாயிகள், சுய உதவிக் குழுக்கள், உழவர் ஆர்வலர் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும்.

**56) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கட்டமைப்பு வசதிகளைப் புதுப்பித்தல்**

தமிழ்நாட்டில் 2023-2024ஆம் ஆண்டில், 100 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கட்டமைப்புகளைப் புதுப்பிக்க, 47 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024-2025ஆம் ஆண்டில் 100 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் கட்டமைப்பு வசதிகள், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

**57) வேளாண் விளைபொருட்களுக்குப் புவிசார் குறியீடு**

**புவிசார் குறியீடு** பெறப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதால் அவற்றின் தேவை, ஏற்றுமதி அளவு ஆகியன அதிகரிக்கும். எனவே, நமது மண்ணின் அடையாளங்களான மாநிலத்தின் தனித்துவமான 25 வேளாண் விளைபொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெற கடந்த மூன்று ஆண்டுகளில், விண்ணப்பிக்கப் பட்டுள்ளது. இதே போல், 2024 - 2025ஆம் ஆண்டில் சத்தியமங்கலம் செவ்வாழை (ஈரோடு), கொல்லிமலை மிளகு (நாமக்கல்), மீனம்பூர் சீரக சம்பா (இராணிப்பேட்டை), ஐயம்பாளையம் நெட்டைத் தென்னை (திண்டுக்கல்), உரிகம்புளி (கிருஷ்ணகிரி), புவனகிரி மிதி பாகற்காய் (கடலூர்), செஞ்சோளம் (சேலம், கரூர்), திருநெல்வேலி அவுரி இலை (திருநெல்வேலி), ஓடைப்பட்டி விதையில்லா திராட்சை (தேனி), செங்காந்தள் (கண்வலி) விதை (கரூர், திண்டுக்கல், திருப்பூர்) ஆகிய 10 பொருட்களுக்குப் புவிசார் குறியீடு, 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெறப்படும்.

**58) அப்பீடா (APEDA) பயிற்சி பெற்ற விவசாயிகளை ஏற்றுமதியாளர்களாக்குதல்**

பல்வேறு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைக் கிணங்க, மா, தென்னை, சிறுதானியங்கள்,முருங்கை, மஞ்சள், சின்ன வெங்காயம், வெள்ளரி ஆகியவற்றைப் பயிரிடும், அப்பீடா பயிற்சி பெற்ற நூறு விவசாயிகளைத் தேர்வு செய்து, அவர்களை நூற்றுக்கு நூறு ஏற்றுமதியாளர்களாக மாற்றுவதற்கான உரிய சான்றிதழ்களைப் பெற்றுத் தரும் பொருட்டு, ஒரு நபருக்கு 15,000 ரூபாய் வீதம் 15 இலட்சம் ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**59)விளைபொருட்களின் விற்பனையை இணைய வழி வர்த்தகத் தளங்களுடன் இணைத்தல்**

புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கிட, இணையவழி வர்த்தக நிறுவனங்கள் வாயிலாக உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்குமான இணைப்பினை ஏற்படுத்தி விளைபொருட்களை விற்பனை செய்ய உகந்த சூழல் உருவாக்கப்படும். இதன் மூலம் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் வருவாயும், தரமான பொருட்கள் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையிலும் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

**60)வேளாண் வர்த்தக மேம்பாட்டிற்கான முனைப்புகள்**

விளைவித்த விவசாயியே விலை வைக்கும் நிலையினை உருவாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும். வர்த்தகம் மேம்பட விவசாயிகளின் விளைபொருட்கள் இருப்பையும், வர்த்தகர்களின் தேவையையும் இணைத்து சமூக வலைதளக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுடன் இணைக்கப்படும். அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்துதல், தரம் பிரித்தல், மதிப்புக் கூட்டுதல், ஏற்றுமதி வழிமுறைகள் போன்றவை குறித்து ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டு கிராமங்கள் வீதம் மாதம் ஒன்றிற்கு, 770 தீவிர விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு இரண்டாண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**61) பண்ணை வழி வர்த்தகத்தை ஊக்குவித்தல் (Facilitating Farm Gate Trade)**

## மேலும் 50,000 மின் இணைப்புகள்!

தமிழ்நாட்டிலுள்ள 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், 157 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் (eNAM) ஒருங்கிணைக்கப்பட்டு வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது வரை, 40 கோடி ரூபாய் மதிப்புள்ள 8,300 மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள் விவசாயிகளின் விளைநிலங்களிலேயே வணிகம் செய்யப்பட்டுள்ளன.

2024-2025ஆம் ஆண்டில் பண்ணை வழி வர்த்தகம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு 60 கோடி ரூபாய் மதிப்பிலான விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சிறந்த விலை கிடைக்க வழி வகை செய்யப்படும்.

**62) விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன் வரம்பினை உயர்த்துதல்**

அறுவடைக் காலங்களில் வேளாண் விளைபொருட்களின் அதிக வரத்து காரணமாக ஏற்படும் விலை வீழ்ச்சியைத் தவிர்க்க, விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பொருட்களை இருப்பு வைத்து, பொருளீட்டுக்கடன் பெறுகின்றனர். இவ்வாறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் பொருளீட்டுக்கடனின் வரம்பு, 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

**63) சேமிப்புக் கிடங்குகளுக்கு கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம்**

மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது (eNegotiable Warehouse Receipt) முறை 150 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலுள்ள சேமிப்புக் கிடங்குகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024 - 2025ஆம் ஆண்டில், கூடுதலாக 100 சேமிப்புக் கிடங்குகளுக்கு, கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன்பெற வழிவகை செய்யப்படும்.

**64) புத்தாக்க நிறுவனங்களை (Startup) ஊக்குவித்தல்**

வேளாண்மை, வேளாண் சார்ந்த தொழில் தொடங்கும் புத்தாக்க நிறுவனங்களைக் கண்டறிந்து, அவற்றின் நோக்கம், செயல்பாடு, வணிக திட்டத்தினை ஆய்வு செய்து, தகுதியுள்ள புத்தாக்க நிறுவனங்களுக்கு மானியம் அளித்து மேம்படுத்திட, 10 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**65) வேளாண் கண்காட்சிகள்**

2023-2024ஆம் ஆண்டில் சென்னையிலும், திருச்சியிலும் நடத்தப்பட்ட வேளாண் கண்காட்சிகளுக்கு விவசாயிகள், பொதுமக்களிடையே கிடைத்த பெரும் வரவேற்பினைத் தொடர்ந்து, 2024 - 2025ஆம் ஆண்டிலும், மூன்று இடங்களில் வேளாண் கண்காட்சிகள் நடத்தப்படும். இதற்கென 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை**

விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை இனி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்துறை என பெயர் மாற்றம் செய்யப்படும்.

**66) விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையினால்,**

- ஒருங்கிணைந்த விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு வளாகம் கரூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் அமைக்கவும்,




- விதை மரபணு தூய்மையை உறுதி செய்வதற்காக, தானியங்கி மூன்றாம் தலைமுறை டிஎன்ஏ மார்க்கர் அடிப்படையிலான தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆய்வகத்தை கோயம்புத்தூரில் அமைக்கவும்,
- தமிழ்நாட்டில் உயிர்மச் சான்றளிப்பை ஊக்குவிக்கும் வகையில், தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டு உயிர்ம நிலையை அடைந்த விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கிடவும்,
- தருமபுரி, காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி ஆகிய ஆறு விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு NABL (National Accreditation Board for Testing and Calibration Laboratories) தரச்சான்று பெற்றிடவும்,
- உயிர்ம விளைபொருட்களில் இருக்கும் நச்சுப்பொருட்களின் தன்மையினை விவசாயிகள் அறிந்து, அதன் தரத்தை உறுதிப்படுத்தி ஏற்றுமதி செய்ய, எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனை செய்வதற்கான கட்டணத்திற்கு முழு மானியம் வழங்கவும், 2024 - 2025ஆம் ஆண்டில் 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இது தவிர, முன்னணி விதை நிறுவனங்களின் விதைகள் மாற்றுப்பெயரில் சந்தையில் வராமல் கண்காணித்து, விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைக்கச்செய்யும் வகையில் புதிய பதிவு முறை அறிமுகப்படுத்தப்படுவதோடு, தனியார் நாற்றங்கால்களில் உற்பத்தி செய்யப்படும் நாற்றுகள், நடவுப்பொருட்களின் தரம், அவற்றுக்கான விதைகள் பெறப்பட்ட இடம் ஆகியவை விதைச்சட்டத்தின்படி உறுதி செய்யப்படும். அதிக விளைச்சலைத் தரும் தரமான வீரிய ஒட்டு மக்காச்சோள விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையில் சான்றளிப்பு, விதை ஆய்வு, விதைப்பரிசோதனை போன்ற நடவடிக்கைகள் விதைச்சட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை**

67) **பெரம்பலூர், தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, திண்டுக்கல், விருதுநகர்** ஆகிய ஏழு மாவட்டங்களில், 25 வட்டாரங்களிலுள்ள **275** நீர்வடிப்பகுதிகளில், **43 கோடி ரூபாய் மதிப்பீட்டில்** இயற்கை வள மேம்பாட்டுப் பணிகள், உற்பத்திப் பணிகள், வாழ்வாதாரப் பணிகள் ஆகியவை நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 2024-2025ஆம் ஆண்டில் ஒன்றிய, மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

68) **தோட்டக்கலைப் பயிர்களுக்கு வேளாண் இடுபொருட்களை துல்லியமாகத் தெளிக்கச் செய்வதற்கான ட்ரோன் தெளிக்கும் தொழில்நுட்பம்**

தோட்டக்கலைப் பயிர்களுக்கான வேளாண் இடுபொருட்களை ட்ரோன்கள் மூலம் துல்லியமாகத் தெளிக்கச் செய்வதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்கி, கிராமப்புர இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு, பயிற்சி, செயல் விளக்கத் திடல்கள் ஏற்படுத்தப்படும்.

**69) நீரிழிவு நோயாளிக்கு ஏற்ற, சத்துகள் செறிவூட்டப்பட்ட நெல் இரகங்களை உருவாக்குதல்**

குறைந்த சர்க்கரை அளவு குறியீடு (Low Glycemic Index), அதிக ஊட்டச்சத்து உள்ள பாரம்பரிய நெல் இரகங்களை மேம்படுத்தவும், நேரடி நெல் விதைப்பிற்கு ஏற்ற நெல் இரகங்களை, துரித இனப்பெருக்க முறை வாயிலாக உருவாக்கவும், தேவையான ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**70) மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, வெங்காயம் சாகுபடியில் இயந்திரமயமாக்கல்**

தமிழ்நாட்டில் மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, வெங்காய சாகுபடியினை இயந்திரமயமாக்குவதற்கு சாத்தியக்கூறு சோதனை, இயந்திரங்கள் உற்பத்தி, செயல்விளக்கங்கள் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்

# உணவு தானிய உற்பத்தி 116 மெட்ரிக் டன்னாக அதிகரிப்பு!

## வேளாண் நிதி நிலை அறிக்கை...

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

**71) நிலசம்பங்கி, செவ்வந்தி, ரோஜாவில் புதிய இரகங்களுக்கான ஆராய்ச்சி**

நிலசம்பங்கி, செவ்வந்தி, ரோஜா ஆகிய தோட்டக்கலைப் பயிர்களில் புதுமையான மரபியல் முறைகளைக் கையாண்டு, மேம்பட்ட பண்புகளைக் கொண்ட இரகங்களை உருவாக்குவதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டங்களுக்காக, 5 கோடியே 44 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**72) தமிழ்நாடு வேளாண் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEX)**

உணவு பதப்படுத்தும் திட்டத்தில், தற்போது வரை, 627 கோடியே 65 இலட்சம் ரூபாய் அளவிற்கான கடன், மொத்தம் 10,548 குழுக்களுக்கும் தனி நபர்களுக்கும் வழங்கப்பட்டு, மானியமாக 196 கோடியே 89 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. **நாட்டிலேயே இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்கு, ஒட்டு மொத்த செயல்பாட்டிற்கான விருதினை நம் மாநிலம் பெற்றுள்ளதை இம்மாமன்றத்தில் பெருமிதத்துடன் பதிவு செய்கிறேன்.**

தமிழ்நாடு வேளாண் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 2024-2025ஆம் ஆண்டில்,

i) தருமபுரி, திண்டுக்கல், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள வேளாண் முதன்மை பதப்படுத்தும் மையங்களின் பயன்பாட்டை அதிகரிக்க அவற்றில் மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் தொழில் கூடங்களும்,

ii) வேளாண் தொழில் பெருந்தடமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான தஞ்சாவூரில் வேளாண் விளை பொருட்கள், கழிவுகளிலிருந்து ஏற்றுமதி சந்தை வாய்ப்புள்ள மூலக்கூறுகளைப் பிரித்தெடுப்பதற்கான கட்டமைப்புகளும்.

iii) கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, வேலூர் ஆகிய இடங்களில் ஏற்றுமதி தரப் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்குவதற்கான உணவுப்பரிசோதனை ஆய்வகங்களும்,

iv) அரிசி, மா, வாழை, கொய்யா, தக்காளி, மிளகாய் போன்ற வேளாண்விளை பொருட்களுக்கும், கடல் சார் மீன் பொருட்களுக்கும், இடுபொருள் வழங்கல், உற்பத்தி, அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, பதப்படுத்துதல், நுகர்வு மேலாண்மை போன்ற பல்வேறு செயல்பாடுகளை உள்ளடக்கிய மதிப்புச் சங்கிலிகள் உருவாக்கிடும் திட்டம் உட்பட மேற்கண்ட திட்டங்கள் மொத்தம் 72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**73) கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்பு**

**i) கூட்டுறவு பயிர்க்கடன்**

2022-2023ஆம் நிதியாண்டில், இதுவரை இல்லாத அளவிற்கு, 13,442 கோடி ரூபாய் பயிர்க்கடனாக 17 இலட்சத்து 44 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2023-2024ஆம் நிதியாண்டில், 16,500 கோடி ரூபாய் பயிர்க்கடன் என்ற உயரிய இலக்கினை நிர்ணயித்து, இதுவரை 13,600 கோடி ரூபாய் பயிர்க்கடனாக, 16 இலட்சத்து 19 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. **2024-2025ஆம் ஆண்டிற்கு, பயிர்க்கடன் வழங்க 16,500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

2023-2024ஆம் ஆண்டில் ஆடு, மாடு, கோழி, மீன் வளர்ப்போருக்கு பராமரிப்பு, நடைமுறை முதலீட்டுக் கடன் இலக்காக, 2,300 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 1,900 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டிற்கு, பயிர்க்கடன் வட்டி மானியத்திற்கென 700 கோடி ரூபாயும், ஆடு, மாடு, கோழி, மீன் வளர்ப்போருக்கு நடைமுறை முதலீட்டுக் கடன் வட்டி மானியத்திற்கென, 200 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கூட்டுறவு கடன் வழங்கும் நிறுவனங்களை, குறிப்பாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளைக் கணினிமயமாக்கும் திட்டம் 141 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. இதனால், கூட்டுறவு நிறுவனங்கள் கடன் வழங்கும் முறை இணையமயமாக்கப்பட்டு, கடன் ஒப்பளிப்பு வழங்கும் நேரம் குறைக்கப்பட்டு, வெளிப்படைத் தன்மை மேம்படுத்தப்படும்.

**ii) பல்நோக்கு சேவை மையம்**

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகளை விரிவுபடுத்தி வேளாண் சேவை மையங்கள், ஊரக வணிக நிலையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள், சேமிப்புக் கிடங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஊரக மக்களுக்குப் பயனளிக்கும் வகையில், பல்நோக்கு சேவை மையங்களாக அவற்றை உருவாக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென, 2,609 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 4,757 திட்டங்களுக்காக, 457 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு இதுவரை, 341 கோடி ரூபாய் கடனாக விடுவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, வேளாண் கட்டமைப்பு நிதியின் வட்டி மானியம் பெற்று 1,380 வேளாண் இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் இவாடகை (உழவன் செயலி) செயலியில் இணைக்கப்பட்டு, அதன்மூலம் குறைந்த வாடகைக்கு இயந்திரங்கள் பெற்று விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

**iii) மின்னணு வங்கி சேவைகள்**

நாட்டிலேயே முதன்முறையாக கூட்டுறவு வங்கிகளில் ஒருங்கிணைந்த பணப் பரிவர்த்தனை அமைப்பு (UPI) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், UPI, NEFT உள்ளிட்ட மின்னணு வங்கியியல் சேவைகள் மாதந்தோறும் ஒரு கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்களால் பயன்படுத்தப்பட்டு, சராசரியாக 30 இலட்சம் பரிவர்த்தனைகள் 17,000 கோடி ரூபாய் அளவில் கூட்டுறவு வங்கிகளில் நடைபெற்று வருகின்றன.

**iv) நேரடி நெல் கொள்முதல்**

நெல் அரவைத் திறனை மேலும் அதிகரித்திட, ஆறு புதிய நவீன அரிசி ஆலைகள் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ளன. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொணரப்பட்ட நெல்மணிகளை இயற்கையின் இடர்ப்பாடுகளிலிருந்து காத்திட, நெல் சேமிப்புக் கட்டமைப்புகள் 18 இடங்களில் 238 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும், 250 மெட்ரிக் டன் கொள்ளளவிலான

55 எண்ணிக்கையிலான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**2024-2025ஆம் ஆண்டில், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் உணவு மானியத்திற்கு, 10,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசின் நெல் கொள்முதல் ஊக்கத் தொகை வழங்குவதற்கு என, 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**74) நீர்வளத் துறை**

நீரினைச் சேமித்து பாசனத்தினை மேம்படுத்தும் நோக்கத்தில் கதவணைகள், நீரொழிங்கிகள், தடுப்பணைகள், கால்வாய்கள், ஏரிகள் அமைத்தல், மாநிலத்திற்குள் நதிகளை இணைத்தல், நிலத்தடிநீரைச் செறிவூட்டுதல் போன்ற பணிகளை நீர்வளத்துறை மேற்கொண்டு வருகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிலேயே ஒவ்வொரு ஆண்டும் தேவையான நிதியினை ஒதுக்கி, தென்மேற்குப் பருவ மழை துவங்கும் முன்பே, தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், காவிரி நீர் கடைமடை வரை செல்வது உறுதி செய்யப்படுகிறது. **2024-2025ஆம் ஆண்டில், காவிரி டெல்டா பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை தொடங்கும் முன், 5,338 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்களைத் தூர்வாருவதற்கு, 110 கோடி ரூபாய் செலவில், 919 பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**75) கால்நடை பராமரிப்பு**

தீவனப் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும், கால்நடைகளுக்கான மருத்துவ வசதி அளிப்பதாலும் பால் உற்பத்தியை உயர்த்த இயலும். 2022-2023, 2023-2024ஆம் ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டு, 2,000 ஏக்கர் தோப்புகள், பழத்தோட்டங்களில் ஊடுபயிராகத் தீவனசாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியினைத் தொடர்ந்து, 2024-2025ஆம் ஆண்டில் தோப்புகள், பழத்தோட்டங்களில் 5,000 ஏக்கர் பரப்பில் தீவனப்பயிரை ஊடுபயிராகப் பயிரிட ஏதுவாக, இத்திட்டம் 2 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்..

**76) மீன்வளம்**

உள்நாட்டு மீன்வளர்ப்போரை ஊக்குவித்து, உள்ளூர் சந்தைகளின் மீன் தேவையினைப் நிறைவு செய்திடும் வகையில், புதிதாக நன்னீர் மீன்வளர்ப்புக் குளங்கள் அமைத்தல், இடுபொருள் மானியம் வழங்குதல், உயிர்க்கூழ்ம முறையில் மீன்வளர்ப்பு, நீரினை மறுசுழற்சி செய்து மீன்வளர்ப்பு, மீன்தீவன ஆலை அமைத்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்திட, மொத்தம் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும். இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், மீன்வளர்ப்போரின் வருவாய் கணிசமாக உயர்வதுடன் உள்நாட்டு மீன் உற்பத்தியும் அதிகரிக்கும்.

## தமிழ்நாடு சட்டப் பேரவையில் வேளாண் நிதி நிலை அறிக்கை!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 117 மணித்துளிகள் பேசினார்!



சென்னை, பிப். 21-

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் வேளாண்மை துறைக்கான 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்து உரை நிகழ்த்தினார்.

10 மணியளவில் துவங்கிய அவரது உரை 11.57 மணி வரை 117 மணித் துளிகள் நீடித்தது.

அவரது உரையில் பல்வேறு அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தன. அறிவிப்புகள் தெரிவிக்கும்போதெல்லாம் உறுப்பினர்கள் மேஜையைத் தட்டி மகிழ்வை வெளிப்படுத்தினர்.

## பசுந்தாள் உரம் பயிரிட ரூ.20 கோடி ஒதுக்கீடு!

**77) ஊரக வளர்ச்சி**

**i) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் இயற்கை வள மேம்பாட்டுப் பணிகளான தடுப்பணைகள், பண்ணைக்குட்டைகள், நீர் செறிவூட்டு குழிகள், கல் வரப்பு போன்ற பல்வேறு வகையான பணிகளோடு நிலத்தடி நீர், மண்ணின் ஈரப்பதத்தை மேம்படுத்தத் தேவையான வறட்சித் தடுப்பு, நில மேம்பாடு, சிறு பாசன மேம்பாடு, பாரம்பரிய நீர்நிலைகள் புதுப்பித்தல் போன்ற விவசாயம் சார்ந்த பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்குச் சந்தைகளுடனான இணைப்பை உறுதி செய்வதற்கும், விவசாய விளைபொருட்களின் போக்குவரத்தை எளிதாக்குவதற்கும், சாலை இணைப்பு இல்லாத பழங்குடியின குடியிருப்புகள் உள்ள மலைப்பகுதிகளுக்கு ஓரடுக்கு கப்பிச்சாலை வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

2024-2025ஆம் ஆண்டில் பண்ணைக் குட்டைகள், நீர் செறிவூட்டுத் தண்டுகள், கசிவு நீர் குட்டை, செறிவூட்டு கிணறுகள், புதிய குளங்கள், மண் வரப்பு, கல் வரப்பு போன்ற இரண்டு இலட்சம் பணிகள் 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**ii) பண்ணை மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

விதைப்பு முதல் வேளாண்மை தொடர்பான அனைத்துப் பணிகளிலும் மகளிரின் பங்கு மிக முக்கியமாகும். எனவே, 2024-2025ஆம் ஆண்டில், ஆர்வமுள்ள, பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கொண்டு, தோட்டக்கலைத்துறையின் ஒருங்கிணைப்பின் மூலம், 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 தென்னை நாற்றுப்பண்ணைகள் அமைக்கப்படும். தென்னங்கன்றுகள் தோட்டக்கலைத் துறையினால் கொள்முதல் செய்யப்பட்டு, அரசுத் திட்டங்களின் கீழ் விநியோகிக்கப்படும்.




மேலும், வேளாண் உற்பத்திக்கு விதையே முக்கிய இடுபொருள் என்பதால், பயறு வகைகள், எண்ணெய்வித்துகளில், 100 விதை உற்பத்தித் தொகுப்புகள் அமைப்பதற்கு, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இதற்குத் தேவையான பயிற்சியும், ஆதார விதைகளும் வேளாண்மைத்துறை வழங்குவதுடன், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த விதைகளை, உற்பத்தி மானியம் வழங்கி வேளாண்மைத் துறையே கொள்முதல் செய்து, வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

**78) எரிசக்தித் துறை**

பாசன வேளாண்மையினால் ஏற்படும் ஆதாயங்களை உணர்ந்து நிலத்தடி நீரினைப் பயன்படுத்தி விவசாயிகள் அதிக உற்பத்தி செய்து உலகுக்கு அளித்து, தாமும் உய்யவேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு, வேளாண் பாசனத்திற்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, 23 இலட்சத்து 51 ஆயிரம் இலவச மின் இணைப்புகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தேவையான கட்டணத் தொகையாக, சுமார் 7,280 கோடி ரூபாய் நிதியினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அரசு வழங்கும்.

**79) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**

i) தருமபுரி, திருப்பூர், புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய ஏழு மாவட்டங்களின் 55 வட்டங்களில் உள்ள 110 கிராமங்களில் வறட்சித் தணிப்பிற்கான சிறப்பு உதவித் திட்டம், 2024-2025ஆம் ஆண்டு முதல், 110 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

ii) தமிழ்நாட்டில் விளைவிக்கப்படும் பயிர்களின் விவரங்களைக் கணக்கிடுவதற்கான மின்னணு முறையிலான பயிராய்வு (Digital Crop Survey) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனைக் கொண்டு 2024-2025ஆம் ஆண்டு முதல் இணையவழியில் விவசாயிகளுக்கு அடங்கல் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**80) பனை பொருள் வளர்ச்சி பனை மேம்பாட்டு இயக்கம்**

தமிழ்நாட்டில் பனை மரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதை அரசு கவனத்தில் கொண்டு, பனை மரங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் பொருட்டு, மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து பனை மேம்பாட்டு இயக்கத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில், 47 இலட்சம் பனை விதைகள் நடப்பட்டதுடன், 950 நபர்களுக்குத் தரமான பனை வெல்லம், பனங்கற்கண்டு, மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சியும் கருவிகளும் அளிக்கப்பட்டு, 350 மகளிருக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும் கருவிகளும் வழங்கப்பட்டன.

2024-2025ஆம் ஆண்டில், பனை சாகுபடியினை ஊக்குவிக்க, 10 இலட்சம் பனை விதைகள் தோட்டக்கலைத் துறையின் மூலம் நடப்படும். மேலும், பனைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 200 பனைத் தொழிலாளர்களுக்கு, தரமான பனை வெல்லம், பனங்கற்கண்டு, பிற மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சிகளும், 100 மகளிருக்கு பனை ஓலைப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும், பயிற்சி பெற்ற அனைவருக்கும் உரிய கருவிகளும் வழங்கப்படும். இதற்கென, ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2024-2025ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துறைகளான கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, பால் வளத்துறை, நீர்வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, உணவுத்துறை, கூட்டுறவுத்துறை, வருவாய்த்துறை, வனத்துறை, பட்டு வளர்ச்சித் துறை ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகளின் கீழ் 42 ஆயிரத்து 281 கோடியே 87 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அட்டவணை 1)

உழவர்களின் பெருந்தன்மையை புறநானூற்றுப்பாடல்

**"வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅமையின்**
**குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து**

விதைக்காக விடப்பட்டிருக்கும் தினையையும், விருப்பத்துடன் உரலில் இட்டு இடித்துச் சமைத்து உணவு அளிப்பவர்கள் உழவர்கள் என்று உழவர்களின் உன்னதப்பண்பை உணர்த்துகிறது. வறியநிலையில் இருந்தாலும், பெருந்தன்மையோடு இருக்கும் இத்தகைய உழவர் பெருமக்களின் நலனைப் பேணிக்காக்கும் அரசுதான் நம் அரசு.

**"வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி"**

**(திருக்குறள் 542)**

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவதுபோல ஒரு நாட்டில் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது,

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நல்லாட்சி செய்துவரும் **முதலமைச்சர் அவர்கள்** உழவர் நலன்காக்க, இந்த மாமன்றத்தில் கடந்த ஆண்டுகளைப் போலவே, தமிழ்நாட்டின் நான்காம் வேளாண் நிதிநிலை அறிக்கையையும் தாக்கல் செய்யும் அரிதினும் அரிதான பொன்னான வாய்ப்பினை எனக்கு அளித்ததற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எல்லாம் ஆயிரம் ஆயிரமாய்**

**"அடிசில் வைகல் ஆயிரம் அறப்புறமும் ஆயிரம்**
**கொடியனார் செய் கோலமும் வைகல்தோறும் ஆயிரம்**
**மடிவுஇல் கம்மியர்களோடும் மங்கலமும் ஆயிரம்**
**ஒடிவுஇலை வேறுஆயிரம் ஓம்புவாரின் ஓம்பலே".**

**...... (சீவகசிந்தாமணி. 76)**

வளம் நிறைந்த நாட்டில் உள்ள ஊர்களில் நாள்தோறும் கிடைக்கும் உணவு வகைகள் ஆயிரம்; அறச்சாலைகள் ஆயிரம்; அங்கே மகளிர் ஒப்பனை செய்துகொள்ள மணிமாடங்கள் ஆயிரம்; மேலும், செய்தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரம்; அதனால் நிகழும் திருமணங்களும் ஆயிரம்; நாட்டில் தவிர்தலின்றிக் காவல் செய்யும் பாதுகாவலரும் ஆயிரம் எனும் திருத்தக்கதேவர் அவர்கள் சீவகசிந்தாமணி காப்பியத்தில் கூறியுள்ளதைப் போலவே, மக்களின் பசியையும் விவசாயிகளின் வறுமையையும் அறவே அழித்தொழித்தல், உணவுப் பாதுகாப்பை அளித்தல், ஊட்டச்சத்துள்ள உணவை வழங்குதல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், இயற்கை வளங்களைச் சிறப்பாகக் கையாளுதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், வளங்குன்றாத வளர்ச்சியினை அடைதல் ஆகிய பணிகளில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் சிறப்பாக நடைபெற்று வரும் வேளாண்மை உழவர் நலத்துறையின் பங்களிப்பினை மேலும் மெருகூட்டி, வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே நான்காம் வேளாண் நிதிநிலை அறிக்கையின் மேன்மையான நோக்கமாகும்.

வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப, அறிவிக்கப்பட்ட திட்டங்களில் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து, மேலும் சிறப்பாகத் திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்படும்.

இந்த மகத்துவமான நான்காம் தனி வேளாண் நிதிநிலை அறிக்கையானது விவசாயத்திற்குத் தொடர்புடைய அனைவரையும் இணைக்கும் பலம் பொருந்திய பாலமாக இருக்கப் போகிறது என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் மூன்று வேளாண் நிதிநிலை அறிக்கைகளையும் சீரிய முறையில் தயாரித்து இம்மாமன்றத்தில் சமர்ப்பித்தது போல, நான்காம் நிதிநிலை அறிக்கையினையும் பல்வேறு புதிய திட்டங்களுடன் உருவாக்கிட எனக்கு உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா அவர்களுக்கும், நிதித்துறை அரசு முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் அவர்களுக்கும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா அவர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்நாடு!

வளர்க வேளாண்மை !

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து உரையாற்றினார்.



22.02.2024 வியாழக்கிழமை
காலை 9.00 மணி
திருச்சியில் பேரரசர்
பெரும்பிடுகு முத்தரையர்
திரு உருவ சிலையுடன் கூடிய
மணிமண்டபத்தை நாட்டுக்கு
அர்ப்பணித்து காணொலி மூலம்
திறந்து வைக்கும்
மாண்புமிகு தமிழக முதல்வர்
கழகத் தலைவர்
அவர்களுக்கும்
இளந்தலைவர்
இளைஞர் அணி செயலாளர்,
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களுக்கும்
நன்றி... நன்றி... நன்றி...
காடுவெட்டி
ந. தியாகராஜன் M.A., MLA.,
திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர்,
முசிறி சட்டமன்ற உறுப்பினர்

8 திருக்கோயில்களில் - பயன்பாட்டில் இல்லாத 130 கிலோ 393 கிராம் எடையுள்ள பல மாற்று பொன் இனங்களை

# தங்க உருக்காலையில் உருக்கி - தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - வங்கியின் தலைமைப் பொது மேலாளரிடம் பத்திரத்தை ஒப்படைத்தார்!

சென்னை, பிப்.22-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (20.02.2024) ஆணையர் அலுவலகத்தில் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் துரைசாமி ராஜு, க.ரவிச்சந்திர பாபு மற்றும் செல்வி ஆர். மாலா ஆகியோர் முன்னிலையில் 8 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 130 கிலோ 393 கிராம் எடையுள்ள பல மாற்று பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் தலைமைப் பொது மேலாளர் ரவிரஞ்ஜனிடம் ஒப்படைத்தார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட தங்க முதலீட்டுத் திட்டத்தின் மூலம் பெறப்படுகின்ற வட்டி தொகையை அந்தந்த திருக்கோயிலுக்கு அடிப்படைத் தேவைகள் மற்றும் திருப்பணிகளுக்குச் செலவிடப்பட்டு வந்த நிலையில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இத்திட்டம் முழுமையாக செயலிழந்தது. இதனால் பல திருக்கோயில்களில் பலமாற்று பொன்னினங்கள் பயன்படுத்த இயலாமல் கிடப்பதைஅறிந்துமுதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், கலைஞர் ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட அந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த உத்தரவிட்டார்.

இதன்படி, பெரியபாளையம், இருக்கன்குடி, திருவேற்காடு, மாங்காடு, திருச்செந்தூர் ஆகிய ஐந்து திருக்கோயில்களின் பல மாற்று பொன்னினங்கள் மும்பையில் இருக்கின்ற ஒன்றிய அரசுக்குச் சொந்தமான உருக்காலையில் உருக்கியதில் கிடைக்கப்பெற்ற 344 கிலோ 334 கிராம் எடை கொண்ட சுத்தத் தங்கத்தினை வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்ததில் வட்டியாக ஆண்டிற்கு ரூ.4.31 கோடி தற்போது கிடைக்கின்றது. இத்தொகை அந்தந்தத் திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கு செலவிடப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் திருத்தணி, சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மேல்மலையனூர், அங்காளம்மன் திருக்கோயில், சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம், முத்துமாரியம்மன் திருக்கோயில், சிவகங்கை, சமஸ்தானம் தேவஸ்தானம், இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லானி, ஆதிஜெகன்னாத பெருமாள் திருக்கோயில், நைனார் கோவில், நாகநாதசுவாமி திருக்கோயில், சேலம், சுகவனேசுவரர் சுவாமி திருக்கோயில், திருச்செங்கோடு, அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் என 8 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 130 கிலோ 393 கிராம் எடையுள்ள பல மாற்றுப் பொன் இனங்கள் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டன. இதன்மூலம் சுமார் ரூ.1.5 கோடி வட்டித்தொகையாக கிடைக்கும். அதோடு மட்டுமல்லாமல் மடப்புரம்,



தேக்கம்பட்டி மற்றும் குணசீலம் ஆகிய 3 திருக்கோயில்களில் 46 கிலோ 237 கிராம் எடையுள்ள பலமாற்று பொன்னினங்கள் பிரித்தெடுக்கப்பட்டிருக்கின்றது.

**ஆண்டிற்கு ரூ.25 கோடி வருவாய்!**

அதை விரைவில் மும்பை உருக்காலைக்கு அனுப்பப்படும். இந்த திட்டம் முழுமையாக நிறைவுறுகின்ற போது திருக்கோயில்களுக்கு ஆண்டிற்கு 25 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெரியபாளையம் திருக்கோயிலில் தற்போது சேர்ந்திருக்கின்ற 13 கிலோ எடை உள்ள பல மாற்று பொன்னினங்களை உருக்கி தங்கத் தேர் செய்வதற்குப் பயன்படுத்தப்பட உள்ளது.

திருக்கோயில்களில் உள்ள பல மாற்று பொன் இனங்களை பிரித்தெடுப்பதற்காக தமிழ்நாட்டினை 3 மண்டலங்களாக பிரித்து ஓய்வு பெற்ற மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் குறித்து பொது அறிவிப்பு தரப்பட்டு, பொதுமக்கள் முன்னிலையில் முழுவதுமாக வீடியோ பதிவு செய்து எந்த விதமான குற்றச்சாட்டிற்கும் ஆளாகாத வண்ணம் நடைபெற்று வருகின்றது. இந்த பணி குறித்து தொடக்க காலத்தில் பல்வேறு விமர்சனங்கள் இந்த ஆட்சியின் மீது சுமத்தப்பட்ட போதிலும், திருக்கோயில்களுக்கு கோடிக்கணக்கில் வருமானம் ஆண்டு தோறும் கிடைப்பதற்கு வழிவகை செய்து, தடைகளை தகர்த்தெறிகின்ற திறன் தோள்கள் திராவிட மாடல் அரசுக்கு உண்டு என்பதை நிரூபித்த முதலமைச்சர் அவர்களுக்கு துறையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ரோப் கார் அமைக்கின்ற பணிகளில் தமிழ்நாட்டில் இரண்டு மூன்று நிறுவனங்களே இருக்கின்ற நிலையில் திருநீர்மலை மற்றும் திருக்கழுக்குன்றம் திருக்கோயில் களுக்கு ரோப்கார்களை நேர்த்தியாகவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்கின்ற வகையிலும் அமைப்பதற்கு உரிய நிறுவனங்களை கவனத்துடன் தேர்வு செய்திட ஏற்கனவே பணிகள் தொடங்கி விட்டன. இப்பணிகள் தொடர்பாக ஒப்பந்தம் இறுதி செய்வதற்கு குறைந்தபட்சம் 6 மாத கால மாகும். மேலும், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு அறிவிக்கப்பட்ட பழனி - இடும்பன் மலை, அனுவாவி, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் ரோப் கார் அமைக்கின்ற ஆரம்பக் கட்ட பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

கடந்த ஆட்சியில் முடிவடையாத நிலையில் சட்டமன்ற தேர்தல் அறிவிப்புக்கு முன்னர் 50 சதவீத பணிகள் கூட நிறைவடையாத நிலையில் சோளிங்கர் திருக்கோயில் ரோப் கார் வசதி திறந்து வைக்கப்பட்டது. தற்போது அந்த மாவட்ட அமைச்சர் ஆர்.காந்தி அவர்கள் உபயதாரர்கள் மூலம் சுமார் ரூ.12 கோடி மதிப்பீட்டில் அனைத்து அடிப்படை தேவைகளையும் நிறைவு செய்து தந்துள்ளதால் விரைவில் சோளிங்கர் ரோப் கார் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். அதேபோல கரூர் மாவட்டம், அய்யர்மலை ரோப் கார் பணிகளும் விரைவுப்படுத்த ப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

குற்றம் சொல்வதற்காகவே இன்றைக்கு ஒரு கட்சியின் மாநில தலைவராக அண்ணாமலை இருக்கின்றார். திருக்கோயில் திருப்பணிகள், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள், நிறைவேற்றுகின்ற ஆட்சிக்கு மதிப்பெண்கள் போட வேண்டும் என்றால் இந்திய அளவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்படுகின்ற திராவிட மாடல் ஆட்சிக்கு தான் முதலிடம் தர முடியும். ஏனென்றால் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 1,396 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளதோடு, சுமார் ரூ.5,718 கோடி மதிப்பிலான 6,310.92 ஏக்கர் திருக்கோயில் சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டும், சுமார் 8,251 திருக்கோயில்களுக்கு மாநில வல்லுநர் குழுவால் திருப்பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டும் இருக்கின்றது.

**மீட்கப்பட்ட திருக்கோயில்களின் சொத்துகள்!**

மேலும், இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் எந்த ஆட்சியிலும் மேற்கொள்ளப்படாத வகையில் பல்வேறு அரும்பெரும் பணிகள் தற்போது நடைபெற்று வரும் நிலையில் திருக்கோயில்களை வைத்து அரசியல் செய்யலாம் என்பவர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சி இருக்கின்றது. இனத்தால், மொழியால், மதத்தால் மக்களை பிளவுபடுத்தலாம் என்று நினைப்பவர்களின் ஆசை நப்பாசையாக மாறிவிட்டதால் இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளை அவரிடம் இருந்து எதிர்பார்ப்பது ஒன்றும் வியப்புக்குரியதல்ல. இதை விட அதிகமான குற்றச்சாட்டுகள் கூட கூறுவார்கள். இதனை நாங்கள் பொருட்படுத்தவில்லை. முதலமைச்சர் அவர்கள் இருகரங்களால் அரவணைத்து, இந்து சமய அறநிலையத் துறையின் அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றி தருவதால் ஆன்மிகப் பெரியோர்களுக்கும், இறையன்பர்களுக்கும் மகிழ்ச்சி தருகின்ற திட்டங்களை தொடர்ந்து கொண்டு வருவோம்.

ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட திருக்கோயில் சொத்துக்களை பொது ஏலத்தில் வணிகப் பயன்பாட்டிற்கும், இதர பயன்பாட்டிற்கும் விட்டதின் பலனாக எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத் துறைக்கு சுமார் 600 கோடி வருமானம் கிடைத்திருக்கின்றது. வரும் ஆண்டுகளில் சட்ட, திட்டத்திற்குட்பட்டு பொது ஏலம் மூலம் துறைக்கு கூடுதல் வருவாய் கிடைப்பதற்கு உண்டான வழி வகைகளை மேற்கொள்வோம்.

இந்து சமய அறநிலையத்துறை பொறுத்த அளவில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் 2 திருக்கோயில்களின் இருந்த முழு நேர அன்னதானத் திட்டத்தை கூடுதலாக 9 திருக்கோயில்களுக்கும், 746 திருக்கோயில்களில் இருந்த ஒருவேளை அன்னதான திட்டத்தை 17 திருக்கோயில்களுக்கு விரிவுப்படுத்தி, 763 திருக்கோயில்களுக்கும் செயல்படுத்தி உள்ளோம். திருக்கோயில்களில் வழங்கப்படும் அன்னதானம் மற்றும் பிரசாதத்தின் தரத்தினை உறுதி செய்து ஒன்றிய அரசின் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் BHOG சான்றிதழ்களை இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. மேலும், துறையின் சார்பில் தனியார் உணவு பாதுகாப்பு நிறுவனம் மூலம் திருக்கோயில்களில் ஆண்டிற்கு மூன்று முறை ஆய்வு செய்து, தரத்தை உறுதி செய்து வருகிறோம்.

திருவொற்றியூர் திருக்கோயிலில் புளியோதரை கெட்டுப்போன விவகாரம் எங்கள் கவனத்திற்கு வந்தவுடன் சம்பந்தப்பட்ட அலுவலரை உடனடியாக விசாரணை மேற்கொள்ள அறிவுறுத்தி இருக்கிறோம். தவறு இருக்கும் பட்சத்தில் நிச்சயமாக அந்த பிரசாத கடையின் உரிமம் ரத்து செய்யப்பட்டு, நல்ல தரமான உணவு தயாரிக்கும் புதிய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். சிறு குறைபாடுகள் மற்றும் இதுபோன்ற பிரச்சனைகளை துறையின் கவனத்திற்கு கொண்டுவந்தால் அதன்மீது பாரபட்சமின்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வெளிநாட்டில் இருக்கும் சிலைகளை மீட்கின்ற பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீட்கப்பட்ட சிலைகள், அடையாளம் காணப்பட்ட சிலைகள், களவு போவதை தடுப்பது குறித்து காவல்துறையுடன் இணைந்து சட்டமன்ற கூட்டத்தொடர் முடிவுற்றபின் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர்கள், இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், பொ.ஜெய ராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி மற்றும் அலுவலர்கள் இணை ஆணையர்கள் ச. இலட்சுமணன், பொ.ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# நாடும் ஏடும் போற்றும் நனி சிறந்த பட்ஜெட்!

TUESDAY February 20, 2024 CHENNAI CITY EDITION 20 Pages ₹5.00
THE HINDU www.thehindu.com INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878



- Government to cover **higher education expenses of transpersons**. All such expenses, including tuition and hostel fees, of transpersons aspiring to pursue higher education will be covered. An additional grant of **₹2 crore** will be given to the Transgender Welfare Board
- The **Tamizh Pudhalvan scheme to benefit boys** who have studied in government schools from **Class VI to Class XII**, by crediting **₹1,000** a month to their bank accounts for higher education

## Breakfast scheme extended to aided schools in rural areas

The Hindu Bureau
CHENNAI

The Chief Minister's Breakfast Scheme will be extended to government aided schools in rural areas from the coming academic year. It will benefit around 2.5 lakh more students of Classes I-V, Finance Minister Thangam Thennarasu said on Monday.

In his Budget speech, he announced an allocation of ₹600 crore in the next financial year to implement this vision of the Chief Minister, who said: "We are willing to make any sacrifice to ensure widespread access to school education, foster enjoyable learning experience, and ensure that students learn without hunger."

**Hostels for women**

The Minister said that new 'Thozhi hostels' would be constructed this year, in cities such as Chennai, Coimbatore and Madurai, at a cost of ₹26 crore, benefiting 345 women.

Another significant announcement is the decision to cover all educational expenses, including tuition and hostel fees, of transpersons pursuing higher education.

An additional allocation of ₹2 crore will be made to the Transgender Welfare Board by the government for this initiative in the coming year, the Minister said.

**Reforms of govt. homes**

The government will also implement reforms based on the recommendations of a committee, chaired by former judge K. Chandru, for the efficient operation and administration of Government Observation Homes, Special Homes, and Places of Safety.

The Department under which these homes function, currently known as the Directorate of Social Defence, will be renamed as the Department of Children Welfare and Special Services.

ILLUSTRATION: SOUMYADIP SINHA

---

தலையங்கம்

**தினத் தந்தி**

20.2.2024 (செவ்வாய்க்கிழமை)

## தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கிய பட்ஜெட் இது

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்து வரும் தமிழக அரசின் 4-வது பட்ஜெட்டை நேற்று சட்டசபையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். அவருக்கும், நிதித்துறை முதன்மை செயலாளர் உதயசந்திரனுக்கும் இது முதல் பட்ஜெட்டாக இருந்தாலும், முத்திரை பதித்து விட்டார்கள். இந்த பட்ஜெட்டின் கருப்பொருள் 'தடைகளைத் தாண்டி... வளர்ச்சியை நோக்கி...' என்பதாகும்.

கடுமையான நிதி நெருக்கடியில் அரசு தத்தளித்துக் கொண்டு இருக்கும் சூழ்நிலையில் இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பேய் மழை, கடும் வெள்ளம், சரக்கு சேவை வரி இழப்பீட்டை மத்திய




அரசாங்கம் நிறுத்தியதால் ரூ.20 ஆயிரம் கோடிக்கும் மேல் வருவாய் இழப்பு, மத்திய அரசாங்கத்தின் குறைவான நிதி பகிர்வு என்று பல தடைகளைத் தாண்டி இந்த பட்ஜெட் தன் வளர்ச்சி பயணத்தை தொடங்கி உள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2023-2024-ல் ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 182 கோடி ரூபாய் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டு இருந்தது. அதாவது மொத்த வருவாயில் இது 78.9 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் மழை, வெள்ளம் காரணமாக இந்த இலக்கை அடைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் மக்களுக்கான வளர்ச்சி திட்டங்களில், அரசு இந்த பட்ஜெட்டில் எந்த குறையும் வைக்கவில்லை. கடந்த ஆண்டு பட்ஜெட்டில் 1.15 கோடி பெண்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை திட்டம் அறிவிக்கப்பட்டு, மகளிர் வாழ்க்கையில் விளக்கேற்றி வைக்கிறது என்றால், இந்த பட்ஜெட்டில் அரசு பள்ளிக்கூடங்களில் படித்து கல்லூரிகளில் உயர் படிப்புகளில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமை பெண் திட்டம் போல, தமிழ் புதல்வன் திட்டம் மாணவர்களுக்கு புது வாழ்வை தந்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் அரசு பள்ளிக்கூடங்களில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை படித்து உயர் கல்வியில் சேரும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும். அடுத்த 2 ஆண்டுகளில் 50 ஆயிரம் அரசு பணியிடங்கள் நிரப்பப்படும், வருகிற ஜூன் மாதத்துக்குள் 10 ஆயிரம் பேருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பு இளைஞர்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும்.

இது தவிர சென்னை, கோயம்புத்தூரில் ஆயிரம் பேருக்கு மத்திய அரசாங்க பணியாளர் தேர்வாணையம், ரெயில்வே, வங்கி பணி தேர்வுகளுக்காக 6 மாத கால உறைவிட பயிற்சி வழங்கப்படும். தூத்துக்குடியில் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விண்வெளித் தொழில் மற்றும் உந்து சக்தி பூங்கா, கோயம்புத்தூரில் ரூ.1,000 கோடி செலவில் புதிய தகவல் தொழில் நுட்ப பூங்கா, மதுரை, திருச்சியில் டைட்டல் பூங்காக்கள், விருதுநகர், சேலத்தில் 2 லட்சத்து 8 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் ஜவுளி பூங்காக்கள், தஞ்சாவூரில் சிப்காட் தகவல் தொழில்நுட்ப பூங்கா போன்ற அறிவிப்புகள் தொழில் வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புக்கும் பெரிய உந்து சக்தியாக விளங்கும். கல்விக்கும், தொழில் வளர்ச்சிக்கும் மட்டுமல்லாமல் அனைத்து துறைகளுக்கும் அறிவிப்புகளை கொண்ட திட்டமாகவும், நிதி நிலைமையை மாநில மக்கள் அறிந்து கொள்ளும் வகையிலான, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய வரியில்லா பட்ஜெட் உரையாகவும் இது இருக்கிறது.

---

## THE NEW INDIAN EXPRESS



7 pillars of CM's grand Tamil dream: Social justice, welfare of marginalised, welfare of women, transforming Tamils into global achievers, knowledge-based economy, sustainable green future, (promotion of) Tamil language and culture

---

**இந்து தமிழ் திசை** 10 CHENNAI செவ்வாய், பிப்ரவரி 20, 2024

இந்து தமிழ் திசை

செவ்வாய், பிப்ரவரி 20, 2024

## நம்பிக்கையளிக்கும் பட்ஜெட்!

தமிழ்நாட்டின் நிதியமைச்சராகத் தனது முதல் பட்ஜெட்டைத் தாக்கல் செய்திருக்கிறார் தங்கம் தென்னரசு. சமீபத்தில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடர்களால் தமிழ்நாட்டின் நிதிநிலையில் பின்னடைவு ஏற்பட்டதால், பெரிய அளவிலான அறிவிப்புகள் இடம்பெறுமா என்ற ஐயம் நிலவியது. ஆனால், ஆக்கபூர்வமான பல அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன. மக்களவைத் தேர்தல் நெருங்கிவரும் நேரத்தில் தாக்கலாகியிருக்கும் இந்த பட்ஜெட்டில் மக்களை ஈர்க்கும் அறிவிப்புகள் நிறையவே உள்ளன.

தமிழ்நாட்டில் முதன்முறையாகப் புத்தொழில் மாநாடு, 6 ஆண்டுகளில் 8 லட்சம் கான்கிரீட் வீடுகள், கிராமச் சாலைகளுக்கு ரூ.1,000 கோடி ஒதுக்கீடு, 5 லட்சம் ஏழைக் குடும்பங்களைக் கண்டறிந்து வறுமையை அகற்றும் திட்டம், கீழடி உள்பட 8 இடங்களில் அகழாய்வு மேற்கொள்ள ரூ.5 கோடி ஒதுக்கீடு என்பன உள்ளிட்ட அறிவிப்புகள் நம்பிக்கையளிக்கின்றன.

வளர்ச்சியின் கரங்கள் சென்னைக்கு வெளியிலும் நீள வேண்டும் என்ற குரல்கள் வலுத்துவரும் நிலையில், கோயம்புத்தூரில் ரூ.1,100 கோடி மதிப்பில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா; மதுரை, திருச்சி, தஞ்சாவூர் எனத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பரவலாகும் என்பன உள்ளிட்ட அறிவிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்திருக்கும் நிலையில், வெள்ளம், நில அதிர்வு உள்ளிட்டவற்றைக் கண்காணித்துப் பேரிடர் அபாய அளவைக் குறைக்கத் தொழில்நுட்ப மையம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. விரைவான வானிலை முன்னறிவிப்புகளைப் பெற இந்திய வானிலை ஆராய்ச்சி நிறுவனத்துடன் ஒப்பந்தம் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளும் இடம்பெற்றிருக்கின்றன. தேசியப் பேரிடர் நிவாரணத்திலிருந்து எந்த நிதியும் தற்போது வரை விடுவிக்கப்படவில்லை என்ற அறிவிப்புடன் இந்தத் திட்டங்கள் கொண்டுவரப்படுவது கவனிக்கத்தக்கது. நாய்க்கடி அச்சுறுத்தல் அதிகரித்திருக்கும் நிலையில், தெரு நாய்களின் இனப்பெருக்கத்தைத் தடுக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் முதன்மை நதிகளைப் புனரமைப்பதற்கான திட்ட அறிக்கை தயாரிப்பு, 2,000 புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க ரூ.365 கோடி ஒதுக்கீடு, மழைநீரைச் சேமிக்கவும், நீர்நிலைகளை மேம்படுத்தவும் ரூ.500 கோடியில் 5,000 நீர்நிலைகளைப் புனரமைக்கும் திட்டம் உள்ளிட்டவை நீர்நிலைப் பாதுகாப்பில் அரசின் முனைப்பைக் காட்டுகின்றன.

காலை உணவுத் திட்டத்தின் காரணமாக, அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் வருகை அதிகரித்திருக்கும் நிலையில், ஊரகப் பகுதிகளில் இயங்கும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுவது பாராட்டத்தக்கது. 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ், ரூ.200 கோடி மதிப்பீட்டில் 100 கலை-அறிவியல், பொறியியல் கல்லூரிகளில் திறன் ஆய்வகங்கள், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்காக 6 இடங்களில் பாரா தடகள விளையாட்டு மையங்கள், மதி இறுக்கம் (Autism) உடையோருக்கு ரூ.25 கோடியில் உயர்திறன் மையம், திருநர்களின் கல்லூரிப் படிப்புக்கான முழுச் செலவையும் அரசே ஏற்பது உள்ளிட்டவை வரவேற்கத்தக்க முன்னெடுப்புகள்.

பட்ஜெட் உரையில் திருக்குறள் தொடங்கி பிரமிள் கவிதைகள் வரை மேற்கோள் காட்டியிருக்கும் தங்கம் தென்னரசு, தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்க ரூ.2 கோடி, தமிழ் மொழியை நவீனப்படுத்த செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களை ஊக்குவிக்க ரூ.5 கோடி என்பன உள்ளிட்ட அறிவிப்புகளையும் வெளியிட்டிருக்கிறார்.

இந்த பட்ஜெட் பெருமளவில் ஆக்கபூர்வமானதாகவே அமைந்திருக்கிறது. இந்த அறிவிப்புகள் அரசியல் ஆதாயம் பெறுவதற்கானவை என்ற பேச்சு எழுந்துவிடாமல், அர்ப்பணிப்புடன் அவற்றை நிறைவேற்றுவதுதான் அரசுக்கு அழகு!

---

**தினகரன்**

பிப்ரவரி 20, 2024 செவ்வாய்க்கிழமை

## தலைநிமிரச் செய்யும்

2024-25ம் நிதி ஆண்டுக்கான தமிழக அரசின் பட்ஜெட்டை நேற்று தாக்கல் செய்தார் அமைச்சர் தங்கம் தென்னரசு. இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார பலம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு. நூற்றாண்டு கண்ட இந்த சட்டப்பேரவையில் 100 ஆண்டுகளில் தாக்கல் செய்த பட்ஜெட், தமிழர்களை தலைநிமிரச் செய்தது எனக்கூறி புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். தமிழகத்துக்கு பொருளாதார நெருக்கடியை தருவதன் மூலம் வளர்ச்சியை தடுக்கவும் ஒன்றிய அரசு பார்த்தது. பட்ஜெட் நிதியை மட்டும் மையமாக கொண்டு இருக்காமல், சமூக நீதியை மையமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

தமிழக அரசின் பட்ஜெட்டில் பெண்கள் வாழ்வில் முன்னேற்றம், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு, சென்னையை தாண்டி பெரிய நகரங்களில் டைடல் பூங்கா விரிவுபடுத்தல், விளையாட்டுத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு மூலம் அதிக வீரர், வீராங்கனைகளை உருவாக்குவது என்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களும் இடம் பிடித்துள்ளன.

மதுரையில் ₹345 கோடியில் டைடல் பூங்கா, திருச்சியில் ₹350 கோடியில் டைடல் பூங்கா, தஞ்சாவூர் மாவட்டத்தில் சிப்காட் தொழில் பூங்கா, 'தமிழ்ப் புதல்வன்' என்ற புதிய திட்டத்துக்கு ₹360 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதுமைப் பெண்கள் திட்டம் போல அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவர்களுக்கு மாதம்தோறும் ₹1000 அவர்கள் வங்கிக் கணக்கில் சேர்க்கும் திட்டம் தான் இது. இதுதவிர்த்து பணிபுரியும் மகளிருக்கான புதியதாக தோழி விடுதிகள், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு வழங்க ₹35,000 கோடி நிதி ஒதுக்கீடு, விருதுநகர், சேலத்தில் ₹2,483 கோடி செலவில் ஜவுளி பூங்கா, தமிழகத்தில் முதல்முறையாக உலக புத்தொழில் மாநாடு நடத்தப்படும் என அறிவிப்பு வரவேற்பை பெற்றுள்ளது.

தூத்துக்குடியில் 2,000 ஏக்கர் பரப்பளவில் விண்வெளி தொழில் மற்றும் உந்து சக்தி பூங்கா, சென்னை, கோவை, மதுரை, சேலம், திருச்சியில் பொது இடங்களில் இலவச வை-ஃபை வசதி அமைக்கப்படும். ராமநாதபுரத்தில் கடல்சார் நீர் விளையாட்டு மையம், சென்னை, மதுரை, கோவையில் ரயில்வே, வங்கி தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்க ₹6 கோடி நிதி ஒதுக்கீடு. சிப்காட் பகுதியில் பணிபுரியும் பெண்களின் குழந்தைகள் பாதுகாப்புக்காக குழந்தைகள் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்புகள் வளர்ச்சி நோக்கி செல்வதற்கு உத்வேகமாக உள்ளது.

சிலப்பதிகாரம், மணிமேகலை நூல்களை 25 இந்திய மற்றும் உலக மொழிகளில் மொழி பெயர்க்க ₹2 கோடி ஒதுக்கீடு. அடுத்த 3 ஆண்டுகளில் 600 புதிய நூல்கள் தமிழில் மொழி பெயர்ப்பு, கலைஞர் பெயரில் கோவையில் பிரமாண்ட நூலகம், குடிசையில்லா தமிழகத்தை உருவாக்க 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டம் அறிமுகமாக உள்ளது. கலைஞரின் கனவு இல்லம் திட்டத்துக்கு ₹3,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2030க்குள் 8 லட்சம் கான்கிரீட் வீடுகளும் ஒரு கான்கிரீட் வீட்டுக்கு ₹3.50 லட்சம் ஒதுக்கவும் அரசு அறிவித்து இருப்பது, ஏழை, எளிய மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கவர்ச்சியான அறிவிப்புகள் இல்லாமல், புதிய டைடல் பூங்கா, ஜவுளி பூங்கா போன்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் அறிவிப்புகளும், கனவு இல்லமான குடிசை இல்லாத கான்கிரீட் வீடு என்பது ஏழை மக்களின் வாழ்வாதாரம் தலைநிமிரச் செய்யும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

---

**DECCAN Chronicle**

20 FEBRUARY 2024

## TN budget tries to please all

Ahead of the Lok Sabha polls, the Tamil Nadu government has come out with a dream budget that aims to please all sections of society, particularly the marginalised and the poor. It is not surprising that on social media platforms common people are going gung ho over the budget proposals for 2024-25, read out in the State Assembly by finance minister, Thangam Thennarsu, on Monday. For, it has not just something for everyone to rejoice but has been framed with lofty ideas like social justice, gender equality, poverty eradication, environmental protection, modernization, industrial development and public education in mind.

A futuristic document with proposals for new skill labs in colleges and the setting up of an Artificial Intelligence (AI) Mission, it also takes pride in the past by allocating Rs 17 crore to set up an open-air museum at Keezhadi, the excavation site that gave indisputable evidence to the antiquity of the Tamil race, and launching more archeological explorations.

Besides laying emphasis on spending more on roads and bridges (Rs 17,890 crore), transport (Rs 2,966 crore, urban development (Rs 3,767 crore), water supply (Rs 9,535 crore), water bodies (Rs 4,747 crore) and education and health services (Rs 2,810 crore), it also makes available funds to the tune of Rs 1,000 crore for providing basic amenities in tribal habitations and improving the living conditions of the people there and proposes to rescue five lakh families from the clutches of poverty, besides disbursing Rs 35,000 crore credit to women self-help groups.

In a bold step, the State government that has hitherto been complaining about the Union Government not providing the promised funds for the second phase of the Metro Rail project has now decided to allot Rs 12,000 for completing the work that it had started without waiting for money from Delhi and extend the line up to Kilambakkam to provide connectivity to the new bus terminus that has been constructed for south-bound buses. In short, it's a people oriented budget, drawn up by the DMK government with the coming Lok Sabha elections in mind.

---

DECCAN Chronicle
THE LARGEST CIRCULATED ENGLISH DAILY IN SOUTH INDIA
CHENNAI TUESDAY 20 FEBRUARY 2024

## Big push for social sector

■ 5 lakh families to be rescued from poverty; sop for employing women

■ More smart classrooms; ₹1K monthly aid to boys joining for higher education

G. BABU JAYAKUMAR
D. SEKAR | DC
CHENNAI, FEB 19

Presenting a ₹49,278.73 crore deficit budget for the year 2024-25, finance minister Thangam Thennarasu said Tamil Nadu's growth was higher than that of the national GDP, which was a positive sign, and that the growth advantage was expected to continue in the next year through resource augmentation and improvement in revenue collection efficiency.

Addressing the state Assembly, he said the proposals had been prepared on the basis of the seven objectives of the DMK government namely social justice, welfare of the marginalised, transforming young Tamils as global achievers, knowledge ... ture.

Comparing the objectives to the colours of the rainbow, Mr Thennasaru came up with a slew of announcements which included the 'Thayumanavar scheme' to launch a final assault on poverty in the next two years by rescuing around five lakh poorest families from the clutches of poverty and the 'Tamil sons scheme' under which boys who studied in government schools from Class 6 to 12 would get an assistance of ₹1,000 a month if they enrolled for higher education.

Among the proposals to improve the transport sector was the allocation of ₹12,000 crore for the Chennai Metro Rail Phase-II and the announcement made through the budget was that the first elevated ...



**INVESTING IN FUTURE**

- Monthly aid of ₹1,000 to government school students
- Hi-Tech labs and smart classrooms: ₹960 crore
- Skill labs in 100 government and aided colleges: ₹200 crores
- Education loans to one lakh college students
- Basic amenities in tribal habitations: ₹1,000 crore
- Credit disbursement to SHGs: ₹35,000 crore
- Vada Chennai Valarchi Thittam: ₹1,000 crore
- Restoration of Adyar River: ₹1,500 crore
- IT park in Coimbatore: ₹1,100 crore
- Textile parks in Virudhunagar and Salem districts: ₹2,483 crore
- Hi-Tech film city in Poonamallee: ₹500 crore
- Plug and play facilities in Coimbatore, Krishnagiri, Tiruvallur districts

God-given ... rebuild In...

DC CORRESPONDENT WITH AGENCY INPUTS
NEW DELHI/SAMBHAL (UP), FEB 19

Asserting that the wheel of time has turned for the country as it records many firsts and sets an example for the world, Prime Minister Narendra Modi on Monday said that God has given him the duty to rebuild the temple that is India.

Addressing a gathering after laying the foundation stone of Shri Kalki Dham temple in Uttar Pradesh, he said that on the day of the Ram Mandir's consecration ceremony in Ayodhya, he had said a new cycle has started from January 22.

Recalling the consecration ceremony of the Shri Ram Janmabhoomi Temple in Ayodhya, the Prime Minister reiterated the beginning of a n...

உயர் கல்வித் துறை மற்றும் பிரிட்டிஷ் ஹைஹ-கமிஷன் இணைந்து,

# ‘யங் புரொபசனல் ஸ்கீம்’ திட்டத்தின் மூலம் 3000 இளைஞர்களுக்கு விசா விண்ணப்பம் பெறுவதற்கான நிகழ்வு!

உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் - பிரிட்டிஷ் உயர் ஆணையர் அலெக்ஸ் எல்லீஸ் முன்னிலையில் நடைபெற்றது!

சென்னை, பிப். 22 - அண்ணா பல்கலைக் கழக விவேகானந்தர் கூட்டரங்கில் 20.02.2024 அன்று பகல் 2 மணியளவில் உயர்கல்வித்துறை மற்றும்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் மற்றும் பிரிட்டிஷ் உயர் ஆணையர் அலெக்ஸ் எல்லீஸ் முன்னிலையில் தமிழ்நாடு உயர்கல்வித் துறை மற்றும் பிரிட்டிஸ் ஹை - கமிஷன் இணைந்து, ‘யங் புரொபசனல் ஸ்கீம்’ திட்டத்தின் மூலம் 18 முதல் 30 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு விசா விண்ணப்பம் பெறுவதற்கான நிகழ்வு நடைபெற்றது.

இதன் மூலம் நமது இந்திய இளைஞர்கள் இரண்டு வருட காலத்திற்கு பிரிட்டன் சென்று வேலைவாய்ப்பு பெறவும், பிரிட்டிஷ் இளைஞர்கள் நமது இந்தியாவில் தங்கி வேலைவாய்ப்பு பெறவும் வழி செய்கிறது. இதன் மூலம் இருநாட்டு இளைஞர்களும் தங்களுடைய மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளவும் தொழில் துறை சார்ந்த அறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் துணை செய்கிறது.

இந்நிகழ்ச்சியில் பேசிய உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியை மேம்படுத்தி, புதுமையான ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் 28 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ‘புதுமைப் பெண்’ திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் 3 லட்சம் மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக மாதம் ரூபாய் 1000- வழங்கும் திட்டமும் செயல்படுத்தி வருகிறார் என்றும் தெரிவித்தார்.

மேலும் 2024-2025 பட்ஜெட்டில் முதலமைச்சர் அவர்கள் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற மாணவியர்களுக்கும் புதுமைப் பெண் திட்டம் அமல்படுத்தப்படும் என தெரிவித்து ரூ.370 கோடி நிதி வழங்க அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இதுபோலவே அரசு பள்ளியில் படிக்கும் ஏழை எளிய மாணவர்களுக்கும் ‘தமிழ் புதல்வன்’ என்னும் திட்டத்தின் கீழ் மாதம் ரூ,1000 வழங்க அறிவித்துள்ளார்கள் என தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், உயர்கல்வியில் தொழில்முறை படிப்புகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீட்டை நமது தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார் என்றும், இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன் மாதிரி மாநிலமாக திகழ்கிறது என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய வெளியுறவு அமைச்சக குடியேற்றக் கொள்கைத் திட்ட இயக்குநர் நிதேஷ்குமார், அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் ஆர்.வேல்ராஜ், கிண்டி அண்ணா பொறியியல் கல்லூரி டீன் சுகந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.





தூத்துக்குடி வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் வார் ரூமை தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கீதா ஜீவன், கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. ஆகியோர் இணைந்து திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன், துணைச் செயலாளர் ஜெ.பச்சையப்பன், தினேஷ், தலைமைக் கழக வழக்கறிஞர் கே.ஜே. சரவணன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.குபேர் இளம்பரிதி, தலைவர் நாகராஜன், துணைத்தலைவர் அழகர்சாமி, துணை அமைப்பாளர்கள் பிரபு, மகேந்திர குமார், வெயில் முத்து, விநாயக மூர்த்தி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சீனிவாசன், அயலக அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.பி.அசோக், அயலக அணி துணை அமைப்பாளர் என்.எஸ்.கிறிஸ்டோபர், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அபிராமி நாதன் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர் மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

‘எல்லோருக்கும் எல்லாம்’ எனும் ‘திராவிட மாடல்’ ஆட்சி நடத்தும் முதல்வர் - கழகத் தலைவரின் பிறந்த நாளை

# கழக வழக்கறிஞர் அணி சார்பில் - நீதிமன்றங்கள்தோறும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நடந்த - மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப். 22 - கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நடைபெற்ற தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில், ‘எல்லோருக்கும் எல்லாம்’ எனும் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் முதல்வர் - கழகத் தலைவரின் பிறந்த நாளை, கழக வழக்கறிஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதுமுள்ள மாவட்டங்களிலும், வெளிமாநிலங்களிலும் மற்றும் நீதிமன்றம் தோறும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!” எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (20.2.2024) காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக சட்டத்துறை அலுவலகத்தில் சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி., தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டத் துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், ஈரோடு ராதாகிருஷ்ணன், இரா.தாமரைச்செல்வன் - துணைச் செயலாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே. சந்துரு, வி.வைத்தியலிங்கம் - தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றி கொண்டான், கவி கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு :

‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளான மார்ச்1 அன்று கழக வழக்கறிஞர் அணியின் சார்பில் தமிழ்நாடு முழுவதுமுள்ள மாவட்டங்களிலும், வெளி மாநிலங்களிலும் மற்றும் நீதிமன்றம் தோறும் சிறப்பாக கொண்டாடுவது என இக்கூட்டம் தீர்மானிக்கி றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்களுக்கு தேர்தல் பணிகளில் உதவிடும் வகையில் தி.மு.க. வழக்கறிஞர் அணியின் சார்பில் கழக மாவட்டங்கள் தோறும “வார் ரூம்”அமைப்பதற்கு உத்தரவிட்ட கழகத் தலைவர் அவர்களுக்கும் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இந்தக் கூட்டம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

### வெற்றியை நோக்கிய நம் பயணம்!

“#Election2024 வெற்றியை நோக்கிய நம் பயணத்தில் அடுத்த நூறு நாட்களும் மிக முக்கியமானவை. கடமையுணர்வோடு ஓய்வின்றி உழைப்போம்; #INDIAவை வெற்றி பெறச் செய்வோம்!” என தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் நேற்று சமூகவலைதளத்தில் வெளியிட்ட அறிக்கையின்படி, கழக வழக்கறிஞர் அணியினர் “இந்தியா கூட்டணி” வேட்பாளர்கள் அனைவரையும் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிடும் வகையில், தங்களுடைய பணிகளை கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ, எம்.பி., தலைமையில் முழுமூச்சுடன் சிறப்பாக பணியாற்றுவது என இக்கூட்டம் தீர்மா னிக்கிறது.

கழகத்தின் இரத்த நாளங்களாகச் செயல்படும் இளைஞர் அணியின் செயலாளர் பொறுப்பு ஏற்ற நாள் முதல், தனது முத்திரை பதிக்கும் விதமாக மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதுடன், அதற்கு முத்தாய்ப்பாக கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டில் எட்டு இலட்சத்திற்கும் மேலான இளைஞர்களை கலந்து கொள்ளச் செய்து, கழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்தக் கூட்டம் மனதாரப் பாராட்டுவதோடு, நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டை பொருளாதார வளர்ச்சி அடைந்த முதல் மாநிலமாக ஆக்கிட, அல்லும் பகலும் அயராது உழைத்து வருவதோடு, அதன் ஒரு பகுதியாக ஸ்பெயின் நாட்டிற்கு பத்து நாள் பயணம் மேற்கொண்டு அந்நாட்டு நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்த்து, வெற்றிப்பயணமாக முடித்து தாயகம் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை இக்கூட்டம் மனதாரப் பாராட்டி, வாழ்த்துகிறது.

தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக “கேலோ இந்தியா” விளையாட்டை இந்திய மாநிலங்களே வியக்கும் வண்ணம் மிகச் சிறப்பாக தமிழ்நாட்டில் நடத்தி, அப்போட்டியில், வரலாற்றில் இல்லாத அளவிற்கு அகில இந்திய அளவில் தமிழ்நாட்டை இரண்டாவது இடத்திற்கு உயர்த்தி, இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாட்டை உயர்த்தி காட்டியுள்ள கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்த கூட்டம் மனதார பாராட்டி வாழ்த்துகிறது.

### திராவிட மாடல் கிரீடத்தில் மற்றொரு வைரக்கல்!

அல்லும் பகலும் அயராது நேர்மையான ஆட்சி நடத்தி வரும், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் ஆட்சியில், எதிர்த்தரப்பினரும் குற்றம் குறை சொல்ல முடியா தளவிற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் சிவில் நீதிபதிகள் தேர்வு நடத்தி, அத்தேர்வில் தமிழ்நாட்டில் ஏழையெளிய மற்றும் மிகவும் பின் தங்கிய குடும்பத்தில் இருந்து வந்தவர்கள் சிவில் நீதிபதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றவிருக்கின்ற நிலையில், குறிப்பாக, தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த மலைக் கிராமத்தில் வசித்து வரும் மலைவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபதி எனும் மகளிரும் - அதைப் போலவே, பல்வேறு மாவட்டத்தைச் சேர்ந்த விளிம்பு நிலை குடும்ப பின்னணியைக் கொண்ட தமிழ் வழியில் பயின்ற முதல் தலைமுறைப் பட்டதாரிகள், இச்சிவில் நீதிபதிகள் தேர்வில் வெற்றி பெற்று நீதிபதிகளாக பொறுப்பேற்று மக்களுக்கு பணியாற்றிட இருப்பது, “எல்லோருக்கும் எல்லாம்” என்றும், “சொல்வதைச் செய்வோம், சொல்லாததைச் செய்வோம்” என்ற தாரக மந்திரங்களுடன், வறிய மக்களுக்காகவும் பணியாற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் “திராவிட மாடல்” ஆட்சியின் கிரீடத்தில் பதிக்கப்பட்ட மற்றொரு வைரக்கல் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு, மக்களுக்காக சிந்தித்து, மக்களுக்காகப் பணியாற்றி, தமிழ்நாட்டு மக்கள் வாழ்வை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் மேம்படுத்தி வரும் “திராவிட மாடல் ஆட்சி நாயகன்” தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அதிகாரபூர்வமற்ற அணிகளாக செயல்பட்டு வரும் அமலாக்கத் துறை, வருமானவரித் துறை, சி.பி.ஐ., ஆகியவற்றின் செயல்பாடுகளை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

திராவிட இயக்கக் கோட்பாடுகளைக் கொண்ட, ‘எல்லோருக்கும் எல்லாமுமான’, கடைக்கோடி மனிதருக்கும் நலவாழ்வு அளிக்கும் மிகச் சிறந்த 2024-2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கழக அரசு தாக்கல் செய்திருக்கிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டுக்கு நிதிஒதுக்கீடு செய்வதில் வஞ்சிக்கின்ற நிலையிலும் மிக நிதி நெருக்கடியான இக்கால கட்டத்தில், எதிர்த் தரப்பினரே பாராட்டும் வண்ணம் இந்தியாவிலேயே மிகச் சிறந்த நிதிநிலை அறிக்கையை செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் - நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும் இக்கூட்டம் தனது பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தான் வகித்து வரும் பொறுப்புணர்ந்து பணியாற்றாமல், அரசியலமைப்புச் சட்டம் வகுத்த வழியின் படி நடக்காமல், எதேச்சாதிகாரத்துடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, நடைபெற்று வரும் தமிழ்நாட்டு பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை அவமதித்து வெளியேறிய ஆளுநர் அவர்களின் இச்செயலை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன்,

நம் உயிரனைய “தமிழ்த் தாய் வாழ்த்து”ப் பாடலை, கழகத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, கழக நிகழ்ச்சிகள் அனைத்திலும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்படும் என்று அறிவித்துள்ள கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் தனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

### இரங்கல் தீர்மானம்

கழகம் துவக்கப்பட்ட போது, தலைமைக் கழக அலுவலகமாகச் செயல்பட்டு வந்த சென்னை, இராயபுரம், அறிவகத்தில் தொடங்கி, அரசினர் தோட்ட சட்டமன்ற அலுவலகம், அன்பகம், அண்ணா அறிவாலயம் என அனைத்து கழகத்தின் தலைமை அலுவலகத்திலும் பணியாற்றி, தமிழ்நாடு முழுவதும் உள்ள கழக முன்னோடிகள், நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவராலும் அறியப்பட்டவரும் - முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் எண்ணங்களை செயலாக்கி, அவர்களின் பேரன்பைப் பெற்றவருமான தலைமைக் கழக துணை மேலாளர் என். ஜெயக்குமார் அவர்களின் மறைவிற்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


தமிழ்நாடு அரசு - நெடுஞ்சாலைத்துறை

திட்டங்கள் வட்டம், சென்னை–16

கலைஞர் 100 1924 - 2023

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.20 /2023–24/முவஅ/ நாள்:19.02.2024

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் **கண்காணிப்புப் பொறியாளர் (நெ) திட்டங்கள் வட்டம், சென்னை** அவர்களால், டிசம்பர் 2013–ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மாநாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பின் கீழ், கடலூர் (நெ) திட்டங்கள் கோட்டத்திற்கான **ஒரு உயர்மட்டப் பாலப்பணிக்கு** (மீதமுள்ள பணி) இணையவழியில் மட்டுமே **சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 12.03.2024, 14.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **23.02.2024** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/ மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், சென்னை –16**

செ.ம.தொ.இ./ 1057 /ஒப்பந்தப்புள்ளி/2024


## தி.மு.க. தொழிலாளர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (23-2-2024- வெள்ளிக்கிழமை), காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள், நாடாளுமன்றத் தேர்தல் குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 20.02.2024

பிடிசி ஜி.செல்வராஜ்
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி

## தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (நான்காவது பட்டியல்)

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில - மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### புதுச்சேரி மாநிலம்

தலைவர் : அ . அலெக்ஸ்சாண்டர், 1, 9-வது குறுக்குத் தெரு, முருகன் கோவில் பகுதி, நெல்லித்தோப்பு, புதுச்சேரி-605 005,

துணைத் தலைவர் : சுனில்குமார், 2, 13-வது குறுக்குத் தெரு, கிருஷ்ணா நகர், இலாசுப்பேட்டை -608 008,

அமைப்பாளர் : **முகம்மது ஹாலிது,** 45, முதல் குறுக்குத் தெரு, முஹம்மதியா நகர், சுல்தான்பேட்டை, வில்லியனூர், புதுச்சேரி-605110

துணை அமைப்பாளர்கள் : ஐசக் நேசமணி, 48, கல்வே பங்களா, உருளையன்பேட்டை, புதுச்சேரி-11 கா. முகமது இஸ்மாயில், 40, 3-வது குறுக்குத் தெரு, கென்னடி நகர், உருளையன்பேட்டை, புதுச்சேரி நாகூர் மீரான், 23, திருப்பூர் குமரன் வீதி, சோழபுரம், ஆர்.கே.நகர், அரியாங்குப்பம், புதுச்சேரி-7 ஷா. ஷேக், 8-ஏ, குறிஞ்சி வீதி, சோலை நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி அ.முகமது இஸ்மாயில்பாஷா, Q பிளாக், எண்-1, தியாகு முதலியார் நகர், புதுச்சேரி- 9 அ. சையது அபுதாஹிர், 15, பாண்டி மெயின் ரோடு, மதகடிப்பட்டு, புதுச்சேரி-605107 லியாகத் அலி (எ) ஹாருத்துல்லி, 4, காயிதே மில்லத் வீதி, சொர்ணா நகர், அரியாங்குப்பம், புதுச்சேரி-605007, மரிஜோசப்திவி, 56, முதலியார் தோட்டம், மாரியம்மன் கோவில் தெரு, மேரிஉழவர்கரை, புதுச்சேரி-4 நோயல், 21, லசார் கோவில் வீதி, திப்புராயப்பேட்டை, புதுச்சேரி.

### கரூர் மாவட்டம்

தலைவர் : என்.எஸ்.கே.ஹக்கீம் பாவா, 42, அம்பா மன்ஜில், பழைய கடைவீதி, கரூர் - 639 001

துணை தலைவர் : இ.ஹபிபுல்லா, 6, முதலியார் வீதி, புஞ்சை புகளூர், புகளூர் வட்டம், கரூர் - 639 113.

அமைப்பாளர் : **சி.நவாஸ்கான்,** 14/1, தட்டாங்காடு ஹை ஸ்கூல் மேடு, புகளூர் வட்டம், கரூர் மாவட்டம் - 639 113

துணை அமைப்பாளர்கள் : இ.முஜிபுர் ரகுமான், 309, செல்லுமீரான் நகர், பள்ளப்பட்டி அஞ்சல், அரவக்குறிச்சி வட்டம், கரூர் - 639 205. மு.ஷாஜஹான், 13/50, நடுத்தெரு மைலம்பட்டி, கீழ்ப்பகுதி அஞ்சல், கடவூர் வட்டம், கரூர் - 621 301. அ.ஷரீப், 84, திண்ணப்பா நகர் விஸ்தரிப்பு, காந்திகிராமம், பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் - 639 004, அ.ஷாஜஹான், 21/352, சத்திர தெரு, தோகைமலை அஞ்சல், குளித்தலை வட்டம், கரூர் - 621 313. கே.எ.சையது முகம்மது முஸ்தபா, 5,லெப்பை சாய்பு தெரு, பள்ளப்பட்டி அஞ்சல், அரவக்குறிச்சி வட்டம், கரூர் - 639 205. டி.ஏ.எஸ். ராஜ் கபூர், சிந்தாமணிப்பட்டி அஞ்சல், கடவூர் வட்டம், கரூர்-621 301.

### காஞ்சிபுரம் மாநகரம்

தலைவர் : ஏ.அஹ்மத் முஸ்தபா, மளிகை செட்டி தெரு, காஞ்சிபுரம். துணைத் தலைவர் : ஜி. சையது குரு பாஷா, பி.கே.எஸ்.தெரு, காஞ்சிபுரம்,

அமைப்பாளர் : **ஆர்.எம்.இஸ்மாயில்,** 71, பள்ளிக்கூடத்தான் தெரு, காஞ்சிபுரம், அமைப்பாளர்கள் : ஏ.ராபின் பிரேம்குமார், 2, திருத்தணி முருகன் சாலை தெரு. சதாசிவம் நகர் காஞ்சிபுரம், ஹஃபிலில் அஹமத், 482, இரும்புகடை சந்து காந்திரோடு, காஞ்சிபுரம். எஸ்.சமியுல்லா, இரும்புகடை சந்து, காந்திரோடு - காஞ்சிபுரம், எம்.முஹம்மது இம்தியாஸ், 56, ஜவஹர்லால் தெரு, காஞ்சிபுரம் சி.எஸ்.ஆல்பின் எடிசன் 7.பிளாக் காவலர் குடியிருப்பு பெருமாள் தெரு, காஞ்சிபுரம்,

### தாம்பரம் மாநகரம்

அமைப்பாளர் : **ர. அகஸ்டின்,** 19/7, 2வது தெரு, அரங்கநாதபுரம், சென்னை-600045.

துணை அமைப்பாளர்கள் : வி. ஜீலியன் அதிசயராஜ், 1பி, அம்மன்கோயில் தெரு,ராஜிவ்காந்தி நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை. எம். குத்துஸ்கனி, 3/17, 2வது குறுக்கு தெரு, அரங்கநாதபுரம், சென்னை - 600045. அருள் பிரான்சிஸ் 3, ராஜாஜி சாலை, கரிகாலன் நகர், அனகாபுத்தூர், சென்னை-600070. து. அந்தோணி, 27, பரமேஸ்வரன் தெரு, பழைய பல்லாவரம், சென்னை-600117. அ. ரொனால்ட் ரொகிரியோ 11, குறிஞ்சி நகர், பழைய ஜி.எஸ்.டி.ரோடு, இரும்புலியூர், கிழக்கு தாம்பரம் ந.இன்பராஜ், பொழிச்சலூர் மெயின் ரோடு, சென்னை - 75

### நாகர்கோவில் மாநகரம்

தலைவர்: ஹ. முகமது அலி, 117D. ஒயிட் ஹவுஸ், ஹனிபா நகர், நாகர்கோவில்.

துணைத் தலைவர் : அ.ஜார்ஜ் சிங், 162/2, புதுக்குடியிருப்பு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - 629001,

அமைப்பாளர் : **த. முகம்மது ஹிதாயத்,** 50- ஏ, அரிப்புத் தெரு, கோட்டார். நாகர்கோவில்,

துணை அமைப்பாளர்கள் : சு. விஜிகுமார், 1476/305-சி, கே.பி. ரோடு, பார்வதிபுரம், நாகர்கோவில் - 629003, ர.மாஹீன், 3/82, நடுத்தெரு, வடக்கு சூரங்குடி. நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். எஸ்.ஷஜீ, எஸ்.எல்.பி. தெற்கு சாலை, நாகர்கோவில் - 629001. கோ.ஜெகதீஷ். 27. காசுகடை தெரு, கோட்டார். நாகர்கோவில், கன்னியாகுமரி - 629002. ஜா. பனிப்பிச்சை, 15/32, குழந்தை இயேசு தெரு, ஆர்.சி.தொடக்கப் பள்ளி எதிரில், புன்னை நகர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் 629004.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.2.2024

டாக்டர் அ.சுபேர்கான்
செயலாளர்,
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# நாடும் ஏடும் போற்றும் தனி சிறந்த பட்ஜெட்!

## தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

செவ்வாய்க்கிழமை 20-2-2024
சோபகிருது மாசி 8 ஹிஜ்ரி 1445 ஷஃபான் 9

### 'சபாஷ்' பட்ஜெட்!

## இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்
INDHU TAMIZH THISAI - TAMIL DAILY
சென்னை பதிப்பு (CHENNAI) • TUESDAY, FEBRUARY 20, 2024

அரசுப் பள்ளியில் படித்து கல்லூரியில் சேர்வதை ஊக்கப்படுத்த

### 3 லட்சம் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000

• தமிழக பட்ஜெட்டில் 'தமிழ் புதல்வன்' திட்டத்தை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார். புதிதாக 3,500 பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும், கிராமப்புற பகுதிகளில் 8 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



**பட்ஜெட் முக்கிய அம்சங்கள்**
- ரூ.500 கோடியில் 5,000 நீர்நிலைகள் சீரமைப்பு
- வறுமை ஒழிப்புக்கு 'முதல்வரின் தாயுமானவர்' திட்டம்
- மகளிர் உரிமை திட்டத்துக்கு ரூ.13,720 கோடி
- அரசு உதவி பள்ளிக்கும் காலை உணவு திட்டம்
- கல்லூரி மாணவருக்கு ரூ.2,500 கோடி கல்விக் கடன்
- கிராமப்புறங்களில் சிற்றுந்து சேவை
- நிதி பற்றாக்குறையை குறைத்து சாதனை

## THE NEW INDIAN EXPRESS

TAMIL NADU'S NOMINAL GSDP GROWTH IS EXPECTED TO BE AT 15.9% IN 2024-25; THE STATE'S OUTSTANDING DEBT BY MARCH 2025 WILL TO BE ₹8.33 LAKH CRORE

### GOVT BLOWS POLL BUGLE, COURTS YOUTH, MARGINALISED IN BUDGET

### DEFICIT & TANGEDCO

EXPRESS NEWS SERVICE @Chennai

TAMIL Nadu's outstanding debt will reach ₹8,33,361.80 crore on March 31, 2025, if the government borrows ₹1,55,584.48 crore and makes a repayment of ...

## தினமணி

### ஏழைகளுக்கு 8 லட்சம் கான்கிரீட் வீடுகள்

கல்லூரி மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 | காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் | தமிழக பட்ஜெட்டில் அறிவிப்பு | 7 இலக்குகள்



## தினகரன்

ஒரு புதிய அனுபவம்
Dinakaran

அரசு பள்ளிகளில் படித்து கல்லூரிகளில் சேரும்

### மாணவர்களுக்கு மாதம் ₹1000

தமிழ்நாடு பட்ஜெட்டில் அதிரடி அறிவிப்புகள்

**2.07 மணி நேரம் பட்ஜெட்டை படித்த அமைச்சர்**

- 8 லட்சம் கான்கிரீட் வீடுகள்
- 5 லட்சம் ஏழைகள் வறுமை ஒழிப்பு
- 3000 புதிய பேருந்துகள்
- ₹4500 கோடியில் கிளாம்பாக்கத்துக்கு மெட்ரோ ரயில்
- 5 நகரங்களில் இலவச வைஃபை
- அடையாறு ஆற்றை சீரமைக்க ₹1500 கோடி



மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு ₹13,720 கோடி

## தினத் தந்தி

DAILY THANTHI
வெல்க தமிழ்

அரசு பள்ளியில் படித்து கல்லூரியில் சேரும்

### 3 லட்சம் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000



**தமிழக பட்ஜெட்டில் அறிவிப்பு**

அரசு பள்ளியில் படித்து கல்லூரியில் சேரும் 3 லட்சம் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்று தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. ...

## தினமலர்

### வறுமையை ஒழித்துக்கட்ட தமிழக அரசு... 5 லட்சம் குடும்பங்களை கரை சேர்க்க திட்டம்

சென்னை, பிப். 20-

... 2024 – 25ம் நிதியாண்டுக்கான தமிழக அரசின் பட்ஜெட்டை, நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று சட்டசபையில் தாக்கல் செய்தார்.



பட்ஜெட் தாக்கல் செய்ய முதல்வர் ஸ்டாலினுடன் சட்டசபைக்கு வந்த அமைச்சர் தங்கம் தென்னரசு.

## நமது வீரர், வீராங்கனைகள் பல உயரங்களைத் தொட - நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்!

# தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக உருவாக்குவோம்!

## சென்னை – ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

சென்னை, பிப்.22–

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுவீரர்கள் பயன்பாட்டிற்காக சென்னை, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் வளாகத்தில் சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் ரூ.44 கோடியே 8 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கட்டடங்களையும், பல்வேறு இணையதள சேவைகளையும் துவக்கி வைத்து பத்திரிக்கையாளர்கள் சந்திப்பின்போது பேசுகையில், "தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக உருவாக்குவோம்" என்று குறிப்பிட்டார்.**

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-

இன்றைக்கு தமிழ்நாடு அரசின் 2024-25 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இதில் ரூ.440 கோடி விளையாட்டு மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நம்முடைய முயற்சிகளுக்கு அங்கீகாரம்!

முந்தைய சந்திப்பின்போது விளையாட்டுத் துறைக்காக நீங்கள் நிறைய நல்ல கருத்துக்களை அளித்திருந்தீர்கள். உங்களுடைய கருத்துக்களின் அடிப்படையில் விளையாட்டுத் துறையில் பல்வேறு புதிய முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டோம். அதன் பலனாக இன்றைக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஏராளமான சாதனைகளை படைத்து வருகிறது. இந்திய ஒன்றியத்தில் விளையாட்டில் இன்றைக்கு தமிழ்நாடு சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது என்று பெருமையாக சொல்லிக் கொள்ளலாம். நாம் துறையின் உடைய சாதனைகளுக்கான அங்கீகாரங்கள் பல்வேறு திசைகளிலிருந்து வந்து கொண்டிருக்கிறது.

சென்ற வாரம் மும்மையில் நடைபெற்ற நிகழ்வில் தி இந்து ஸ்போட்ஸ் ஸ்டார் பத்திரிக்கையுடைய ஸ்போட்ஸ்ஸ்டார் ஏசஸ்-2024 விருதுகளை வழங்கும் விழாவில் நம்முடைய தமிழ்நாட்டிற்கு Best State for Promoting sports என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. நம்முடைய முயற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கிடும் வகையில் Confederation of Indian industries (CII) சார்பாக Best State Promoting sports என்ற விருதும் தமிழ்நாட்டிற்கு முதன் முறையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் துறை தலைநகரமாக மாற்ற வேண்டும் என்பதே நமது முதலமைச்சரின் இலட்சியம் எண்ணம். அதனை நோக்கித் தான் நமது துறை பயணித்துக் கொண்டிருக்கிறது.

### ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம்!

சென்ற ஆண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ஒரு மிகப் பெரிய Happening ஆண்டு சொல்லாம். நம் துறை செயலாளர் சொன்னது போல் மதுரையில், தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்துக்கும் மேற்ப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்குரூ.86 கோடி செலவில் கலைஞர் விளையாட்டு உபகரணம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தோம். அதே போன்று ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையத்தை தொடங்கி வைத்தோம். திறமையாளர்கள், நகரம், கிராமம் என எல்லா இடங்களிலும் உள்ளனர். அவர்களை கண்டறிந்து வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு 5 பிரிவுகளில் முதல்வர் கோப்பை விளையாட்டு போட்டி நடத்தினோம்.

கிட்டத்தட்ட 3 லட்சத்து 71 ஆயிரம் பேர் போட்டியில் பங்கேற்றனர். ஆசிய சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கி தொடரை வெற்றிகரமாக நடத்தினோம். ஊடக நண்பர்கள் அந்த போட்டியை பட்டி தொட்டி வரை கொண்டு சேர்த்தனர். அதற்கு உங்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் எங்களது துறைசார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டியை முதன் முறையாக தமிழகத்தில் கடந்த ஜனவரியில் வெற்றிகரமாக நடத்தினோம். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்ட இந்த தொடரில் தமிழ்நாடு முதன்முறையாக பதக்க பட்டியலில் 2-வது இடம் பிடித்தது மகிழ்ச்சி. இந்த நேரத்தில் அந்த வீரர், வீராங்கனைகளுக்கு பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வதேச அலைச்சறுக்கு போட்டியை நடத்தி காட்டினோம். ஸ்குவாஷ் உலகக் கோப்பை, ஹெச்சில் சைக்கிளத்தான், சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ், பிரைம் வாலிபால் லீக் இப்படி பல போட்டிகளை தொடர்ச்சியாக நடத்தி வருகிறோம். விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதாரம் தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை தொடங்கினோம். முதல்வர் அவர்கள், இந்த அறக்கட்டளைக்கு அவர்கள் சொந்த நிதியில் இருந்து ரூ.5 லட்சம் வழங்கினார்கள். இந்த அறக்கட்டளையின் வாயிலாக இதுவரைக்கும் 300-க்கும் அதிகமான வீரர்களுக்கு ரூ.6 கோடி வரை நிதி உதவி வழங்கி உள்ளோம்.

இதில் நிதி உதவி பெற்றவர்கள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் வென்று பெருமை சேர்ப்பது மகிழ்ச்சியாக உள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துக்கு 16 வருடங்களுக்குப் பிறகு 76 பயிற்சியாளர்கள் வெளிப்படையான முறையில் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசுவேலை வாய்ப்பில் விளையாட்டுக்கு 3 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கி உள்ளோம். சர்வதேச போட்டி, தேசிய விளையாட்டு போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணி வழங்கி உள்ளோம். விளையாட்டு விடுதி மாணவர்களுக்கு உதவித்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆசிய விளையாட்டு போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 9 தங்கம் உட்பட 28 பதக்கங்கள் வென்றுள்ளனர் .அவர்களுக்கு ரூ.9.45 கோடியை உயரிய ஊக்கத் தொகையாக தமிழ்நாடு முதல்வர் அவர்கள், தங்களது கைகளால் வழங்கி உள்ளார். பாரா ஆசிய விளையாட்டில் 2 தங்கம் உள்பட 15 பதக்கங்கள தமிழக வீரர், வீராங்கனைகள் வென்றனர். அவர்களுக்கு ரூ.4 கோடி அளவுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டியில் முதன்முறையாக 38 தங்கம் உள்பட 98 பதக்கங்களுடன்2-வது இடம் பிடித்தது.

### மினி ஸ்டேடியம்!

இந்த வீரர்களை விரைவில் கவுரவிக்க உள்ளோம். நம்முடைய வீரர்கள், தடகளம், பாட்மிண்டன், ஸ்குவாஷ், செஸ் விளையாட்டுகளில் சர்வதேச அளவில் மிகப்பெரிய வெற்றிகளை குவித்து வருகின்றனர். தமிழக விளையாட்டுத் துறையின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு தொகுதிக்கு ஒரு மினி ஸ்டேடியம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. அதற்கான பணி நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக 9 தொகுதிகளில் மினி ஸ்டேடியம் விரைவில் திறக்க உள்ளோம். 6 மாவட்டங்களில் விளையாட்டு அரங்கம், 4 இடங்களில் ஒலிம்பிக் அகாடமி, 6 இடங்களில் பாரா விளையாட்டு அரங்கம் ஏற்படுத்த உள்ளோம். ராமநாதபுரத்தில் தமிழ்நாடு ஒலிம்பிக் வாட்டர் ஸ்போர்ட்ஸ் அகாடமி தொடங்க உள்ளோம்.

மணிப்பூரில் கலவரம் நடைபெற்ற போது அங்குள்ள வீரர்கள் தமிழகத்தில் பயிற்சி மேற்கொள்ளலாம் என முதல்வர் அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார். அதன் படி 15 வாள்வீச்சு வீரர்கள் தமிழகத்திற்கு வந்தனர். அவர்களுக்கான பயண செலவு, தங்கும் இடம், உணவு என அனைத்து வசதியையும் தமிழ்நாடு அரசு ஏற்றது. சிறப்பு என்னவென்றால் இதில் 2 பேர் கேலோ இந்தியா விளையாட்டு போட்டியில் பதக்கம் வென்றனர். அதற்கு நாம் வழங்கிய பயிற்சியே காரணம். தற்போது மீண்டும் மணிப்பூர் அரசிடம் இருந்து கோரிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அவர்களது குத்துச் சண்டை வீரர்களுக்கு சென்னையில் பயிற்சி வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஒரு சிலதினங்களில் அவர்கள் இங்குள்ள வசதியை காண்பதற்கு வருகை தர உள்ளனர். விளையாட்டு சார்ந்த பயிற்சிகள் மற்றும் கட்டமைப்புகளை பயன்படுத்திக் கொள்ள ஒடிசா மாநிலத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதேபோன்று ஜுவாலா கட்டா அகாடமியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன்படி ஹைதராபாத்தில் உள்ள அவர்களது பயிற்சி மையத்தில் தங்கி



நமது வீரர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்படி என்ன என்ன வாய்ப்புகள் இருக்கிறதோ, அதை அனைத்தையும் பயன்படுத்தி தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையை இந்திய ஒன்றியமே உற்று நோக்கும் அளவுக்கு உயர்த்தி உள்ளோம்.

நம்முடைய முயற்சிகள் அனைத்தும் ஒவ்வொன்றும் முழுமைபெற ஊடக நண்பர்களான உங்களுடைய ஒத்துழைப்பு அவசியம், முக்கியம். இனிமேல் உங்களை அடிக்கடி சந்தித்து நான் பேசுவேன். உங்களுடன் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அதிகாரிகள் தொடர்பில் இருப்பார்கள். உங்களுடைய ஆலோசனைகளை அடிக்கடி எங்களிடம் கூறுங்கள். நம்முடைய வீரர், வீராங்கனைகள் பல உயரங்களை தொட நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயல்படுவோம். தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக உருவாக்குவோம். நன்றி வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

## பேட்டி

இதன் தொடர்ச்சியாக பத்திரிகையாளரின் கேள்விகளுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் அதிகாரிகள் கூறிய பதில்கள் வருமாறு:-

**கேள்வி:** கேலோ இந்தியா விளையாட்டு போட்டியை நடத்தியதன் மூலம் கிடைக்கப்பெற்ற படிப்பினை என்ன? குறிப்பாக TNPESU வெகுதொலைவில் அமைத்து இருக்கிறதே , அதை எப்படி பார்க்கிறீர்கள்?

**அதிகாரி** : இதற்கு முன்பு நடைபெற்ற கேலோ இந்தியாவை ஒப்பிடும் வகையில், தற்போது நடந்த கேலோ இந்தியா மிக சிறப்பாக நடந்தது என்று இப்போட்டியில் பங்கெடுத்த வீரர்கள் குறிப்பிடுகிறார்கள். இதற்கு முக்கியமான காரணம் இப்போட்டி சென்னையில் நடந்தது. இங்கு அனைத்துவிதமான ஏற்பாடும்செய்யப்பட்டிருந்தது. TNPESU தொலைவில் இருந்தாலும் அங்கு அனைத்து விதமான வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. யாரும் போட்டிக்கு தாமதமாக வரவில்லை. அங்கு அனைத்து விதமான வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எங்களுடன் இந்திய விளையாட்டு ஆணையம் சேர்ந்து இந்த விளையாட்டு போட்டியை வெற்றிகரமாக நடித்தினோம். நாங்கள் அவ்வாறு எந்த சிரமத்தையும் எதிர்கொள்ளவில்லை.

**கேள்வி:** கேலோ இந்தியா போட்டியை நடத்தியதன் மூலம் விளையாட்டை நம்மா நிலத்தில் முன்னெடுப்பதற்கான படிப்பினை என்ன?

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்:** கடந்த கேலோஇந்தியா போட்டியில் தமிழ்நாடு 7வது இடத்தில் இருந்தது, தற்போது 2வது இடத்தை பெற்றிருக்கிறது. இதன் மூலம் விளையாட்டுக்கான முக்கியத்துவத்தை நம் மாநிலம் எப்படி தருகிறது என்பது தெரியும். மேலும் இதன் மூலம் திறமையான வீரர்களை கண்டுள்ளோம். அவர்களுக்கான பயிற்சி அளிக்கபட உள்ளது

**கேள்வி:** நம் மாநிலத்தில் உள்ள விளையாட்டு கட்டமைப்பு பற்றி கூறுங்கள்.

**அதிகாரி:** இதற்கு முன்பு நடந்த கேலோ இந்தியா பல்வேறு இடங்களில் நடக்கும். ஆனால் இம்முறை நடந்து முடிந்த கேலோ இந்தியாவின் அனைத்து போட்டிகளும் நம் மாநிலத்துள்ளே நடைபெற்றது. இதற்கு எடுத்துக்காட்டாக உலக தரத்தில் சைக்கிளிங் போட்டிக்கான velodrome அமைந்துள்ளது. இந்த விளையாட்டு போட்டிக்காக கொள்முதல் செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் உலக தரம் வாய்ந்தது. அதை நம் விளையாட்டு வீரர்கள் பயன்படுத்த உள்ளார்கள். அதேபோல் ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கமும் உலக தரம் வாய்ந்தது. 30 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்ட நேரு விளையாட்டு மைதானம் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இப்படி அனைத்து விதமான கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளது. இதேபோல மதுரை, கோயம்பத்தூர் மற்றும் திருச்சியிலும் கட்டமைப்புகளும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்** : கேலோ இந்தியா விளையாட்டு போட்டி மற்ற மாநிலங்களில் பல்வேறு இடங்களில் நடைபெற்றது. குறிப்பாக மத்தியபிரதேசத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா சைக்கிளிங் போட்டி டெல்லியில் நடைபெற்றது. ஆனால் நமது மாநிலத்தின் போட்டி இங்கேயே நடத்தியுள்ளோம்.

### தொடர்ச்சியாக பல்வேறு கட்டமைப்புகள்!

**கேள்வி:** வடஇந்தியாவில் பிரபலமாக உள்ள மல்யுத்தம், குத்துச்சண்டை மற்றும் பளுதூக்குதல் போன்ற பாரம்பரிய விளையாட்டுகளில் மற்ற மாநிலங்கள் சிறப்பாக உள்ளது. நமது மாநிலத்தில் அதை முன்னேறுவதற்கு திட்டம் உண்டா?

**அதிகாரி:** கேலோ இந்தியா விளையாட்டை உதாரணமாக எடுத்துக்கொண்டால் குத்துச்சண்டையில் நான்கு பதக்கமும், பளுதூக்குதலில் எட்டு பதக்கமும், குறிப்பாக இரண்டு தேசிய சாதனை பெற்றுள்ளோம். மல்யுத்தத்தில் நாம் இன்னும் முயற்சி எடுக்க வேண்டியதுள்ளது. கேலோ இந்தியா போட்டி நடத்தியதன் மூலம் தெளிவாக தெரிகிறது, வட இந்தியா மற்றும் தென் இந்தியா என்ற பாகுபாட்டை தாண்டி விளையாட்டுக்கான கட்டமைப்புகளை கொடுப்பதின் மூலம், அனைத்து விளையாட்டிலும் நாம் தலை சிறந்து விளங்கலாம். எடுத்துக்காட்டாக தடகளத்தில் 18 பதக்கங்களை வென்றுள்ளோம். இதற்கு முன்பாக ஹரியானா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் அந்த விதத்தில் இருந்தது. இதேபோல் கூடைப்பந்தில் நாம் வென்றுள்ளோம், சைக்கிளிங் போட்டியில் 12 பதக்கங்கள் வென்றுள்ளோம். இந்த பதக்கங்கள் வென்ற பலர் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் பயன்பெற்றவர்கள். இதேபோல ஸ்குவாஷில் 7 பதக்கங்களும், நீச்சலில் 14 பதக்கமும், டென்னிஸ்-இல் அனைத்து பதக்கங்களும். நாம் இதேபோல தொடர்ச்சியாக பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம் இப்படியான வெற்றிகளை குவிக்கமுடியும்

**கேள்வி:** கிராமப்புற மற்றும் அரசு பள்ளியில் பயிற்று வரும் மாணவர்கள் சைக்ளிங் போன்ற போட்டிகளுக்கான பயிற்சி அளிப்பதற்கான திட்டம் உண்டா?

**அதிகாரி:** அண்ணா சைக்ளிங் போட்டி ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. அந்த போட்டியில் சிறப்பாக விளையாடுபவர்களுக்கு மிதிவண்டி வழங்கப்படுகிறது. தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தபிதா, தமிழரசி போன்ற கிராமப்புற பின்னணியில் உள்ள மாணவிகளுக்கு கொடுக்கப்பட்ட உதவிகள் மூலம் அவர்கள் இப்போது தேசிய அளவில் வெற்றி பெற்றுள்ளனர். ஆசிய அளவில் நடைபெறவுள்ள சைக்ளிங் போட்டியில் இந்தியாவில் இருந்து பங்குபெறவுள்ள சைக்ளிங் வீராங்கனைகளில் தமிழர்கள் உள்ளனர்.

### அறக்கட்டளையிலிருந்து நிதி உதவி!

**கேள்வி:** இந்தியா அளவில் விளையாட்டு போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களின் வெற்றி குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அதற்கான வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். பல்வேறு பகுதிகளில் உள்ள விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை பெறுவதற்கு சிக்கல் உள்ளது. புதிதாக தொடங்கப்பட்டுள்ள இணையதளத்தில் அதற்கான வசதி உண்டா?

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்:** சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடங்கியதற்கான நோக்கம் இதுதான். நேரடியாக என்னை சந்தித்து கோரிக்கைளை முன்வைப்பர்களுக்கு துறை மூலமாக அறக்கட்டளையிலிருந்து நிதியுதவி வழங்கி வருகிறோம். தற்போது நேரடியாக வருபவர்களிடம் கூட இணையத்தளம் மூலம் உங்கள் கோரிக்கையை பதிவுசெய்யுங்கள் என்று கூறுகிறோம். இதற்கான வழிமுறைகள் பின்பற்றப்பட்டு தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்கிவருகிறோம். கலைஞர் விளையாட்டு உபகரணங்களின் கீழ் ஒவ்வொரு ஊராட்சிக்கும் கிரிக்கெட் கிட் வழங்கபடுகிறது. நேற்று மதுரையில் இந்த திட்டம் தொடங்கபட்டுள்ளது. விரைவில் அனைத்து பகுதிகளுக்கும் இந்த திட்டம் கொண்டுசெல்லப்படும். கிரிக்கெட், கையுந்து பந்து, ஏறி பந்து, கால்பந்து, உடற்பயிற்சி உபகரணங்கள், ஸ்கிப்பிங் ரோப், டென்னிகாய்ட், கேரம், சதுரங்கம், கபடி, டீஷர்ட் போன்ற 33 உபகரணங்கள் இந்த திட்டத்தில் உள்ளது. சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் இது வரையில் 108 விளையாட்டு வீரர்களுக்கு, ரூ. 1 கோடியே 64 லட்சத்து 86 ஆயிரத்து 992 மதிப்பீட்டில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. இப்படி உபகரணங்கள் பெற்றுள்ள பலர் பதக்கங்கள் பெற்றுள்ளனர். 225 பாரா விளையாட்டு வீரர்களுக்கு ரூ. 3 கோடியே 89 லட்சத்து 57 ஆயிரத்து 673 மதிப்பில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** வடசென்னையில் பிரபலமாக உள்ள கால்பந்து மற்றும் குத்துசண்டை போன்ற விளையாட்டில் ஆர்வம் குறைந்து வருகிறதா?

**அதிகாரி:** குத்துசண்டைக்காக பிரத்யகமாக கோபாலபுரத்தில் பாக்ஸிங் அகாடமி தொடங்கப்பட உள்ளது. இந்த அகாடெமியில் சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் பாக்ஸிங் விளையாட்டை மீண்டும் புதுப்பிக்கலாம்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்** : ஆர்.கே.நகரில் நானே சென்று தடகள ட்ராக் மற்றும் பாக்ஸிங் போன்ற விளையாட்டு மையத்திற்கு அடிக்கல் நாட்டிவந்துள்ளேன். சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் சென்னை மாநகராட்சியுடன் இணைந்து இந்த முன்னெடுப்பு செய்யப்பட்டுள்ளது. இன்னும் 6-7 மாதங்களில் இது பயன்பாட்டிற்கு வரும்.

**கேள்வி:** பல்வேறு சர்வதேச போட்டிகள் தமிழகத்தில் தொடர்ச்சியாக நடந்து வருகிறது. இன்று தமிழ் நாடு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட நிதி போதுமானதா?

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்:** போதுமானது தான். சிறிய விளையாட்டு அங்கங்களை உருவாக்க 3 முதல் 4 கோடி நிதி தேவை. ஏற்கனவே 9 சிறிய விளையாட்டரங்கங்கள் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அடுத்த 2-3 நாட்களில் அடுத்த பத்து தொகுதிகளுக்கான சிறிய விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு அறிவிக்கப்படவுள்ளது. சிறிய விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும் பணி அந்தந்த மாவட்ட ஆட்சியர் மட்டும் சட்டமன்ற உறுப்பினர் மூலம் அடையாளம் காணப்படும். நிதி தேவைப்படும் பட்சத்தில் நிதி கேட்டு பெறப்படுவோம்.

### ஒலிம்பிக் அகாடமி திட்டம்!

**கேள்வி:** சென்னை உயர்நீதிமன்றத்தில் பார்முலா 4 போட்டியை நடத்துவதற்கான வழக்கில் போட்டிக்கான நிதியை விளையாட்டை நடத்தும் நிறுவனமே தர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதே?

**அதிகாரி:** போட்டியை நடத்த நங்கள் தயாராக உள்ளோம். மழை, வெள்ளம் போன்ற காரணத்தால் தள்ளிவைக்கப்பட்டது. விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில் இப்படியான விளையாட்டை நாம் நடத்த உள்ளோம், இந்த போட்டியை நடத்துவதற்கான பாதுகாப்பு அம்சங்களுடன் நடத்த நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்:** இந்த முறை போட்டியை நடத்துவதற்கான நிதியை பல்வேறு ஸ்பான்சர் மூலம் பெறவுள்ளோம்.

**கேள்வி:** ஒலிம்பிக் அகாடமி திட்டம் 2010 கலைஞர் ஆட்சியின் போது கடந்த மூன்று பட்ஜெட்டிலும் அறிவிக்கப்பட்டது. இதற்கான பணி தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதா?

**அதிகாரி:** ஒலிம்பிக் அகாடமி அறிவிப்பை பொறுத்தவரை ஒன்றரை வருடத்திற்கு முன்பு அதற்கான நிதி செலிவீனம் உட்பட அறிவிக்கபட்டது. தற்போது சென்னை, நீலகிரி மற்றும் திருச்சியில் அமையப்படவுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சென்னை அகாடெமியை திறந்து வைத்துள்ளார். இந்த அகாடெமியில் 7 ஒலிம்பிக் விளையாட்டுக்கான பயிற்சி அளிக்கப்படும். மதுரையில் தற்போது உள்ள விளையாட்டரங்கம் ஒலிம்பிக் அகாடமி அளவில் தரம் உயர்த்தப்படும்.

**கேள்வி:** தமிழ்நாடு பொறுத்தவகையில் விளையாட்டு கவனம் செலுத்துவது பாராட்டக்கூடியது. பள்ளிகளில் விளையாட்டுக்கான போதுமான நேரங்கள் கொடுக்கப்படுவதில்லை என்ற பார்வை உள்ளது?

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்:** நான் விளையாட்டு துறைக்கு அடுத்தபடியாக பள்ளிக்கல்வி துறை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன். தொடர்ச்சியாக அந்த நிகழ்ச்சியில் விளையாட்டுக்கான நேரம் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இது தொடர்பாக ஏதும் குற்றசாட்டுகள் இருந்தால் என் கவனத்திற்கு கொண்டுவந்தால் சரிசெய்கிறேன்.

**கேள்வி:** விளையாட்டு வீரர்களின் திறமைகளைக் கண்டறிவதற்கான குழு உள்ளதே. அது எந்தளவில் செயல்படுகிறது?

**அதிகாரி:** கேலோ இந்தியாவில் தமிழ்நாடு வீரர்கள் வெற்றிபெற்றதன் முக்கிய காரணம் முதலமைச்சர் கோப்பை மூலம் பல்வேறு திறமைவாய்ந்த வீரர்களை அடையாளம் கண்டோம். இதற்கான பயிற்சி முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. விளையாட்டு வீரர் வீராங்கனைகளின் திறமைகளை கண்டறிவதற்கான வழிமுறைகள் நம்மிடம் உள்ளது. இதன்மூலம் விளையாட்டு விடுதிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

**கேள்வி:** தற்போது வேளச்சேரி மற்றும் ஷெனாய் நகரில் நீச்சல் குளம் அமையப்பட்டுள்ளது, இதேபோல் வடசென்னையில் அமைக்க திட்டம் உள்ளதா?

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்:** இது தொடர்பான கோரிக்கைகள் பரிசீலக்கப்படும்.

### மலை மேலிட பயிற்சி மையம்!

**கேள்வி:** தற்போது உள்ள மலை மேலிட பயிற்சி மையம் தொடர்பாக இந்திய விளையாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இடையே ஏதும் திட்டம் உள்ளதா? அனைவரும் பயன்பெறும் வகையில் அது அமையப்பெறுமா?

**அதிகாரி:** மலை மேலிட பயிற்சி மையம் தற்போது தொடங்கப் பட்டுள்ளது அந்த மையத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்களும் அமைக்கப்படும். SRMC-யிடம் இது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தடகள சங்கம் இதைப் பயன்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்துவருகிறது. இதே போல மற்ற விளையாட்டுச் சங்கங்களும் இதை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த மையம் அனைவரும் பயன்படுத்தும் வகையில் அமையும்.

இவ்வாறு பத்திரிகையாளர் கேள்விகளுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அதிகாரிகள் பதில்கள் வழங்கினார்கள்.





காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் திம்மசமுத்திரம் சமுத்திரம் ஊராட்சியில் கழக தலைவர் திராவிட முதல்வர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.குமார் தலைமையிலும், தேவேந்திரன், ஜி.சுந்தரம், பாலாஜி ஆகியோர் வரவேற்புரையில் கிளை கழக செயலாளர்கள் முன்னிலையில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமைக் கழக பேச்சாளர் ஆரணிமாலா, நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், தலைமை கழக பேச்சாளர்கள் நாத்திகம் நாகராஜன், விசார் தமிழரசன், ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் ஒன்றிய பெருந்தலைவர் மலர்கொடிகுமார், எம்எஸ், சுகுமார், நித்தியா சுகுமார், மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் மாரிமுத்து, எஸ்.வி.ரமேஷ், இரா.இளஞ்செழியன், வேலுச்சாமி, எஸ்.எஸ்.ஆர்.சசிக்குமார், பின்.இரவி, நா.கருணாகரன், அணிகள் நிர்வாகிகள், சி.இராதாகிருஷ்ணன், தி.ராம்பிரசாத், எஸ்.தமிழ்ச்செல்வன், பி.எம்.நீலகண்டன், மகேந்திரன், வரதன், விஜி, நவீன், அணிகள் நிர்வாகிகள் கிளை கழக செயலாளர்கள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். த.பூவரசன் நன்றி கூறினார்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (20.02.2024) ஆணையர் அலுவலகத்தில் ஓய்வு பெற்ற மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் துரைசாமி ராஜு, க.ரவிச்சந்திர பாபு மற்றும் செல்வி ஆர். மாலா ஆகியோர் முன்னிலையில் 8 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 130 கிலோ 393 கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் தலைமைப் பொது மேலாளர் ரவிரஞ்ஜன் அவர்களிடம் ஒப்படைத்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர்கள், இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையற்ற – பாசிச பா.ஜ.க.வை விரட்டுவோம்!

# ‘திராவிட மாடல்’ முதல்வரின் குரலைப் பின்பற்றி ‘இந்தியா’வை மீட்போம்!

## விருதுநகரில் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

விருதுநகர், பிப். 22–

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, 2024 – மக்களவைத் தேர்தலையொட்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் – பாசிசம் வீழட்டும், இந்தியா வெல்லட்டும்” – என்ற தலைப்பில் விருதுநகர் நாடாளுமன்ற தொகுதிக்கான பிரச்சாரக் கூட்டம், பிப்ரவரி 17 சனிக்கிழமை , விருதுநகரில் உள்ள நகராட்சி மைதானத்தில் நடைபெற்றது.**

இதில், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்

அவர் உரையாற்றுகையில்,

“இந்த இயக்கத்தோடு தொடர்ந்து பயணிக்கும் மண் விருதுநகர் மண். விருதை பெரியார் என புகழப்பட்ட வி.வி. ராமசாமியின் மண், தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று போராடிய சங்கரலிங்கனாரின் மண், பெருந்தலைவர் காமராஜரின் மண்…

இங்கே தலைவர் கலைஞர் மாநாடு நடத்தினார்கள். 40 க்கு 40 ஐயும் நாம் வென்றோம். அதேபோல நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி மாநாட்டை நடத்தி, ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறோம். இன்று இந்த பொதுக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஒன்றியத்திலே இருக்கக் கூடிய பாசிச பா.ஜ.க. ஆட்சியை விரட்டுவோம். மறுபடியும் இந்த நாட்டை இந்திய நாட்டை மீட்டெடுப்போம் என்ற உறுதியை இந்த கூட்டத்திலே நாம் ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### பா.ஜ.க. அரசு ஏன் பாசிச அரசு?

ஒன்றியத்திலே இருக்கும் பா.ஜ.க. அரசை நாம் ஏன் பாசிஸ்டுகளின் அரசாங்கம் என்று அழைக்கிறோம்? ஒரு பாசிச அரசாங்கத்திலே மக்களுக்கு கருத்து கூற உரிமை கிடையாது. ஊடகங்களுக்கு ஒரு உரிமையும் கிடையாது. அரசாங்கத்தை எதிர்த்து கருத்துகளை சொன்னால் சிறையில் அடைக்கப்படுவார்கள் அல்லது அந்த பத்திரிகை இழுத்து மூடப்படும். எதிர்த்து கருத்து சொன்னால் வழக்கு போடுவார்கள், மிரட்டுவார்கள்.

நாம் உத்திரப்பிரதேசத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அங்கே பா.ஜ.க.வை எதிர்த்து கருத்து சொன்னால், ஒரு புல்டோசர் வண்டியோடு போகிறார்கள். அந்த வண்டி எதிர்த்து கருத்து சொல்கிறவர்களின் வீடுகளை இடித்து நொறுக்குகிறது.

அதேபோல நாடு முழுதும் பா.ஜ.க. அரசை விமர்சிப்பவர்கள் கௌரி லங்கேஷில் ஆரம்பித்து 80 வயதான ஸ்டெய்ன் சாமியார் வரைக்கும் கொலைக்கும், சித்திரவதைக்கும் உள்ளாகிறார்கள்.

ஸ்டெய்ன் சாமியார் ஆதிவாசி மக்களுக்காக பாடுபட்டுக் கொண்டிருந்தவர். அவருக்கு 80 வயதுக்கு மேல். பார்க்கின்சன் என்ற நோயால் பாதிக்கப்பட்டவர். தண்ணீரை கூட அவரால் கையால் பிடித்து குடிக்க முடியாத நிலையில் இருந்தார். அப்படிப்பட்ட நிலையில் இருந்தவரை கொண்டு போய் சிறைச் சாலையிலே அடைத்தார்கள். கை நடுங்குவதால் தண்ணீர் குடிக்க முடியவில்லை என்பதால் அந்த முதியவர் ஒரு ஸ்ட்ரா கேட்டார். அதற்கு கூட மறுக்கும் மனிதாபிமானம் மற்ற ஆட்சிதான் பா.ஜ.க. ஆட்சி.

### விவசாயிகள் மீது டிரோன்கள் மூலம் தாக்குதல்!

விவசாயிகள் இப்போது வரை போராடிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு எதிராக மூன்று சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். ஒரு ஆண்டுக்கும் மேலாக டெல்லியில் தொடர்ந்து விவசாயிகள் போராடினார்கள். குளிரில், மழையில், வெயிலில் போராடிய விவசாயிகள் எத்தனையோ பேர் இறந்துபோனார்கள். போராடிய விவசாயிகள் மீது வண்டியை ஏற்றி ஒரு மத்திய அமைச்சரின் உறவினர் கொலையே செய்தார். எத்தனையோ அச்சுறுத்தல்களுக்கு இடையிலும் விவசாயிகள் தொடர்ந்து போராடி, அந்த சட்டங்களைத் திரும்பப் பெற வைத்தார்கள்.

அப்போது கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று இப்போது நாடு முழுதும் விவசாயிகள் மீண்டும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நாடு முழுதும் கைது செய்துகொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகள் டெல்லிக்குள் வரக் கூடாது என்பதற்காக டிரோன்கள் மூலம் அவர்கள் மூலம் கண்ணீர் புகை வீசப்படுகிறது. அவர்கள் வரக்கூடிய வழிகளில் முள்கம்பிகள் போடப்படுகிறது. விவசாயிகளின் கோரிக்கை என்னவென்றால் பயிர்களுக்கான அடிப்படை ஆதார விலை என்பதுதான். அதை ஏற்காமல் போராடும் விவசாயிகளை டெக்னாலஜியை பயன்படுத்தி மிரட்டுகிறது பா.ஜ.க. அரசு.

இதேபோலதான் சி.ஏ.ஏ. எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்த இஸ்லாமிய சகோதரர்கள், நடுநிலைவாதிகள் அத்தனை பேர் மீதும் நாடு முழுதும் வழக்கு. இப்படி எந்த சட்டத்தையும் யாரும் எதிர்க்கக் கூடாது.

### மிகக் குறைந்த நாட்களே நடந்த நாடாளுமன்றம்!

இந்த பி.ஜே.பி. அரசாங்கத்தில்தான் மிக மிக மிக மிக குறைந்த அளவுக்கு நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றிருக்கிறது. அவர்களுக்கு நாடாளுமன்றத்தைப் பற்றி கவலையே இல்லை. பிரதமர் மோடி நாடாளுமன்றத்துக்கு வருவதே இல்லை. என்றைக்காவது ஒரு ஐந்து நிமிடம் நாடாளுமன்றத்தில் தோன்றி மறைவார். எழுபது ஆண்டுகளுக்கு முன் நடந்த நேரு ஆட்சியை பற்றி விமர்சனம் செய்வதற்காக அவர் நாடாளுமன்றத்துக்கு வருவார். அதைத் தவிர பிரதமர் நாடாளுமன்றத்துக்கு வர மாட்டார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு எந்த மரியாதையும் இல்லை. ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையும் இல்லை. புதிதாக நாடாளுமன்றத்தை கட்டினார்கள். ஆனால் அந்த நாடாளுமன்றம் திறக்கப்பட்டபோது இந்த நாட்டின் குடியரசுத் தலைவர் அழைக்கப்படவே இல்லை.

மலைவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண்ணை குடியரசுத் தலைவராக ஆக்கியிருக்கிறோம் என்று பெருமையாக சொன்னார்கள். ஆனால் அவரை நாடாளுமன்றத் திறப்பு விழாவுக்கு அழைக்கவே இல்லை.

### பிரதமருக்கே பாதுகாப்பு இல்லாத ஆட்சி!

இப்படி அந்த பெருமையாக கட்டப்பட்ட நாடாளுமன்றத்திலே நாடாளுமன்றம் நடந்துகொண்டிருந்தபோது இரண்டு பேர் சர்வ சாதாரணமாக குதித்தார்கள். என் கண் முன்னே நடந்தது.

இரண்டு பேர் நாடாளுமன்றத்தில் குதித்து தங்கள் காலணிகளில் இருந்து எடுத்து வண்ணப்புகையை வீசுகிறார்கள். அவர்கள் நினைத்திருந்தால் என்ன வேண்டுமானாலும் கொண்டு வந்திருக்க முடியும். ஒரு நல்ல பிரதமராக இருந்தால் அவர் அப்போது நாடாளுமன்றத்தில் இருந்திருப்பார். பிரதமருக்கே பாதுகாப்பு இல்லை என்று நாங்கள் கேள்வி கேட்டபோது… இத்தனை ஆண்டு நாடாளுமன்ற வரலாற்றில் முதல் முறையாக கோஷம் போட்டேன் என்பதற்காக, நியாயம் கேட்டேன் என்பதற்காக நாடாளுமன்றத்தில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டேன். பின் ராஜ்யசபா, லோக்சபா என இரு அவைகளில் இருந்து அத்தனை எதிர்க்கட்சி எம்.பி.க்களும் சஸ்பெண்ட் செய்யப்படுகிறார்கள். எதிர்க்கட்சியே இல்லாமல் நாடாளுமன்றத்தை நடத்திய பெருமை பி.ஜே.பி.க்கு மட்டும்தான் உண்டு.

### பழிவாங்குவதற்கு புதிய கண்டுபிடிப்பு!

இந்த அளவுக்கு ஊடகங்கள் மீது, ஜனநாயகத்தின் மீது, மக்கள் பிரதிநிதிகள் மீது எந்த வித மரியாதையும் இல்லாமல் அவர்களை அடக்க ஒடுக்க நினைக்கும் ஆட்சிதான் பா.ஜ.க. ஆட்சி. இதுதான் பாசிசம்.

நாங்கள் சொல்வதுதான் சரி, நாங்கள் சொல்வதுதான் நிஜம். நாங்கள் சொல்வதற்கு எதிராக பேசினால் வழக்கு போடுவோம், சிறையில் தள்ளுவோம். அதுதான் ICE. அதாவது இன்கம்டாக்ஸ், சிபிஐ, இ.டி. யார் பா.ஜ.க.வை எதிர்த்தாலும் இன்கம் டாக்ஸ் வரும், சிபிஐ வரும், இ.டி. வரும் இதெல்லாம் பார்த்து யாரும் பயப்படவிலை. அதனால் அதைவிட புதிதாக ஒன்று கண்டுபிடித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கை முடக்கி விட்டார்கள். யாருக்கும் கவலை இல்லை. நீ என்ன வேண்டுமானாலும் பண்ணு.

### விடுதலையின் அருமை பா.ஜ.க.வுக்குத் தெரியாது!

எவ்வளவு நாள் மக்கள் இதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? இந்த நாடு அழியட்டும் என்று எவ்வளவு நாள் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? கண்ணீரும் செந்நீரும் சிந்தி பெற்ற விடுதலை பற்றி பா.ஜ.க.வுக்கு தெரியாது. ஏனென்றால் பா.ஜ.க.வின் எந்த முன்னோடி அமைப்போ, ஆர்.எஸ்.எஸ்,சோ விடுதலைப் போரில் கலந்து கொண்டதில்லை. அப்படியே ஒருசிலர் கலந்துகொண்டிருந்தாலும் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வந்துவிட்டார்கள்.

அதனால் இந்த நாட்டின் விடுதலை பற்றி, விடுதலைக்கு நாம் தந்திருக்கும் விலை பற்றி அவர்களுக்குத் தெரியாது. அதனால்தான் பாசிசத்தை மறுபடியும் கொண்டுவருகிறார்கள்.

உலகத்தில் எத்தனையோ பாசிஸ்டுகள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் எங்கே இருந்தார்கள் என்று தெரியாத அளவுக்கு மக்களால் விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை ஆட்சியில் இருப்பவர்கள் உணர வேண்டும்.

### யூ ட்யூபர்களின் நிலை!

நேற்று இரண்டு இளைஞர்களை சந்தித்தேன். அவர்கள் சோஷியல் மீடியாவில் கருத்துகளை சொல்லக் கூடிய யுட்யூபர்ஸ். அவர்கள், ‘திராவிட இயக்கத்துக்கு ஆதரவான கருத்துகளையோ, பா.ஜ.க.வுக்கு எதிரான கருத்துகளை சொன்னாலோ எங்கள் யு ட்யூப் முடக்கப்படுகிறது’ என்று சொல்கிறார்கள். இல்லையென்றால் திடீர்னு ஒரு நாள் காலையில் எங்களுடைய ஃபாலோயர்ஸ் எண்



ணிக்கை பாதியாக குறைக்கப்படுகிறது என்று கூறுகிறார்கள். இப்படி ஒரு சாதாரண இரண்டு இளைஞர்களுடைய கருத்துகளை கூட பொறுத்துக் கொள்ள முடியாத ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது.

### ஏறும் கேஸ் விலை! இறங்கும் 100 நாள் வேலைத் திட்ட நிதி!

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஒவ்வொருவருக்கும் 15 லட்சம் ரூபாய் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் யாருக்கும் இப்போது வரைக்கும் வந்து சேரவில்லை. ஆனால் பெட்ரோல் விலை இன்று லிட்டருக்கு 100 ரூபாய் தாண்டுகிறது. டீசல் விலை லிட்டருக்கு 100 ரூபாயைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. கேஸ் சிலிண்டர்… உஜ்வாலா என்ற திட்டத்தில் பெண்களுக்கு கேஸ் சிலிண்டர் குறைத்துக் கொடுப்பதாக சொன்னார்கள். ஆனால் யாருக்கும் அதெல்லாம் கிடைப்பதில்லை. எல்லாருக்கும் சிலிண்டர் ஆயிரம் ரூபாய்தான். (ஆயிரத்து இருநூறு ரூபாய் மேடம் என்று கூட்டத்தில் இருந்து குரல்கள் வந்தன)

அதேபோல 100 நாள் வேலைத் திட்டம். மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே யாருக்கும் முழுமையாக கிடைக்கவில்லை. சம்பளம் ஏறவில்லை, செய்த வேலைக்கு சம்பளம் வந்து மாதக் கணக்காகிறது. ஒன்றிய அரசாங்கம் 100 நாள் வேலைத் திட்டத்துக்கான நிதியை பட்ஜெட்டில் 60 ஆயிரம் கோடிதான் ஒதுக்கீடு செய்தார்கள். இதெல்லாம் போதாது என்று நாங்கள் சொன்னபோது, ‘உங்களுக்கு புரியாது. கேட்கக் கேட்க நாங்கள் கொடுப்போம்’ என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சொன்னார்கள். கேட்டுக் கொண்டே இருக்கிறோம். ஆனால் கொடுத்த பாடில்லை.

எதைக் கேட்டாலும் கொடுக்க மாட்டார்கள். நம்மிடம் இருந்து பெற்ற வரிப்பணத்திலேயே 20 ஆயிரம் கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார்கள். இன்று வரைக்கும் கொடுக்கவில்லை.

### அவர்களின் அக்கறை யார் மேல்?

மழை வெள்ளத்தால் சென்னையிலும் தென் மாவட்டங்களிலும் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. சென்னைக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வந்தார். தென் மாவட்டத்துக்கு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வந்தார்.

வீடெல்லாம் பாதிக்கப்பட்டு அடித்துக் கொண்டு ஓடுகிறது. விவசாயிகள் நிலத்திலெல்லாம் சாலைகள் அடித்துக் கொண்டு கிடக்கிறது. அதை சரிப்படுத்த ஆறு மாதம் ஆகும் என்கிறார்கள். பள்ளிக் கூடங்கள் மூழ்கிக் கிடந்தன. வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். ஆனால் அம்மையார் நிர்மலா சீதாராமனுக்கு எதில் அக்கறை என்றால்… ஒரு கோயிலைச் சுற்றி இருக்கக் கூடிய பிரகாரம் சகதியாக இருக்கிறது. அந்த கோயில் குருக்களுக்கு சம்பளம் போதவில்லை. இத்தனை பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுபற்றியெல்லாம் கவலை இல்லை,. ஆனால் ஒரு கோயிலிலே அந்த குருக்கள் நிலையை பற்றி மட்டும்தான் கவலைப் படுகிறார்கள் என்றால்… டெல்லி ஆட்சி யாரைப் பற்றி கவலைப்படும் என்று புரிந்துகொள்ளுங்கள். நம்மைப் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள்.

ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, மலைவாழ், தலித் பிள்ளைகளை பற்றி அவர்கள் அக்கறைப்பட மாட்டார்கள். அதனால்தான் நீட் டை கொண்டு வந்து திணித்துள்ளார்கள்.

நம் வீட்டுப் பிள்ளைகள் மருத்துவம் படிக்க வேண்டும் டாக்டர் ஆக வேண்டும் என்பதற்காகத்தான் தலைவர் கலைஞர் தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்கினார். தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு சென்று படிக்க முடியாமல் போகும் என்பதால் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அரசு மருத்துவக் கல்லூரியைக் கொண்டுவந்தார் கலைஞர். அந்த திட்டத்தை ஒழிக்கத்தான் நம் பிள்ளைகள் மருத்துவம் படிப்பதைத் தடுக்கத்தான் நீட் கொண்டுவந்தார்கள்.

### வரியைப் பறிக்கும் வழிப்பறி அரசு!

நமக்கு கொடுக்க வேண்டிய நிதியை கொடுப்பதில்லை. கேட்டால், ‘நாங்கள் கொடுக்கும் நிதியைத்தான் நீங்க பயன்படுத்துறீங்க’ என்று மாநில அரசுகளை பார்த்து கேட்கிறார்கள். அந்த காசு உங்களுக்கு எங்கேர்ந்து வந்தது? மாநிலங்கள் கொடுக்கும் பணம்தானே…தமிழ்நாடு கொடுக்கும் காசை தமிழ்நாட்டுக்குத் திருப்பித் தா என்று சொல்கிறோம்.

நீங்கள், திருப்பித் தருகிறோம் என்று சொல்லித்தான் வாங்குகிறீர்கள்.

உங்கள் பக்கத்து வீட்டுக் காரரோ, சொந்தக்காரரோ… திருப்பிக் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லி உங்களிடம் காசு வாங்குகிறார்கள். நீங்கள் திரும்பிக் கேட்கும்போது கொடுக்க முடியாது என்று சொன்னால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அப்படி கொடுக்க முடியாது என்று சொன்னால் அது வழிப்பறியா இல்லையா?

இதைத்தான் ஒன்றிய அரசு செய்து கொண்டிருக்கிறது. நமது வரிப்பணத்தை ஜிஎஸ்டி என்ற பெயரில் வாங்கிச் சென்று விடுகிறார்கள். நமக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கேட்டால் தருவதில்லை. கிராமங்களில் சொல்லுவார்கள், ‘நீ அவல் கொண்டுவா… நா உமி கொண்டுவர்றேன். ரெண்டு பேரும் ஊதி ஊதி திங்கலாம்’ என்று. அதுபோலத்தான் இருக்கிறது இப்போதைய நிலை.

### தடைகளை தாண்டி முதலிடம் பிடிக்கும் முதலமைச்சர்!

தமிழ்நாடு கொடுக்கும் ஒரு ரூபாய் வரிப்பணத்துக்கு அவர்கள் திருப்பித் தருவது வெறும் 26 பைசா. ஆனால் உத்திரப்பிரதேசத்துக்கு அவர்கள் ஒரு ரூபாய் கொடுத்தால் இரண்டு ரூபாய் 2 பைசாவாக திருப்பிக் கொடுக்கிறார்கள். ஏன்? ஏனென்றால் அது பின் தங்கிய மாநிலமாம். நீங்கள்தான் இரு முறையாக அங்கே ஆட்சியில் இருக்கிறீர்கள். அது ஏன் இன்னும் பின் தங்கிய மாநிலமாக இருக்கிறது? ஏனென்றால் அங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இல்லை.

இன்றைக்கு முதலமைச்சர் அண்ணன் தளபதியின் ஆட்சியிலே தமிழ்நாடு எந்த அளவுகோலை எடுத்தாலும் இந்தியாவிலேயே முன்னணியில் இருக்கக் கூடிய மாநிலமாக நின்றுகொண்டிருக்கிறோம். முதலீடாக இருக்கட்டும், சுகாதாரமாக இருக்கட்டும், கல்வியில் இருக்கட்டும்… அத்தனையிலும் முதல் இடத்தில் இருப்பது திராவிட மாடல் ஆட்சி. நீங்கள் காசு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் என்னால் ஆட்சி நடத்த முடியும், என் மக்களை காப்பாற்ற முடியும் என்று தலை நிமிர்ந்து நிற்கக் கூடிய முதலமைச்சராக அண்ணன் தளபதி இருக்கிறார்.

### துக்ளக் தர்பார்!

டெல்லியில் ஆட்சியா நடக்கிறது? அங்கே கேலிக்கூத்துதான் நடக்கிறது. ஆட்சிக்கு வந்த கொஞ்ச நாளில் ஆயிரம் ரூபாய், ஐநூறு ரூபாய் நோட்டுகளை தடை செய்தார்கள். நாள் கணக்கில் தண்ணீர் வாங்க கூட காசு இல்லாமல் மக்கள் க்யூவில் நின்றார்கள். கேட்டால், ‘ஒரு சின்ன தியாகத்தை மக்கள் செய்ய வேண்டும். இத்தோடு கருப்புப் பணத்தை ஒழித்துவிடலாம்’ என்றார்கள். கருப்புப் பணம் ஒழிந்ததா? எல்லா சிறுகுறு தொழில்கள்தான் நாடு முழுதும் அழிந்தது. தமிழ்நாட்டில் சுமார் 50 ஆயிரம் பேர் தங்கள் சிறுதொழில்களை மூடிவிட்டனர்.

அப்புறம் இரண்டாயிரம் ரூபாயை கொண்டு வந்தீர்கள். அதன் பின் அந்த இரண்டாயிரம் ரூபாயும் செல்லாது என்று அறிவித்துவிட்டார்கள். இப்படி ஒரு துக்ளக் தர்பாரை வேறு எங்காவது பார்த்திருக்க முடியுமா?

வருடத்துக்கு இரு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு தருவதாக ஆட்சிக்கு வருவதற்கு முன்பு சொன்னீர்கள். ஆட்சிக்கு வந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டது. வேலை என்னாச்சு என்று கேட்டால் பகோடா போடு என்று சொல்கிறீர்கள். இதை சொல்வதற்கு ஒரு ஆட்சி, ஒரு பிரதமர் தேவையில்லை.

இப்படி தொடர்ந்து ஒடுக்கப்பட்ட, அடித்தட்டு மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு, சிறுகுறு தொழில் செய்பவர்களுக்கு, மாணவ மாணவிகளுக்கு, இளைஞர்களுக்கு, பெண்களுக்கு எதிராக நடந்து கொண்டிருக்கக் கூடிய ஆட்சி இந்த ஆட்சி.

குஜராத்தில் நடந்த கலவரத்தில் பில்கிஸ் பானு என்ற சகோதரியின் குடும்பத்திலுள்ள அத்தனை பேரும் கொல்லப்படுகிறார்கள். அந்த பெண் பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார். குஜராத் அரசாங்கம் அந்த குற்றவாளி களை விடுதலை செய்கிறது. அந்த பெண் உச்ச நீதிமன்றத்தை நாடி நியாயம் பெறுகிறார். இதுதான் பெண்களுக்கு இவர்கள் தரும் மரியாதை. மணிப்பூரிலே இன்று வரைக்கும் கலவரம் முடியவில்லை.

பிரதமர் எல்லா ஊருக்கும் போகிறார். வெளிநாடுகளுக்கு செல்கிறார், ஷேத்ராடனம் போகிறார். ஆனால் மணிப்பூரிலே என்ன நடக்கிறது என்பதை போய் பார்ப்பதற்கு அவருக்கு மனம் இல்லை, மனிதாபிமானம் இல்லை.

### ராமர் கோயில் கட்டியது ஒரு சாதனையா?

இந்த அரசாங்கம் தன் சாதனையாக , குடியரசுத் தலைவர் உரையிலேயே சொல்லியிருப்பது, ‘நாங்கள் ராமர் கோயிலை கட்டியிருக்கிறோம்’ என்பது. பிரதமர் உரையிலும் பல முறை, குடியரசுத் தலைவர் உரையில் நான்கைந்து முறை இதை சொல்லியிருக்கிறார்கள். ராமர் கோயிலை ஒரு தனியார் டிரஸ்ட் கட்டியிருக்கிறது. இதற்காக 50 மில்லியன் வசூல் செய்திருக்கிறது. ராம் மந்திர் தீர்த்த ஷேத்ர டிரஸ்ட் என்ற தனியார் டிரஸ்ட் கட்டிய கோயிலை அரசாங்கம் தன்னுடைய சாதனையாக சொல்லிக் கொண்டு திரிந்துகொண்டிருக்கிறது.

இப்படி வேலைக்கான வழிகளை செய்ய மாட்டீர்கள், ரயில்வே வசதிகளை தென் மாநிலங்களுக்கு செய்து தர மாட்டீர்கள், கல்விக்கான வழி வகைகளை செய்ய மாட்டீர்கள், விவசாயிகளை பாதுகாக்க மனதில்லை, பெண்களுக்கான பாதுகாப்பு இல்லை, இந்த நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த உங்களுக்குத் தெரியாது, நசிந்துகொண்டிருக்கும் சிறுகுழு தொழில்களை காப்பாற்றுவதற்கான வழி வகைகளை சிந்திப்பதே இல்லை.

ஆனால் மதத்தை வைத்து அரசியல் செய்துகொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். மதத்தை வைத்து அரசியல் செய்வது என்பது, பெரும்பான்மையாக இருக்கக் கூடிய இந்துக்களை காப்பாற்றுவதற்காக இல்லை. அந்த இந்து மக்களை பயன்படுத்தி ஆட்சிக்கு வருவதே அவர்கள் நோக்கம்.

### இந்துக்களின் நலன் காக்கும் திராவிட மாடல் அரசு!

பெரும்பான்மை இந்து மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் அரசு எது என்றால் அது நம்முடைய திராவிட மாடல் அரசு. ஓர் உதாரணம்… இந்த மாவட்டத்தில் காலை சிற்றுண்டி திட்டத்தின் செயல்பாடு. பெருந்தலைவர் காமராஜர் கொண்டுவந்தது மதிய உணவுத் திட்டம். அண்ணன் தளபதி அவர்கள் கொண்டுவந்தது காலை சிற்றுண்டி திட்டம். தமிழ்நாடு முழுதும் காலையில் பசியோடு பிள்ளைகள் படிக்க வரக் கூடாது என்பதற்காக இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. விருதுநகர் மாவட்டத்திலே மட்டும் 36 ஆயிரம் பிள்ளைகள் காலை சிற்றுண்டித் திட்டத்தில் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டத்தால் பயன்பெறும் குழந்தைகளில் பெரும்பான்மையான குழந்தைகள் இந்து குழந்தைகள் இல்லையா?

அதேபோல,கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுதும் ஒரு கோடியே 15 லட்சம் பெண்கள் பயன்பெற்று வருகிறார்கள். சாதாரணமாக சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள் வீட்டில் இருக்கும் பெண்கள் சும்மா இருக்காங்க என்று. ஆனால் வீட்டில் இருக்கும் எந்த பெண்ணும் சும்மா இருப்பதில்லை. காலை முதல் இரவு வரை வேலைதான். ஞாயிற்றுக்கிழமையாக இருக்கட்டும், பண்டிகை தினமாக இருக்கட்டும் எதற்கும் வீட்டில் உழைக்கும் பெண்களுக்கு லீவு கிடையாது.

அந்த சகோதரிகளின் உழைப்பை அங்கீகரித்து மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை அளித்தது அண்ணன் முதலமைச்சர் அவர்களின் அரசு. இந்தத் திட்டத்தில் பயன்பெறும் பெரும்பான்மையான பெண்கள் இந்து சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

விடியல் இலவச பயணத்தில் பெண்களுக்கு நகர்ப்புற பேருந்துகளில் கட்டணம் கிடையாது. இதிலும் அதிகமாக பயன்பெறுபவர்கள் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

நாம் இட ஒதுக்கீடு கொண்டுவருகிறோம். அரசு மருத்துவக் கல்லூரிகளை கொண்டு வருகிறோம். இப்படி நமது அரசின் திட்டங்களில் அதிகம் பயன்பெறுவது பெரும்பான்மையினர்தான்.

இப்படி பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் என அத்தனை பேரையும் முன்னேற்றப் பாதையில் அழைத்துக் கொண்டு செல்லக் கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

ஆனால் பா.ஜ.க. மதத்தை வைத்து மக்களிடையே பிளவு உண்டாக்கி காழ்ப்புணர்ச்சி அரசியல் என்பது மக்களுக்கான எதிர்காலத்தை இருட்டாக்கக் கூடிய ஒன்று. நம் வீட்டுப் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லாத நிலையை அது உருவாக்கும். எனவே மக்களை தன்னுடைய அரசியலுக்கு பயன்படுத்துபவர்களை நாம் தூக்கி எறிய வேண்டும், வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

### இந்த நாடு பா.ஜ.க.வை தூக்கி எறியும்!

எப்படியும் அவர்களுக்குதான் வட இந்தியாவில் ஆதரவு இருக்கிறது என்று சிலர் சொல்கிறார்கள். போராடக் கூடிய விவசாயிகளில் பெரும்பான்மையினர் வட மாநில விவசாயிகள்தான். ஒவ்வொரு மாநிலமாக அவர்களை தூக்கி எறிந்துகோண்டிருக்கிறது. விரைவில் இந்த நாடும் அவர்களை தூக்கி எறியும்.

இங்கே தமிழ்நாட்டில் இருந்து எழுந்திருக்கும் முதலமைச்சர் அண்ணனின் குரல் நாடு முழுதும் கம்பீரமாக ஒலிக்கிறது. அவரது குரலை பின்பற்றி இந்த ஆட்சியை மாற்றி வீட்டுக்கு அனுப்பி நாட்டை மீட்டெடுப்போம்”.


இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, சி.வி.கணேசன், மாவட்ட கழகச் செயலாளர் மணிமாறன், சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஜே. அகத்தியப்பன்

பிப்ரவரி 22 (2005)



**காஞ்சிபுரம் நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.**

**காஞ்சிபுரம் நகரக் கழகப் பொறுப்பாளர், அவைத்தலைவர் மற்றும் நகர்மன்ற கட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு அச்சக தொழிற்சங்க பொதுச்செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.**

**மொழிப்போர், ஈழத்தமிழர் பாதுகாப்பு, எரிசாராய கமிஷன் ஆணை நகல் எரிப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்த வேளாண் நிதிநிலை அறிக்கை; இயற்கை வளத்தை மேம்படுத்திக் காட்டும் ஈடு இணையற்ற அறிக்கை!

# தி.மு.க. அரசு உழவர் பெருமக்களை உயிராக நினைக்கிறது!

## மண்ணையும் காப்போம் ! மக்களையும் காப்போம் ! முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, பிப். 22 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில், "வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்த வேளாண் நிதிநிலை அறிக்கை; இயற்கை வளத்தை மேம்படுத்திக் காட்டும் ஈடுஇணையற்ற அறிக்கை!" என்று பாராட்டுத் தெரிவித்துள்ளார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் தமது அறிக்கையில், "தி.மு.க. அரசு உழவர் பெருமக்களை உயிராக நினைக்கிறது என்பதை வேளாண் நிதிநிலை அறிக்கை உணர்த்துகிறது! மண்ணையும் காப்போம்! மக்களையும் காப்போம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு :-

மாநிலத்து மக்களை மட்டுமல்ல, மண்ணுயிர் அனைத்தையும் மேம்படுத்தும் ஆட்சியாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நடைபெற்று வருகிறது. "கழக ஆட்சி அமைந்தால் வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வோம்" என்று, தேர்தலுக்கு முன் வாக்குறுதி அளித்தோம். சொன்னதைச் செய்து காட்டும் இந்த அரசானது, ஆட்சிக்கு வந்த உடனேயே வேளாண் அறிக்கையைத் தயாரித்துத் தாக்கல் செய்தது; தாக்கல் செய்த அறிக்கையின்படி செயல்பட்டது.

### மண்ணும் செழித்தது! மக்களும் செழித்தார்கள்!

இதன் மூலமாகத் தமிழ்நாட்டின் பாசனப் பரப்பு அதிகமானது; விளைச்சல் அதிகமானது; உற்பத்தியான பொருளுக்கு நல்ல விலை கிடைத்தது; உழவர் பெருமக்கள் மிகுந்த மகிழ்ச்சியடையும் வகையில் பலனைப் பெற்றார்கள்!

மண்ணும் செழித்தது! மக்களும் செழித்தார்கள்! இதனைக் கண்முன்னால் கண்டு வருகிறோம்.

இந்த வரிசையில் நான்காவது முறையாக வேளாண் நிதிநிலை அறிக்கையை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் இன்றைய தினம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இரண்டு மணிநேரம் அவரால் வாசிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையானது, இயற்கை வளத்தை மேம்படுத்திக் காட்டும் ஈடு இணையற்ற அறிக்கையாக அமைந்துள்ளது.

வேளாண்மையை உணவுத் தேவைக்காக மட்டுமோ, அல்லது, அதனைத் தொழிலாக மட்டுமோ கருதுபவர்கள் அல்ல நாம். நமது தமிழ்ப் பண்பாட்டுடன் கலந்ததுதான் வேளாண்மையாகும். அதனால்தான் அதற்கெனத் தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் கடமை நமக்கு உண்டு.

மொழிக்கு இலக்கணம் வகுத்தது போல நிலத்துக்கும், மண்ணுக்கும் இலக்கணம் வகுத்த நம் முன்னோர் வழியில் நாம் செயல்பட்டு வருகிறோம் என்பதற்கு அழுத்தமான சாட்சியமாக 2024 25ஆம் ஆண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### நெற்பயிரில் இரசாயன மருந்தைக் குறைக்க முக்கியத்துவம்!

மண் வளம் பேணிக் காக்கவும், மக்கள் நலன் காக்கவும் உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செயல்முறைகளையும் ஊக்கப்படுத்திட 'முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்' அமைந்துள்ளது. இராசயன உரங்களை அதிகம் பயன்படுத்துவதால் மண்ணிலுள்ள நுண்ணியிர்களின் எண்ணிக்கை குறைந்து மண் வளம் குறைந்து வருகிறது. எனவே மண் வளத்தை மீட்டெடுக்க அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. இரசாயன உரங்களைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெற்பயிரில் இரசாயன மருந்துகளைக் குறைத்தலுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டமானது 2400க்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளை உயர்த்தப் போகிறது. மரபுசார் நெல் ரகங்களை ஊக்குவிக்கப் போகிறோம். நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் சிவன் சம்பா நெல் ரகம் அதிகம் பயிரிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களின் வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெல் உலர்த்தும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்கப்பட உள்ளன. வேளாண் இயந்திரங்கள் வாடகைக்குக் கிடைக்கும் மையங்களை உருவாக்க இருக்கிறோம்.

### 15 ஆயிரம் கிராமங்களில்; ஒரு கிராமம், ஒரு பயிர் திட்டம்!

இயற்கைச் சீற்றங்களால் உழவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பில் இருந்து அவர்களை மீட்க, 'பயிர் காப்பீட்டுத் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு அந்தத் திட்டத்துக்கு மட்டும் 1,775 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 'ஒரு கிராமம் ஒரு பயிர்' என்ற திட்டம் 15 ஆயிரத்து 280 கிராமங்களில் செயல்படுத்தப்பட இருக்கிறது.

பத்து ஆண்டுகளாகப் பாசன மின் இணைப்புக்கான விண்ணப்பங்களை அ.தி.மு.க. அரசு கிடப்பில் போட்டு வைத்திருந்தது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 1.50 லட்சம் பேருக்கு இலவச மின் இணைப்புகளை கழக அரசு வழங்கி உள்ளது. இந்த ஆண்டில் மேலும் 50 ஆயிரம் பேருக்கு இலவச மின்சார இணைப்பு வழங்க இருக்கிறோம். நெல்லுக்குச் சிறப்பு ஊக்கத்தொகை வழங்க 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகளுக்குச் சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு 215 ரூபாய் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

### வேளாண்மையை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் 'மலர் கண்காட்சி'!

தொழில் துறை சார்பில் நடைபெறுவதைப் போல வேளாண்மைத் துறை சார்பில் கண்காட்சி, திருவிழா, சங்கமம் போன்றவற்றை நடத்தி வேளாண்மை மீதான ஆர்வத்தைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து உருவாக்கி வருகிறது. 'உழவர்கள்' மட்டும்தான் வேளாண்மை செய்ய வேண்டும் என்று இல்லை. தொழில் துறையைப் போல அனைவரையும் வேளாண்மையை நோக்கி ஈர்க்க வைக்கும் முயற்சித் திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டு இருப்பதை அனைவரும் உணரலாம்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மலர்க் கண்காட்சியானது சென்னையில் நடைபெற்று வருகிறது. நாள்தோறும் பல்லாயிரக்கணக்கானவர்கள் அதனைப் பார்த்து வருகிறார்கள். இவை போன்ற முயற்சிகள், வேளாண்மையை அடுத்தகட்டத்துக்கு கொண்டு செலுத்தும்.

### அமைச்சர் - அரசு செயலருக்கு மனமார்ந்த பாராட்டுகள்!

மண் வளத்தில் இருந்து மக்கள் நலம் வரைக்கும் கவனித்து இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து வழங்கியுள்ள வேளாண் மற்றும் உழவர் நலன் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களைப் பாராட்டுகிறேன். துறையின் செயலாளர் செல்வி. அபூர்வா அவர்களுக்கும், துறை சார்ந்த மற்ற அதிகாரிகள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்து, உழவர் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஒன்றரை ஆண்டுகள் தலைநகர் டெல்லியில் தங்கிப் போராடினார்கள் உழவர்கள். அவர்களது எதிர்ப்பினால் பின்வாங்கியது பா.ஜ.க. அரசு. இப்போது மீண்டும் டெல்லியில் உழவர்கள் போராட்டம் தீவிரம் அடைந்துள்ளது. அவர்கள் மீது இரக்கமற்ற வகையில் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. பசிப்பிணி போக்கும் மருத்துவர்களாம் வேளாண் பெருமக்களது கோரிக்கைகளுக்குச் செவிமடுக்கக்கூட மனமில்லாத வகையில் ஒன்றிய அரசு உள்ளது. உழவர்களைத் தடுக்கச் சாலைகளில் ஆணியைப் புதைக்கும் அரசாக பா.ஜ.க. அரசு உள்ளது.

அதேநேரத்தில் உழவர் பெருமக்களது வாழ்வுக்கும் மேன்மைக்குமான அனைத்துத் திட்டங்களையும் தீட்டி வழங்கும் அரசாகத் தி.மு.க. அரசு உள்ளது. இதன் மூலமாக உழவர் பெருமக்களை உயிராக நினைக்கிறோம் என்பதை அனைவரும் அறியலாம்.

மண்ணையும் காப்போம்! மக்களையும் காப்போம்!

மண்ணையும் வளர்த்து, மக்களையும் வாழ்விப்போம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தைத் தொடங்கி வைக்க 24-ஆம் தேதி

## நெம்மேலி வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்டமான வரவேற்பு!

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முடிவு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், பிப்.22-

நெம்மேலியில் ரூ.1,516 கோடி மதிப்பில் 150 மல்லியன் லிட்டர் உற்பத்தி திறன்கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை தொடங்கி வைக்க 24ஆம் தேதி வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிப்பது என மறைமலைநகரில் நடைபெற்ற மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் மறைமலைநகர், பொத்தேரியில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம். ஒட்டல் கூட்ட அரங்கில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வீ.தமிழ்மணி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ்,

பகுதி செயலாளர்கள் பி.குணாளன், என்.சந்திரன், த.ஜெயக்குமார், வே.கருணாநிதி, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், பெருங்களத்தூர் சேகர், டி.காமராஜ், எஸ்.இந்திரன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந்தே மாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், ம.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, அருள்தேவி,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலகண்ணன், கே.மணிகண்டன், எல்.பிரபு, தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், ஜா.செந்தில்தேவராஜ், த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ் கவி, ஜான் தினகரன், உதயா கருணாகரன், கே.ஆர்.ஆனந்தன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் விஜயலட்சுமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.



தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தமிழ்நாட்டு மக்கள் மனம் மகிழ்ந்து பாராட்டும் வகையில் திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி இந்தியாவின் No.1முதல்வர் என்ற வரலாற்றுச் சாதனையை படைத்த தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் 71வது பிறந்த நாளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் பட்டி தொட்டியெங்கும் மிகவும் சிறப்பான வகையில் வருகிற மார்ச் மாதம் முழுவதும் எழுச்சியுடன் கோலாகலமாக கொண்டாடுவது என்றும், அவரது பிறந்த நாளான 1.3.2024 அன்று காலை 9.00 மணிக்கெல்லாம் காஞ்சி வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் உள்ள அனைத்து கிளைக் கழகங்களிலும் கழக கொடி தோரணங்களை கட்டி, ஒலிபெருக்கி அமைத்து கழகக் கொடியை ஏற்றி இனிப்புகளை வழங்கிடுவது என்றும் நம்முடைய மாவட்டத்தில் உள்ள 40க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றோர்களுக்கு அன்று மதிய உணவு உடைகளை வழங்கி சிறப்பிப்பது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக முடிவெடுக்கிறது.

தமிழக முதல்வர் தளபதி அவர்களின் 71வது பிறந்த நாளையொட்டி, அவருடைய தன்னலமற்ற உழைப்பையும் அவர் தமிழகத்திற்கும் கழகத்திற்கும் ஆற்றிய அளப்பறிய சாதனைகளையும் நாட்டு மக்களுக்கு விரிவாக விளக்கிடும் வகையில் மார்ச் 2ஆம் தேதி முதல் மார்ச் மாதம் முழுவதும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பகுதி நகரம் ஒன்றியம் பேரூர் வாரியாக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தொடர் பொதுக்கூட்டங்களை எழுச்சியான முறையில் நடத்திடுவது என்றும், அக்கூட்டத்தில் ஏழை எளியவர்கள் பயன்பெறுகின்ற வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

முதல்வர் அவர்களின் 71வது பிறந்த நாளையொட்டி, ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் கழக நிர்வாகிகள் ஏற்பாட்டில் மருத்துவ முகாம் இரத்ததான முகாம் கண் சிகிச்சை முகாம் மரக்கன்று நடுதல் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை செய்திடுவது என்றும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் இளைஞரணி மற்றும் மாணவரணி சார்பில் கிரிக்கெட் கைப்பந்து கால் பந்து - இறகுபந்து - கபடி உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்குவது என்றும், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மற்றும் குரோம்பேட்டை குன்றத்தூர் திருப்போரூர் உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளில், மார்ச் 1ஆம் தேதியன்ற பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை அணிவிப்பது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

ஆலந்தூர், புனித தோமையார் மலை, பல்லாவரம், கீழ்கட்டளை, மூவசரம்பட்டு, புனித தோமையார் மலை ஒன்றியம் மற்றும் வேளச்சேரி, சோழிங்கநல்லூர் பகுதி மக்களின் குடிநீர் தாகத்தை தீர்க்கின்ற வகையில், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், நெம்மேலியில் ரூ.1,516 கோடி திட்ட மதிப்பீட்டில், நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டம்,

2வது அலகினை திறந்து வைக்க, வருகிற பிப்ரவரி 24 ஆம் தேதி அன்று காலை நெம்மேலிக்கு வருகை தரும் நாம் நாளும் போற்றி வணங்கும், நம்முடைய உயிரினும் மேலான பாசமிகு அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் நெம்மேலியில், மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிப்பது என்றும், இம்மாபெரும் விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு பங்கேற்பது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக முடி வெடுக்கிறது.

வருகிற பிப்ரவரி 23ஆம் தேதி அன்று காலை ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும் யூ இமேஜின், தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கினை தொடங்கி வைக்க வருகை தரும் நம்முடைய உயிரனைய தலைவர் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிப்பது என்றும், இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு பங்கேற்பது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

சேலம் மாநகரையே திக்குமுக்காடும் வகையில், 7 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞரணியினர் பெருந்திரளாக திரண்டு, கின்னஸ் சரித்திர சாதனை படைத்திட்ட, சேலம் இளைஞரணி 2வது மாநில மாநாட்டில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திலிருந்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞரணியினர் அலை கடலென திரண்டு வந்து பங்கேற்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்திற்கு பெருமை சேர்த்த இளைஞர் அணி பெரும் பட்டாளத்திற்கும், இதற்காக அரும்பாடுபட்ட காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

---



சென்னை, திருவல்லிக்கேணி, லேடி விலிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் (20.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முன்னிலையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற அரசு விழாவில், பள்ளி மாணவர்களுக்கான "நான் முதல்வன்" ஒலிம்பியாட் இலச்சினையை திறந்து வைத்து, இந்த ஆண்டு மேல்நிலைத் தேர்வு எழுத இருக்கும் மாணவ மாணவியர்களுக்கு பள்ளி தேர்வு கூட நுழைவுச்சீட்டு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, மாதிரி பள்ளிகள் சங்கத்தின் உறுப்பினர் செயலர் சுதன் ராமசாமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் புழல் மத்திய சிறைச்சாலை.**



# இடம் பொருள் கலைஞர் 58





புழல் சிறைச்சாலையில் சிறைவாசிகளின் மனநலனைப் பேண, தியான மண்டபம், மறு வாழ்வு மையம், உணவகம், திறந்தவெளித் திரையரங்கம், தொழிற்பயிற்சிக் கூடம், உடற்பயிற்சிக் கூடம், கணினிப் பயிற்சி மையம், பள்ளிக் கூடம் மற்றும் நூலகம் ஆகியவை உள்ளன.

அவை தவிர, தண்டனை பெற்ற சிறைவாசி களுக்காக 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையும், விசாரணை மற்றும் காவல் கைதி களுக்காக 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையும், பெண் கைதிகளுக்காக 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும் உள்ளன. மேலும், அனைத்து அறைகளிலும் மின்விசிறிகள், எவர்சில்வர் பாத்திரங்களில் உணவு, நவீன வசதிகளுடன் குளியலறைகள், இலவச சட்ட ஆலோசனை மையம் ஆகியவையும் உள்ளன.

பழைய சிறை இடிக்கப்பட்ட இடத்தில், மருத்துவக் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

## புழல் மத்திய சிறைச்சாலை

## ஆசியாவுக்கு வழிகாட்டியான பண்புக்கூடம்!

“ஏறத்தாழ இருபதாண்டு காலமாக இந்தச் சிறைச்சாலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலே ‘ஆவுடையார்கோவில்’ திருப்பணி என்று சொல்வார்கள். அது ஆரம்பித்து இன்னும் முடியவில்லை. ஒரு காலத்தில் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் எல்லாம் வாழ்ந்த அந்தக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது, ஆவுடையார்கோவில் திருப்பணி. இன்னும் அந்தக் கோவில் திருப்பணிகள் முடிவடையவில்லை. அங்கே மிச்சமிருக்கிறது, இங்கே பாக்கியிருக்கிறது என்று சொல்கின்ற அளவிற்குத்தான் அந்தத் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதைப்போல, இந்தப் பக்கம் நான் செல்லும் போதெல்லாம், புழல் சிறைச்சாலை முடிவடைந்துவிட்டதா, திறப்பு விழா எப்போது என்று கேட்பதுதான் எனக்கு வேலை. முடிவடையும் தருவாயில் இருக்கிறது என்று சொல்வது அதிகாரிகளுடைய வேலை என்று இருந்த நிலை மாறி, ‘அப்பாடா, முடிவடைந்து விட்டது. இனி திறக்கப்பட வேண்டியதுதான் பாக்கி’ என்று என்னிடம் சொல்லி, இன்று திறந்தும் வைக்கப்பட்டிருக்கின்றது..!”

இவ்வாறு முத்தமிழறிஞர் கலைஞரின் கோவில் உவமைக்கு உரித்தான சிலை... புழல் மத்திய சிறை..!

### ஆங்கிலேய ஆட்சியின் மிச்சம்

இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டம் என்று கருதப்படுகிற ‘சிப்பாய்க் கலகம்’, 1857–ஆம் ஆண்டு வெடித்தது. அதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டது சென்னை சிறைச்சாலை. ஆங்கிலேயர்களால் இந்தியாவில் கட்டப்பட்ட முதல் சிறைச்சாலை அதுதான். தொடக்கத்தில், குற்றவாளிகள் அந்தமான் சிறைக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்பு, சென்னை சிறையில் கொஞ்ச நாள் தங்க வைக்கப்பட்டுப் பிறகு அந்தமானுக்குக் கொண்டு போகப்படுவார்கள். பின்னாளில், இது சென்னை மத்திய சிறைச்சாலை என்று மாறியது.

ஏறத்தாழ 12 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்த அந்தச் சிறைச்சாலையில், தங்கள் நாள்களைக் கழித்த தலைவர்கள், தியாகிகள், ஊரே அஞ்சி நடுங்கிய கொலைகாரர்கள் எத்தனையோ பேர். சிறையின் ஒரு பக்கம் பூங்கா ரயில் நிலையமும், இன்னொருப் பக்கம் கூவம் ஆறும் அமைந்திருந்தன. இதனால் சிறையைக் காலத்துக்கு ஏற்ப, மாறி வரும் சமூகச் சூழலுக்கு ஏற்ப விரிவு படுத்தப்பட முடியாத சூழல் இருந்தது.



சென்னை, கோவை, கடலூர், வேலூர், திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை என தமிழ்நாட்டில் ஏழு மத்திய சிறைச்சாலைகள் உள்ளன. இவற்றில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்களில் தண்டிக்கப்படும் குற்றவாளிகளைத் தங்கவைக்க சென்னை மத்திய சிறையில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால், அவர்கள் வேலூர் மத்தியச் சிறைக்கு அனுப்பப்படும் நிலை இருந்தது. இதனால், சென்னையில் இருந்த ஆங்கிலேய மிச்சத்தை இடித்துவிட்டு, புழலில் பெரிய சிறை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

### நல்ல காற்றைச் சுவாசிக்க...

புதிய சிறை ஏற்படுத்துவதற்கான முடிவு திடீரென்று எடுக்கப்பட்டது அல்ல. 1961- ஆம் ஆண்டே, புதிய சிறைக்கான நில எடுப்புப் பணிகள் திருவள்ளூர் மாவட்டம், புழல் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டன. சிறைக் கட்டுமானப் பணிகள் 1981-ஆம் ஆண்டு தொடங்கிய போதும், அவை பலகாலமாக நிறைவடையாமல் இருந்தன.

இந்நிலையில், கலைஞர் தலைமையிலான கழக அரசு, 1996-ஆம் ஆண்டு கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்தியது. அதற்காக ஒரு கோடியே 22 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாயை ஒதுக்கியது. தொடர்ந்து, முழுவீச்சில் நடைபெற்ற கட்டுமானப் பணிகள் முடிவடைந்து, முதற்கட்டமாக 200 சிறைவாசிகளை அடைக்கும் அளவுக்குச் சிறை தயாரானது. அந்தச் சிறைக்கூடம் 2000-ஆம் ஆண்டு ஜனவரி 26 முதல் இயங்கத் தொடங்கியது.

இங்கு மேலும் அதிக அளவில் சிறைவாசிகளை அடைத்து வைப்பதற்கான இடவசதியை ஏற்படுத்த, 2000-ஆம் ஆண்டு மற்றும் 2006-2011 ஆட்சிக் காலத்தில் சுமார் 80 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதைக் கொண்டு 1,250 சிறைவாசி களை இருக்க வைக்கக்கூடிய ஆண்களுக்கான இரண்டு சிறைகளும், 500 சிறைவாசிகளை இருக்க வைக்கக்கூடிய பெண்கள் சிறை ஒன்றும் என மொத்த 3 ஆயிரம் சிறைவாசிகளுக்கான இடமாகப் புழல் மத்திய சிறைக் கழக அரசால் ஏற்படுத்தப்பட்டு, 2006-ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சிறை திறப்பு விழாவின்போது, கலைஞர் இப்படிச் சொன்னார்: “3,000 பேர் இந்தச் சிறைச்சாலையிலே இனிமேல் தங்குவதற்கேற்ற வகையில், அவர்களை இங்கே தண்டிக்கின்ற வகையில் அடைக்கப்பட்டாலும்கூட, நல்ல சுவாசக் காற்றைப் பெறுகின்ற நிலையிலும், நல்ல சுகாதாரத்தை அடைகின்ற நிலையிலும் இந்த வளாகம் அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். சிறைச்சாலை என்று சொல்லி அவர்களை மூச்சுவிட முடியாமல் அடைத்து வைப்பது, அடைத்தவர்களுக்கும் கொடுமை, அடைபட்டவர்களுக்கும் கொடுமை. அந்தக் கொடுமை இனி சிறைகளிலே இருக்கக்கூடாது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, ஆசியா கண்டத்திலேயே இந்தச் சிறைச்சாலை, மற்ற சிறைச்சாலைகளுக்கு எல்லாம் வழிகாட்டக் கூடியது என்ற அளவில், இன்றைக்கு நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது”.

சிறைச்சாலை என்பது குற்றவாளிகளைத் தண்டிக்கின்ற இடம், கொடுமைப்படுத்துகிற இடம், சித்ரவதை செய்கின்ற இடம் என்கிற நிலை ஒரு காலத்திலே இருந்தது. அது மெல்ல மெல்ல மாறி, பயிற்சி அளிக்கின்ற இடமாக, பண்படுத்துகின்ற இடமாக, பண்புகளைக் கற்பிக்கின்ற இடமாக, வாழ்க்கையை எப்படி வாழ வேண்டுமென்று சொல்லித் தருகின்ற கூடமாக சிறைச்சாலைகள் அமைய வேண்டும் என்று கலைஞர் கூறிச் சென்றதற்கு ஏற்ப, இன்று அந்தச் சிறைச்சாலைப் பலரைப் பண்படுத்தி வருகிறது.

...வலம் வருவோம்

## உணவுப் பழக்கமும் பொறுப்பற்ற அரசும்...

மக்கள் எந்த வகையான உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை, மக்களே முடிவு செய்து கொள்ளட்டும் என்பதுதான் மக்கள் நல அரசின் கொள்கையாக இருக்க முடியும். ஆனால், இந்த உணவுகளைச் சாப்பிடக்கூடாது, புறக்கணிக்க வேண்டும் எனச் சில இந்து மதவாத, அடிப்படைவாதிகள் வடமாநிலங்களில் மக்களுக்கு அழுத்தம் கொடுத்து வருவது நாம் அறிந்ததுதான். இப்போது அந்தப் பணியை ராஜஸ்தான் மாநில அரசே கையில் எடுத்து, மக்களை தண்டிக்கத் தொடங்கியுள்ளதுதான் கொடுமைகளின் உச்சமாக உள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தின் அல்வார் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் மாட்டிறைச்சி விற்பனை செய்ததாக, அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 25 பேர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளது அரசு. அத்துடன் விட்டிருந்தால் பரவாயில்லை எனலாம். ஆனால், அவர்களின் வீடுகளைப் புல்டோசர் மூலம் இடித்துத் தரைமட்டமாக்கியதுடன், அந்தக் கிராமத்தினர் பயிரிட்டிருந்த பயிர்களையும் டிராக்டர் கொண்டு அழித்துள்ளனர். உணவுக் கட்டுப்பாடு என்பது அரசின் கொள்கையாக இருந்தால், அதை மீறுபவர்களைச் சட்டத்தின் துணைகொண்டு தண்டனை பெற்றுத் தரலாம். ஆனால், அவர்களின் அடிப்படை உரிமைகளையே பறிப்பது பாசிச அரசு என்பதற்கான அடையாளம் எனச் சமூக வலைத்தளங்களில் மக்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இதுதான் மத அடிப்படைவாதிகள் இந்தியா முழுவதும் உருவாக்க விரும்பும் ஆட்சி மாடல். ஆனால், அதற்கு எதிராக மக்களின் கல்வி, சமூக வாழ்க்கை, அடிப்படை உரிமை ஆகியவற்றின் மீது பொறுப்புள்ள அரசாக திராவிட மாடல் அரசு திகழ்வதை இந்தியா உணரத் தொடங்கியுள்ளது. அது அரசியல் மாற்றமாக மாறும் நாள் தொலைவில் இல்லை.

## ஃப்ளாஷ்பேக்



### விசாரிப்பும் வாழ்த்தும்!



இளம்பரிதி

1982-ஆம் ஆண்டு நான் என்னுடைய பள்ளிப் படிப்பை முடித்திருந்த நிலையில், தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற என்னுடைய தந்தையுடன் சென்றேன். நேரில் பார்த்ததும் கல்வித் தகுதி குறித்து விசாரித்தார், ‘அடுத்து என்ன செய்யப் போற’ என்றும் விசாரித்து, வாழ்த்தினார். அவருடைய அக்கறையும் வாழ்த்தும் இன்றைக்கும் மறக்க முடியாதவை.

**–வை.இளம்பரிதி, முன்னாள் துணைத்தலைவர், மீனம்பாக்கம் பேரூராட்சி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### தூத்துக்குடி களத்தில் கலைஞர்!

**1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று சென்னையில் தி.மு.க. தொடங்கப்பட்டாலும், அக்டோபர் 17-இல் தான் தமிழ்நாடெங்கும் தொடக்க விழா பொதுக் கூட்டங்கள் நடந்தன. கலைஞர், கோவில்பட்டி, தூத்துக்குடி கூட்டங்களில் கலந்துகொண்டார். அவருக்கு இணையாகச் சென்றவர் தூத்துக்குடி கே.வி.கே.சாமி அவர்கள். பொதுக்கூட்டம், மாநாடு, போராட்டம், சிறை என எதற்கும் தயங்காதவர் சாமி. அவரைத் தீர்த்துக் கட்ட சிலர் திட்டம் போட்டனர். பேரறிஞர் அண்ணா அவரை ‘இரவில் தனியாகப் போகாதே!’ என எச்சரித்தார். ஓர் இரவு கழக அலுவலகத்தில் நண்பர்களுடன் உரையாடிவிட்டு, சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த சாமியை, எதிரிகள் சூழ்ந்துகொண்டு கத்தி, கட்டாரிகளால் குத்திக் கொன்றனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 396




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131